# தனித்தமிழ் வளர்ச்சி



தனித்தமிழ்க் கழகம்,
புதுச்சேரி.

# தனித்தமிழ் வளர்ச்சி

தொகுப்பாசிரியர்

**க. தமிழமல்லன் க. இ., கல். இ.**

*தலைவர், தனித்தமிழ்க் கழகம்*

வெளியீடு :

## தனித்தமிழ்க் கழகம்

168, மாரியம்மன் கோயில் தெரு
தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-605009

முதற்பதிப்பு: தி. பி. 2015, மீனம், 14, (27-3-84)
உரிமை: தனித்தமிழ்க்கழகம், புதுச்சேரி-9

## தனித்தமிழ் இலக்கிய மாநாட்டு வெளியீடு–1

### நூலாக்கக் குறிப்பு



| | | |
|---|---|---|
| நூற்பெயர் | — | தனித்தமிழ் வளர்ச்சி |
| மொழி | — | தமிழ் |
| பதிப்பு | — | முதலாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | — | 27-3-84 |
| தொகுப்பாசிரியர் | — | க. தமிழமல்லன் |
| உரிமை | — | தனித்தமிழ்க்கழகம், புதுச்சேரி-9 |
| தாள் | — | 10. 7 வெள்ளையச்சுத்தாள் |
| அளவு | — | 18 × 12. 5 செ. மீ |
| அச்சகம் | — | நாவல் ஆர்ட் அச்சகம், சென்னை-14 |
| விலை | — | உருபா 8.00 |
| வெளியீடு | — | தனித்தமிழ்க்கழகம், புதுச்சேரி-605009 |
| பொருள் | — | தமிழ் இலக்கியப் படைப்புகளில் தனித்தமிழ் வளர்ச்சிபற்றிய ஆய்வுக் கட்டுரைகள் |
| கிடைக்குமிடம் | — | தனித்தமிழ்க் கழகம், புதுச்சேரி-9 |

# அணிந்துரை

முனைவர் இரா. இளவரசு
தமிழ்ப் பேராசிரியர்
மாநிலக்கல்லூரி, சென்னை 600005

'தனித்தமிழா? அப்படியொன்றிருக்கின்றதா?' எனக் கண்ணை மூடிக் கொண்ட பூனைகள் சில கேட்டன.

'தனித்தமிழ்! தனித்து அமிழ்! தனித்து அமிழப் போகிறார்கள்' எனச் சில நரிகள் நகைத்தன.

'தனித்தமிழில் சிறுகதை எழுத இயலாது, புதினம் புனைய முடியாது எனச் சில காக்கைகள் கணித்தன.

இந்தப் புறக்கணிப்பு, கிண்டல், கணிப்பு முதலியவற்றையெல்லாம் புறந்தள்ளித் தவிர்க்கவியலாதவொன்றாய்த் தனித்தமிழ் நிலைபெற்றுவிட்டது. இதற்கு வேறெங்கும் போய்ச் சான்றைத் தேடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. முன்குறித்த முயற்சிகளில் ஈடுபட்டவர்களே அன்று எழுதிய தமிழையும் இன்று எழுதுகிற தமிழையும் ஒப்பிட்டுப் பார்த்தால் போதும். ஐம்பது ஆண்டுகட்கு முற்பட்ட ஆனந்த விகடன் இதழையும் இப்போதைய ஆனந்தவிகடனையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே உண்மை விளங்கும். தனித்தமிழியத்தார் மனநிறைவு கொள்ளும் அளவு மாற்றம் ஏற்பட்டுவிடவில்லையென்றாலும் கலப்புத்தமிழின் மேலாண்மை கலகலத்துப் போயிருப்பது கண்கூடு.

மொழித்தூய்மை இயக்கம் என்பது மூன்று நான்கு தனிப்பட்ட மாந்தரின் விருப்ப விளைவு அன்று. திட்டமிட்டு ஓரினத்தின் மொழி, கலை, பண்பாட்டுக் கூறுகள் சிதைக்கப்

பட்டிருப்பதை உணர்ந்து அந்த இனம் அச்சிதைவுகளைச் சீர் செய்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளக் கிளர்ந்தெழும் மறுமலர்ச்சி இயக்கத்தின் ஒருபகுதியே மொழித்தூய்மை இயக்கம். ஒட்டுமொத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் காலத் தேவையை உணர்ந்துகொள்ள மறுப்பவர்கள் மக்களால் மறுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது வரலாறு. அறுபத்தேழி லிருந்து தமிழக ஆட்சியாளர்கள் மொழித்தூய்மைக்கு அரணானவர்களாகவே இருந்தாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதை மனங்கொள வேண்டும்.

தனித்தமிழ் நிலைபெற்றதோடு நாளும் கிளைவிரித்து நிழல்பரப்பும் ஆலென வளர்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது இந்தத் 'தனித்தமிழ் வளர்ச்சி' நூல். எழுபத் தெட்டில் புதுவையில் தொடங்கப்பட்ட 'தனித்தமிழ்க் கழகம்', தனித்தமிழியக்க, தனித்தமிழிலக்கிய வரலாற்றுப் பெறுபேறுகளைத் துலக்கிக்காட்டிப் புதிய உரஞ்சேர்க்கும் பணியைத் திறம்படச் செய்துவருகிறது. அப்பணியின் ஒரு பகுதியாக வெளிவரும் இந்நூல் ஆறு கட்டுரைகளைக் கொண்டது,

''தனித்தமிழ் இயக்கத்தினர் புதுமைப் படைப்பிலக்கியத் துறையில் போதிய கருத்துச் செலுத்தவில்லை (நான் மட்டும் விதிவிலக்கு)'' என்னும் அறிவிப்போடு திரு தி. நா. அறிவு ஒளி எழுதியுள்ள 'தனித்தமிழ்ப் புதினங்கள்' எனுங் கட்டுரை மறைமலை அடிகள், தி. நா. அறிவு ஒளி, நீ. தங்கவேலன், இலங்கை அருளர், சிங்கை மா. இளங்கண்ணன் முதலிய பலரின் புதினங்களை மதிப்பிடுகிறது. ''தனித்தமிழ் நடையில் அமையாதவையாயினினும் தமிழின உணர்வுடைய புதினப் படைப்புகளையும் காணல் வேண்டும்'' எனுங் குறிப்போடு திருவாளர்கள் நாரண. துரைக்கண்ணன், அரு இராமநாதன் முதலிய பலரின் படைப்புகளைப் பற்றியும் பேசுகிறது. மறை மலையடிகளின் இரண்டு புதினங்களைப் பற்றிய மதிப்பீடு

காய்தல் உவத்தலற்ற முறையில் அமைந்துள்ளது. அவற்றின் சிறப்புகளைக் குறிப்பிடுவதோடு "சோழர் காலக்கதையில் துப்பாக்கி, பீரங்கி ஆகிய கருவிகள் பயன்படுத்தப்படுவதாக அமைத்தெழுதியமை முரணுடையதாகும்" எனவும் "சில பகுதிகள் துப்பறியும் கதைபோல் அமைந்துள்ளன. மிகை நவிற்சி, இயல்பு இகந்த நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன" எனவும் குறைகளையும் சுட்டிச் செல்வது பாராட்டுக்குரியது. கட்டுரையாளர், தாம் எழுதிய ஆறு தனித்தமிழ்ப் புதினங்களைச் சிறிய அளவில் விளக்கி "இவை குறித்த திறனாய்வும் மதிப்பீடும் ஏனைய அன்பர்களால் ஆற்றப்படவேண்டும். எதிர்காலம் இவைகுறித்த தீர்ப்பை வழங்கக் கூடும்" என விலகிக்கொள்வது குறிப்பிடத்தக்கது. ஈழத் தமிழினப் போராட்டப் புதினமாகிய அருளரின் 'லங்கா ராணி' பற்றி "ஆண்மையும் ஆற்றலுமிக்க உண்மை வரலாற்றுப் புதினம் இது. தமிழர் அறிவை, ஆண்மையை, வாழ்வை இஃது உயர்த்தும். இந்நூல் தமிழரிடை மிகப்பரவவேண்டும். அப்போது தமிழன் தமிழனாவான்" என்று மதிப்பிடுகிறார். சிங்கை மா. இளங்கண்ணனின் 'அலைகள்', "சீனர் பழக்கங்கள், உணவுவகைகள், பழமைப்பற்று, விடாப் பிடிமை" ஆகியவற்றைப் புலப்படுத்துவதைச் சுட்டுகிறார். கட்டுரையின் இறுதிப்பகுதியை இன்னுஞ் செறிவாக எழுதியிருக்கலாம். எனினும் கட்டுரையாளரின் காமஞ்செப்பாது கண்டது மொழியும்' பாங்கு பாராட்டுக்குரியது.

'பாவாணரின் புதுச்சொல்லாக்கம்' எனும் பேராசிரியர் பூங்காவனத்தின் ஆய்வுக்கட்டுரை இந்நூலின் செறிவமைந்த கட்டுரை எனலாம். பாவாணரின் படைப்புகளை ஆய்வதால் விளையும் பன்முக நன்மைகளைத் தொடக்கத்தில் சுட்டிப் பின் புதுச்சொல்லாக்கத்தின் தேவைகள், பாவாணரின் புதுச் சொல்லாக்கம் நிகழிடங்கள், பாவாணரின் சொல்லாக்க நெறிமுறைகள், பாவாணரின் சொல்லாக்கச்செலவு பல

துறைப் புதுச்சொல்லாக்கங்கள் ஆகிய தலைப்புகளில் செய்திகள் அளிக்கப்பட்டுள்ளன. பாவாணர்"நூல், கட்டுரை, பாட்டு, மேடைப் பேச்சு, உரையாடல், கடிதம் ஆகிய அவர் தம் எண்ணவெளிப்பாட்டு வாயில்கள் அனைத்திலும் சொல்லாய்ந்தார்; சொல்லாக்கினார்: சொல்லாராய்ச்சி யின்றி அவரால் எண்ணவும் எழுதவும் பேசவும் இயலாது என்று கூறுமளவிற்கு அவர் அதில் மூழ்கியிருந்தார்" என்னும் கட்டுரையாளர் கருத்து பாவாணரைப் படம்பிடிக்கிறது. தம் கருத்துக்கு அரணாகப் புலவர் வி. பொ. ப அவர்கட்குப் பாவாணர் எழுதிய மடல்களில் நிகழ்ந்த சொல்லாய்வுகளைக் குறித்திருப்பது கட்டுரையாளரின் உழைப்பையும் நுணுகி நோக்குத் திறனையும் புலப்படுத்துவதாகும். பாவாணரின் சொல்லாக்க நெறிமுறைகளை, மீட்டல், புதுக்கல் உரு வாக்கல், மொழி பெயர்த்தல், அயற்சொல் ஆளல் என ஐவகையாகப் பகுத்துச் சான்றுகளுடன் விளக்கிச் செல்வதும், தமது சொல்லாய்வுச் செலவில் பாவாணரே எங்ஙனம் மாற்றம் பெற்று வளர்ந்து வந்துள்ளார் எனப் புலப்படுத்து வதும் பாவாணர் கொடுத்த பலதுறைச் சொல்லாக்கங்களைப் பாகுபடுத்திக் கட்டுரையிறுதியில் பட்டியலிட்டிருப்பதும் பெரிதும் பயன்படுவன. சிறந்த ஆய்வுக்கட்டுரையொன்றை அளித்துள்ள பேராசிரியர் பூங்காவனத்திற்கு நிறைந்த பாராட்டுகள்.

திருவாட்டி சாரதா நம்பி ஆரூரன் அவர்கள் 'நீலாம்பிகை அம்மையாரின் தனித்தமிழ்ப்பணி' எனுங்கட்டுரையில் அம்மையார் வாழ்நாள் முழுதும் தனித்தமிழ் வளர்ச்சிக்காக உழைத்தமையை விளக்குகிறார். தனித்தமிழியக்கத் தோற்றத்தில் அம்மையாரின் இடம், குடும்பத்தில் தனித் தமிழாட்சி, அம்மையாரின் நூல்கள் பற்றிய விளக்கம் முதலியன கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. தமிழைப் பற்றிய வினாக்களுக்கு அம்மையார் அளித்துள்ள விடையாகத்

கட்டுரையில் தரப்பட்டுள்ள பகுதிகள் பயனும் சுவையும் பயப்பன. மறைமலையடிகளின் குடும்பவழி உறவினரான பேராசிரியர் சாரதா நம்பி ஆரூரனிடமிருந்து இன்னும் பல செய்திகளை எதிர்பார்க்கிறேன். இக்கட்டுரை ஓர் அறிமுகக் கட்டுரையாகவே அமைகின்றது.

தனித்தமிழ் வளர்ச்சியில் இதழ்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. அவற்றுள் 'தென்மொழி'க்குரிய இடம் தலைமை சான்றது. தமிழம், மாணாக்கன், அறிவு, கைகாட்டி, முதன்மொழி, தமிழ்ச்சிட்டு, வல்லமை, வேந்தம், நெய்தல், தமிழியக்கம், தமிழ்ச்சுடர் முதலிய பல இதழ்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படவேண்டியவை. பழனியி லிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'தமிழ்ச்சுடர்' எனும் இதழின் தனித்தமிழ்த்தொண்டு திரு பூங்குன்றன் அவர் களால் மதிப்பிடப்படுவதே இந்நூலின் நான்காம் கட்டுரை. இதழின் தோற்ற வரலாறு தொடக்கத்தில் சொல்லப்படு கிறது. கட்டுரைகள், சிறுகதைகள், பாக்கள் என்றாங்கு வெளிவந்த படைப்புகள் பாகுபடுத்தப்பட்டு அவ்வவற்றுள் சிறந்த ஓரிரு படைப்புகளின் பெயர்கள் சுட்டப்படுகின்றன. ஒலிம்பிக்கு விளையாட்டுகள் பற்றிய செய்திகளும் இதழில் வெளிவந்தனவென்பதைக் குறிப்பிடும் இந்தக் கட்டுரையும் ஓர் அறிமுகக் கட்டுரையே.

புதுவை தனித்தமிழ்க்கழகத்தலைவர் தமிழமல்லன் எழுதிய கட்டுரை 'தனித்தமிழில் சிறுகதைகள்' என்பது. இக்கட்டுரை, நூல்கள், இதழ்கள் வாயிலாக வெளிவந்த தனித்தமிழ்ச்சிறுகதைகள் சிலவற்றை மதிப்பிடுகிறது. முற் பகுதியில் சிறுகதையின் இலக்கணம், தனித்தமிழ்ச் சிறு கதைகள் படைப்பாளிகள் பற்றிய விளக்கம் முதலியன இடம் பெறுகின்றன. பிற்பகுதி தனித்தமிழ்ச் சிறுகதைகளின் பொது வான தன்மைகளை நுணுகிநோக்குகின்றது. மேலை நாட்டைப் பின்பற்றிச் சிறுகதை இலக்கணம் எழுதப் பெறக்

கூடாது என்னும் கட்டுரையாளர், எவ்வாறு எழுதப்பெற வேண்டும் என்றுங் கருத்துரைக்கிறார். ''சிறுகதை வளர்ச்சிக்குத்தனித்தமிழ் இதழ்கள் முதன்மையாகச் செயற் பட வேண்டும்'' என்று அறிவுறுத்துவதோடு திருவாளர்கள் மாரி. அறவாழி, தி. நா. அறிவுஒளி, பொன். மணிமொழி, தஞ்சை எழிலன்பன் முதலிய பலர் தனித்தமிழில் சிறிகதைகள் எழுதியுள்ளமையைச் சுட்டி முதல் மூவர் தம் சிறுகதைகளை விதந்து பேசுகிறார். ''சிலர் தனித்தமிழ் இதழ்களுக்கு மட்டும் தூய நடையில் எழுதுவதும் பிற இதழ்களில் கலப்புத் தமிழ் நடையில் எழுதுவதுமாக வழக்கம் கொண்டுள்ளனர். இது மாற வேண்டும்'' என்பது இவர் வேண்டுகோள். இவரின் நுணுகிநோக்குந் திறனைக் கட்டுரையின் பிற்பகுதி அங்கைக் கனியாக்குகிறது. தனித்தமிழ்ச் சிறுகதைகளில் பெரும்பாலும் திருத்தமான நடை காணப்படுதல், உவமை, உருவகம் நிறைந்திருத்தல், தேவைக்குத்தக்கவாறு கொச்சை நடை கையாளப்படுதல், நனவோடை முறையைப் பயன்படுத்தல் முதலிய பல செய்திகள் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப் பட்டுள்ளன. ஆய்வு நோக்கில் திறம்பட எழுதியுள்ள கட்டுரையாளர் பாராட்டுக்குரியவர்.

'தனித்தமிழில் குழந்தை இலக்கியம், என்பது தனித் தமிழ்க் கழகச் செயலர் அரிமாப்பாண்டியன் அளிக்கும் கட்டுரை. 'குழந்தை இலக்கியம்' எனத் தலைப்பிருந்தாலும் அதன் ஒரு பகுதியாகிய பாட்டிலக்கியம் பற்றியே கட்டுரை பேசுகின்றது. ஆய்வுக்காக கொண்ட பாவலர்களின் நூல்களை 60 அகவையைத் தாண்டிய எட்டாம் நிலை படித்த முதியவர் ஒருவரிடம், ஆசிரியர் ஒருவரிடம், கூத்தாடும் கலைஞர் ஒருவரிடம் கொடுத்தும், பாட்டி ஒருவரிடம் பாடிக் காண் பித்தும், பின் பாக்களைப்பற்றி அவர்கள் கூறிய கூற்றின் அடிப்படையில் எழுதிய ஒன்றே இது'' எனத் தாம் மேற் கொண்ட முயற்சியைக் கட்டுரையாளர் குறிப்பிடுகிறார்,

அம்முயற்சியின் பயன்கள் கட்டுரையில் தென்பட்டிருக்க வேண்டும் என்பதே நம் விழைவு. கட்டுரையில் பாவேந்தரின் குழந்தைப் பாடல்கள் விரிவாகப் பேசப்படுகின்றன. பாவலர்கள் வாணிதாசன், பெருஞ்சித்திரனார், ம. இலெ. தங்கப்பா முதலிய பலரின் பாடல்களும் குறிப்பிடப்படு கின்றன. திருச்சி வானொலிக்குக் "கவிமணி" தேசிக விநாயகர் அளித்த நேருரைப்பகுதி, பாவாணரின் 'சிறுவர் பாட்டு' பற்றிய குறிப்பு ஆகிய அரிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. எதிரணியினர் எழுப்பும் வினாக்களைக் கட்டுரையாளரே எழுப்பி விடையளிக்கிறார். தம்கட்டுரையை மற்றவர் எப்படி மதிப்பிடக்கூடும் என்று எண்ணிப்பார்க் கிறார். குறிப்பிடத்தக்க முயற்சியுடைய இக்கட்டுரையாளர் எதுகை மோனைகளைத் தேவையின்றிச் சிறைப்படுத்தும் செயற்கை நடையைத் தவிர்க்கலாம்.

இந்நூல் தனித்தமிழ் வளர்ச்சியைக் கணித்துக்காட்டும் பணியின் சிறுதொடக்கமே. இதன் தொடர்ச்சியாகப் பல நூல்கள் பயணம் செய்யும் என்பதை நான் அறிவேன் புதுவை தனித்தமிழ்க்கழகம் இடையறவின்றித் தனித்தமிழ் வளர்ச்சி வினைப்பாடுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பது மகிழ்ந்து வரவேற்றுப் பாராட்டித் துணை நிற்க வேண்டிய பணியாகும். அப்பணி வெல்க, வெல்க வெனப் பன்முறை வாழ்த்துகிறேன்.

சென்னை
4-4-84

இரா. இளவரசு

# முன்னுரை

'தனித்தமிழ் வளர்ச்சி' எனும் இந்நூல் வெளியீட்டின் வாயிலாகத் தனித்தமிழ் இயக்கம் மேலும் பொலிவு பெறுகிறது. கடந்த பல்லாண்டுகளாகப் பல்வேறு துறைகளிலும் தனித்தமிழ் ஆக்கப்பணிகள் சீராக நடைபெற்றுவந்துள்ளன. ஆய்வாளர்கள் அவற்றைக் கவனித்து வெளிப்படுத்தவோ முறையாகப் பதிவு செய்யவோ தவறி விட்டனர். இப்பக்கம் அவர்கள் பார்வை திரும்புவதே இல்லை. விலக்கானவர் சிலரே.

நேற்றுத்தோன்றிய புத்தியக்க முயற்சிகள் கூடப் பல்கலைக் கழகங்களின் ஆய்வேட்டுப் பொருளாகவும் பாடநூற் பொருளாகவும் 'இலக்கியக் கழக' (சாகித்திய அகாதமி) மதிப்புப் பொருளாகவும் ஆகியுள்ளன. ஆனால் தனித்தமிழ் முயற்சிகள் செப்பமானதாகவும் உயிர் இயக்கத் தேவையாகவும் இருந்த போதிலும் இதைப் பொருட்படுத்த முன்வருவார் இலர். தனித்தமிழ் இயக்கத்தாரும் இதுபற்றி முன்பிருந்தே எண்ணவில்லை. மண்ணில் ஊன்றப் பெறாத மரத்தில் மாங்கனி பறிக்கக் கனவு காண்பது தமிழகத்தார்க்கு வழக்கமாகிப் போய்விட்டது. படைப்பிலக்கியம், ஆய்வு, படைப்பாளர்களை வளர்ப்பது போன்ற முயற்சிகளில் அதிகம் ஈடுபடாமல், மாறாக அவற்றைக் குறை கூறிப் புறக்கணிப்பது இயக்க வளர்ச்சிக்கு எவ்வகையிலும் பயன்படாது. ஒருவரை ஒருவர் சாடிக் கொண்டதும், பார்ப்பனரைத் தாக்கியதும் வக்கணை பேசியதும் சிலர்க்குப் போற்றியிசைத்துமே தனித்தமிழ் ஆக்கங்கள் எனப் பிற்காலத்தில் ஆய்வாளர்கள் முடிவு கூறும் வண்ணம் தனித்தமிழ் இயக்கம் ஆகிவிடுமோ எனும் அச்சம் தனித்தமிழ் அன்பர்களுக்கு இப்போ

தேனும் ஏற்பட்டாகவேண்டும். எனவே தனித்தமிழ்க் கழகம் ஆய்வுக்கும் இம்முயற்சியை மேற்கொண்டது.

17-12-83 29-'-84, 19-2-84 ஆகிய நாள்களில் ஆய்வரங்கங்கள் நடத்தப்பெற்றன. தொடக்கமுதல் இவ்வியக்கத்தில் இருந்து உழைத்துவரும் அறிஞர்கள் தனித்தமிழ் வளர்ச்சியை வெளிப்படுத்தும் பொறுப்பை ஏற்று ஆய்வுக் கட்டுரைகள் வழங்கினர். இதிலும் கடுமையாக உழைக்கவேண்டியிருந்தது. அறிஞர்களின் ஒத்துழைப்பைக் கடுமையாக முயன்றே பெற வேண்டியிருந்தது. சிலரின் ஒத்துழைப்புக் கிடைக்காமலும் போய்விட்டது. ஆதலால் சிலதுறை ஆய்வுக் கட்டுரைகள் கிடைத்தில.

மேற்சொன்ன ஆய்வரங்கக் கட்டுரைகள் இருவகையாகப் பிரிக்கப் பெற்று ஒரு பிரிவு 'தனித்தமிழ் வளர்ச்சி'யாக இங்குத் தரப்பெறுகிறது. பல நூல்களையும் இதழ்களில் வந்த ஆக்கங்களையும் ஆய்வுசெய்து தனித்தமிழ் வளர்ச்சியை அறிஞர்கள் மிக்க ஆர்வத்துடனும் அக்கறையுடனும் வெளிப்படுத்தியுள்ளனர். எதிர்காலத்தில் இம்முயற்சி பெருகி மேலுஞ் செப்பமாகி வெற்றி பெறும்.

ஆயவரங்குகள் வெற்றிபெற உழைத்த தனித்தமிழ்க் கழகத்தோழர்கள் அனைவரும் பாராட்டிற்குரியவர்கள் இந்நூல் வெளிவருவதில் மிகவும் ஒத்துழைத்த செயலர் சீனு. அரிமாப் பாண்டியன், பொருளர் முத்து சேரன், மெய்ப்புத் திருத்தியுதவிய ஆனை. பன்னீர்ச் செல்வம் அணிந்துரை வழங்கிய முனைவர் இரா. இளவரசு, அழகுற அச்சிட்ட நாவல் அச்சகத் தார் ஆகியோர்க்கும் கட்டுரைகளை வழங்கிய அறிஞர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தி.பி. 2015, மீனம், 14

(27-3-84) க தமிழமல்லன்

# உள்ளுறை

அணிந்துரை

முனைவர் இரா. இளவரசு — iii

முன்னுரை

க. தமிழமல்லன் — x

1. தனித்தமிழ்ப் புதினங்கள் — 1
திரு. நா. அறிவு ஒளி

2. பாவாணரின் புதுச் சொல்லாக்கம்
கு. பூங்காவனம் — 27

3. நீலாம்பிகை அம்மையாரின் தனித்தமிழ்ப்பணி
சாரதா நம்பி ஆரூரன் — 48

4. தமிழ்ச்சுடரின் தனித்தமிழ்த் தொண்டு
பூங்குன்றன் — 62

5. தனித்தமிழில் சிறுகதைகள்
க. தமிழமல்லன் — 70

6. தனித்தமிழில் குழந்தை இலக்கியம்
சீனு அரிமாப் பாண்டியன் — 86

# தனித்தமிழ்ப் புதினங்கள்

**தி. நா. அறிவுஒளி., க.மு., கல்.இ.,**
தமிழாசிரியர், திருத்தணிகை

*''நாளை வாழ்வை நமதாக்க*
*நாளும் முயல்வோம் திறமாக!*
*வேளைக் கேற்ற வினைசெய்வோம்;*
*நாளை வரலாறு எழுதிடுவோம்!''*

**புறவுரை:** 1973 ஆம் ஆண்டு 'தமிழம்' என்னும் இலக்கியத் திங்கள் இதழ் மலர்ந்தது; ஐந்து ஆண்டுகள் மணங் கமழ்ந்தது. ஆருயிர் நண்பர், பல்கலைச் செல்வர். திரு. செ. பன்னீர் செல்வம் அவர்கள் சென்னையிலிருந்து தமிழத்தை வெளியிட்டார். இரண்டு தனித் தமிழ்ப் புதினங்களைத் 'தமிழம்' தொடர்கதைகளாக வெளி யிட்டது. அருமை நண்பர் பன்னீர் செல்வம் அவர்களைப் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன்; நன்றியுணர்த்துகிறேன்.

**பாராட்டுரை:** தமிழ் வரலாற்றில் புதுச்சேரியின் இடமும் பங்கும் சிறப்புடையதாகும். ஆக்க நோக்குடன் பல தமிழ் அமைப்புகள் அருந்தமிழ்ப்பணியாற்றுவது பாராட்டற்பால தாகும்.

தீந்தமிழ் நலனுக்கென்று திட்டம் தீட்டிச் செயலாற்றும் தனித்தமிழ்க் கழகம் இலக்கிய மாநாட்டினை நிகழ்த்தி வரலாறு படைத்துள்ளமையை மிகவும் பாராட்டி வாழ்த்து கிறேன். அருமை நண்பர், தனித்தமிழ்க்கழகத் தலைவர் திரு க. தமிழமல்லன் அவர்கள் வாழ்க! உறுப்பினர், பொறுப் பினர், உறுதுணையாவார் யாவரும் வாழ்க! வாழ்க!

## தனித்தமிழ் — விளக்கம்

'தமிழ்' என்னுஞ் சொல் பண்டைக்கால முதலே தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும், தமிழ் நாட்டையும், அகப்பொருள் இலக்கியத்தையும், அதன் இலக்கணத்தையும், தமிழ்ச் சால்பினையும், அறங்களையும் குறித்தது.

இங்குக் குறித்த எல்லாப் பொருளுணர்ச்சிகளுடன் 'தமிழ்' வழங்குவதால், 'தனித்தமிழ்' என்னுஞ் சொல்லும் அவ்வாறே வழங்கும்.

மொழித் தூய்மை குறிக்கும் சிறு பணிக்கு மட்டும் 'தனித்தமிழ்' என்னுஞ் சொல்லைப் பயன்கொள்வது பொருந்தாது.

தமிழர், தமிழ், தமிழகம், தமிழ்ப்பண்பாடு, சான்றாண்மை, நாகரிகம், அறம், கலையொழுகலாறுகள், மரபுகள் யாவையும் ஒரு சேரவும், தனித்தனியும் உணர்த்தும் 'அருங்கலைச் சொல்லாகத் 'தனித்தமிழ்' என்பது விரிந்து பரந்த தெளிந்த பொருளில் வழங்குவது தமிழர் கடனாகும்.

'தனித்தமிழ்ப் புதினம்' என்னுஞ் சொல்லாட்சி மேற்குறித்த விரிந்த பொருளுணர்த்துவதாகவே இங்கு ஆளப்படுகிறது.

"தமிழின நலன் சாராத தமிழ்"

"தமிழ் நலம் பேணாத தமிழினம்"—என்னும் இரு நிலையும் நன்மை பயவாது.

'தமிழுக்குத் தொண்டு' செய்தல் என்பது தமிழருக்குத் தொண்டு செய்தல் என்னுங் குறிக்கோளுடையதே. தமிழருக்கு நலஞ்செய்தல் என்பது தமிழுக்கு ஆக்கஞ் செய்தலையே குறிக்கும். இதனைத் தெளிந்தால் தமிழகம் சிறக்கும்.

# பொருளுரை

## கதைக்கலை

'கதைகள் மக்களின் காதலிகள்!' (பொது மக்கள் என்னுஞ்சொல் இழிவுப்பொருள் குறிப்பது. இதனை எல்லாரும் கூசாமல் ஆள்கின்றனர்! 'பொது மகளிர்' என்பது எத்தகு பொருள் உடையது? அது போன்றது இது. ஆதலின் 'மக்கள்' எனக் குறித்தலே சாலும்.)

'புதினம் என்னுங் கவர்ச்சிக் கன்னி இளைஞர் முதல் முதியோர் வரை யாவரையும் மயக்கும் பேராற்றல் வாய்ந் தவள் ஆவாள்.

சிறகுகள் இல்லாமற் பிறந்த மக்கள் கற்பனைச் சிறகுகள் கொண்டு பறக்கலாயினர். கதைக் கலை பிறந்தது.

இலக்கியம் என்னும் அரண்மனையின் கடைக்கால் கதையே. பலவேறு பெயர்களையும் புனைவுகளையும் பூண்டு கதை உலகை ஆள்கிறது. கதையின் ஆற்றல் பெரிது; மிகப் பெரிது.

ஒருநாட்டை, ஓர் இனத்தைக் கதையால் அடிமையாக்க லாம்; வீழ்த்தலாம்; முடக்கலாம். வரலாற்றில் இதற்குப் பல சான்றுகள் உள.

ஓர் இனத்தினையும் நாட்டினையும் உயர்த்த, மலர்த்த கதைக்கலை ஆக்கக் கருவியாகவும் உதவும்.

கல்லார் நெஞ்சிலும் கருத்தை, உணர்வைப் பதிக்க உதவுவது கதைக் கலையே.

நாடோடிக் கதைகள், கதைப்பாடல்கள் இனப் பண் பாட்டினையும், நாட்டியல்பையும் தெளிவாக உணர்த்தும் முதற் பொருளாகும்.

மக்களிடை மலரும் கதை மக்கள் வாய் மொழியிலக்கிய மாகச் செவி வழி வளர்ந்து மரபுக் கதைகளாக அழியா வாழ்வு பெறுகின்றன.

சிற்றூர்க்கதைகள், மதனகாமராசன், விக்கிரமாதித்தன், தெனாலிராமன், பஞ்சதந்திரக்கதைகள், இயேசு, புத்தர் முதலியோரின் உவமை விளக்கக் கதைகள் நெடுவாழ்வு பெற்றுக் 'கொள்கை பரப்பும் பணி' யாற்றுகின்றன.

சமயம் 'கதைகளால்' பிழைக்கிறது. 'கதை பண்ணுவதாலேயே' சமயத்துறையினர் பிழைக்கின்றனர்!

கதையென்னுங் கலை தமிழகத்தின் பழஞ் செல்வமாகும்.

''பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்''

உரைவகை நடையில் அமைந்த கதை நூல்கள் (தொல். பொருள்:173) தொல்காப்பியர் காலத்துக்கும் முன்னே வழங்கின.

தொல்காப்பியர் குறிக்கும், தொன்மை, தோல், வனப்புகள், புலன், விருந்து, அங்கதங்கள், பிசி ஆகியன 'கதை' தழுவியவையேயாகும்.

தொல்காப்பிய உரைகளிற் காணும் கதைகள் நாட்டு வழக்கினவாகலாம்.

புதினம்: இன்று 'புதினம்' என வழங்குஞ் சொல், தொல்காப்பியம் சுட்டும் 'விருந்து வகைக்குப் பொருளால் நிகரானதுதான். ஆயினும், இரண்டுக்கும் வடிவினால் வேறுபாடு உண்டு.

மேனாட்டு இலக்கிய அறிமுகத்தினால் பற்பல புது இலக்கிய வடிவங்களும் பாகுபாடுகளும் தமிழில் கிளைத்தன. பிறமொழி இலக்கிய உறவினால் சிறுகதை, நெடுங்கதை, புதினம் முதலியவை வாய்த்தன.

மக்கள் பற்றுக் குரியவையாய்ச் சிறுகதையும் புதினமும் உலகைப் பேராட்சி செய்கின்றன.

கல்லாரும் பேரறிவு இல்லாரும் பல்லோராய் அமைந்த நந்தமிழ் நாட்டில், கதைகள்தாம் மக்களுக்குத் துணையாகும். அவற்றின் மீதே தமிழர்க்கு ஆர்வமும் விருப்பமும் சூழும்.

அன்பு மலர்ச்சி-பண்பு மலர்ச்சி-தொண்டு மலர்ச்சிகளை மக்கள் நெஞ்சில் தோற்றுவிப்பது புதினமே.

அன்பால் இணைதல், ஆர்வமிகப் பணியாற்றுதல், பிறரைப் புரிந்து கொள்ளுதல், விட்டுக் கொடுத்தல், ஒத்துழைத்தல், நல்லன தெளிதல், தெளிந்து போற்றுதல்' அல்லன கடிந்தொதுக்குதல், முதலிய 'வளர்ச்சி நிலை மன மதிப்புகளை' மக்கள் ஏற்று ஒழுகப்புதினம் காதலியின் நிலையிலிருந்து கற்பிக்கிறது.

மனநலமும் மனமலர்ச்சியும் உலகமலர்ச்சியும் புதின வழி விளைகிறது.

வீடு நெருஞ்சிக் காடாக ஆதல் கூடாது; குடும்பம் அன்புச்சோலை; பண்புப்பூங்கா, அருட்சுனை, பரிவு அருவி காதல் மருந்தகம் ஆக்கும் மந்திரக் கலை புதினமே!

மக்களோடு நெருங்கி யுறவு கொள்ளாத எந்தக் கொள்கையும்,இயக்கமும், நெறியும்வெல்லாது நிலைத்து நில்லாது.

மக்களின் அன்புக்குரிய கலை வடிவங்களை அறிஞர் கைப்பற்றி அதன்வழி கருத்தைப் பரப்புவதே எளிய முறையாகும்.

மக்களுக்காக மக்கள் வாழ்க்கையை விளக்கும், ஆராயும், மலரச் செய்யும் இலக்கிய வடிவம் புதினம். புதினம் அறிஞர்க்கென அமைந்ததன்று.

அன்பின்மை, அயன்மை, புறக்கணிப்பு, வெறுப்பு, காழ்ப்பு, அழுக்காறு, பகைமை, இகல், உட்பகை, ஒதுங்கல் - ஒதுக்குதல் முதலிய முரண் நிலைகள் மக்கள் உள்ளத்தில் ஓங்கிவளர்கின்றன.

பிறருக்குத் திட்டமிட்டுத் தீங்கும் துன்பமும் செய்யும் கயமை நாள்தோறும் வளர்ந்து வரும் காலம் இது.

பண்பு வீழ்ச்சி, மக்கள் மதிப்பு வீழ்ச்சி, அன்பின் அழிவு, மக்களுணர்ச்சிக்குரிய மதிப்பின்மை, நாகரிகக் கேடு முதலிய அழுகல் நோய்கள் மாந்தர் நெஞ்சில் மிடைந்துள்ளன.

பிறர்நலம் பேணும் உணர்வு மலர்ச்சி, பண்பாட்டு முதிர்ச்சி மக்களிடம் அரும்பி மலர வேண்டும் எனத் தோன்றியது புதினம்.

குமுகாயப் போராட்டங்கள், நாட்டுரிமைப் போர்கள், இனவேற்றுமைச் சிக்கல்கள், வாழ்க்கை நெருக்கடிகள், சட்டங்களின் கெடுபிடிகள், உயிர்ப் போராட்டச் சிக்கல்கள், உணர்ச்சிக் குமுறல்கள் ஆகிய சூடேறி எரியும் (எரிக்கும்!) எந்தச் சிக்கலும் 'புதினப்படு பொருளாய்' அமையும்.

மாந்தனுக்கும் மாந்தனுக்கும், மாந்தனுக்கும் மன்பதைக்கும், மாந்தனுக்கும் கொள்கைக்கும், மாந்தனுக்கும் மனத்திற்கும் உடலால், உள்ளத்தால், அறிவால், பண்பால், சூழலால், அகச்சான்றால் முரண்கள் தோன்றும்.

இத்தகைய முரண்களை ஆராய்ந்து, அவை தோன்றும் அடிப்படைகளையறிந்து அவற்றால் விளையும் விளைவுகளைத் தெளிந்து, அம்முரண்களை நீக்கும் வழி முறைகள் ஆகியவற்றைப் புதினம் ஆய்ந்துணர்த்தும்.

புதினத்தில் பதின்பாகுபாடுகள்-கூறுகள் - அமையலாம்.

1. கதை (நிகழ்ச்சிக் கோவை; செயற்பின்னல்)
2. புதின நோக்கு
3. கதைக் கட்டுமானம் (முறை)
4. உண்மை போல்வதாதல் (likeness to truth)
5. கதை உயிர்ப்பு
6. முரண்

7. எதிர்பாராமை (திடீர்த்திருப்பம், அவாவூட்டல்)
8. கதைமாந்தர் இயல்பு/பண்பு வளர்ச்சி தளர்ச்சிகள்
9. பின்னணி (அ) சூழல் விளக்கம்
10. நடை

கதையமைப்பில் ஒழுங்கும் முறை வைப்பும் சூழல்தகவும் அமைதல் வேண்டும். கதை உருவம், கதை நிகழ்முறை எழுதுமுறை என்னும் மூன்று அடிப்படைகளைக் கொண்டு புதினங்களைப் பல்வேறு வகைப்படுத்துவர்.

1. குமுகாயப் புதினம் 2. குடும்பப் புதினம்
3. வரலாற்றுப் புதினம் 4. நடப்பியல் புதினம்
5. மிகைநவிற்சிப் புதினம் 6. அறிவியல் புதினம்
7. மெய்யறிவுப் புதினம் 8. அங்கதப் புதினம்
9. உளவியற் புதினம் 10. நகைச்சுவைப் புதினம்

எனப் பல வகையினவாய் விரியும்.

மக்களை மிகக் கவர்பவை மூவகைப் பொருள் உடையன என்பர்.

1. காதற் புதினம் 2. துப்பறியும் புதினம் 3. வீரப் புதினம்.

ஆய்வார் மனப்பான்மைக்கும் காலப்போக்கிற்கும் ஏற்ப பாகுபாடுகள் மாறும்.

தமிழில் வேதநாயகர் 'பிரதாப முதலியார் சரித்திரம், எழுதி இவ்வடிவத்தை அறிமுகப் படுத்தினார்.

இலங்கையில் பொன்னம்பலனார் 'சதாசிவ லீலா சரித்திரம்' என்னும் புதினத்தை அகவல் யாப்பு வடிவில் எழுதினார்.

இத்தாலி, பிரஞ்சுப் புதினங்களில் கதைக்கூறு மிக இன்றியமையாததாகப் போற்றப்படும் 'கதையின் சிறப்பே புதின வெற்றி' என ஒரு கலை நுட்ப நூற்பா வடிக்கலாம்!

புதினக் கதை நேருக்குநேராக எடுத்தியம்பல் சிறப்பாகும் காலவரன்முறை முரணாமல் கதை நிகழ்ச்சிப் பின்னல் செம்மையாயமைதல் வேண்டும்.

எல்லார்க்கும் புரியும் எளிய நடையில் இலக்கிய அழகும் கனிந்து சுவை மிகுமாறு நயம் செழிக்கப் புதினம் புனைதல் விரும்பத் தக்கதாகும்.

புதினம் புனையுங் கலையின் அருமைப்பாடு எத்தகையது என எழுதிப்பார்ப்பவர்க்கே புரியும்!

கதை எழுதுவது எளிய செயலன்று. புதினம் எழுத அரிய உழைப்பும் பெரிய முயற்சியும் நறிய ஆராய்ச்சியும் பல்கலைத் தேர்ச்சியும் வாழ்க்கைப்பட்டறிவும் வேண்டும்.

இலக்கிய வடிவங்களுள் 'புதினம்' திறன்மிக்கது; நுட்ப மானது; மக்களை ஈர்க்கும் ஆற்றல் வாய்ந்தது.

தனித் தமிழ் இயக்கத்தினர் புதுமைப்படைப்பிலக்கியத் துறையில் போதிய கருத்துச் செலுத்தவில்லை. (நான் மட்டும் விலக்கு!)

சிறுகதை, புதினம், நாடகம், குறும்புதினம் முதலிய துறைகளில் சிலர் மட்டும் ஈடுபட்டனர். அம்முயற்சியின் அளவும், மதிப்பும் குறித்து ஆய்வோம்.

## 1. மறைமலையடிகளார்—குமுதவல்லி:

தனித் தமிழ் இயக்கம் தோற்றுவித்த மறைமலையடி களார் தனித்தமிழ்ப் புதின முதல்வராக விளங்குகிறார்.

அடிகள் 1916 இல் தனித்தமிழ் இயக்கங் கண்டார். அதற்கு முன்னரே கி. பி. 1911 இல் 'குமுதவல்லி அல்லது நாக நாட்டிளவரசி' புதினத்தை—முதற்பதிப்பை—வெளி யிட்டார். இவ்வெளியீட்டுக்கு முன் 'அறிவுக்கடல்' திங்கள் இதழில் இப்புதினம் தொடர்கதையாக வெளியாயிற்று.

[1]1942 இல் இரண்டாம் பதிப்பும் 1960 இல் மூன்றாம் பதிப்பும், 1966 இல் நான்காம் பதிப்பும் வெளியாயின.

'இரையினால்டுசு' என்னும் ஆங்கிலக் கதையாசிரியரின் 'இலைலா' என்னும் புதினத்தைத் தழுவி 'குமுதவல்லி'யை மறைமலையார் எழுதினார். இப்புதினம் முற்றுப் பெறாத நூல் ஆகும். முதல் இரண்டு பாகங்கள் மட்டும் எழுதப் பட்டுள்ளது.

குமுதவல்லி பதினாறு அதிகாரங்களும் 265 பக்கங்களும் கொண்டது.

---

1. நூல்முகவுரையில் புதினத்தின் இன்றியமையாமை யை மிகவும் மறை மலையடிகளார் வலியுறுத்தி யுள்ளார்.

"The art of fiction has in modern times become a potent means in the hands of educated men to awaken the finer instincts of man, so that this awakening of one's own beter part might itself serve to correct his mistakes and render him a useful and helping member of society."

குமுதவல்லி—(Preface—P. IX)

1. மக்களின் இனிய, உயரிய உள்ளுணர்வுகளைவிழித் தெழச்செய்வது புதினம்.
2. மக்களின் குற்றங்குறைகளைத் திருத்திக் கொள்ளப் பணி புரிவது புதினம்.
3. குமுகாயத்திற்குப் பயனும் உதவியும் உள்ள மக் களாக, நம் நாட்டு மக்கள் வாழப் பயன்படுகிறது புதினம்—அடிகளாரின் கருத்துகள் உணர்த்தும் உண்மைகள் இவை.

"நாகரிகமடைந்த அனைத்து நாடுகளிலும் பெரும் பாலும் புதினம் மிக விரைவாகவும் சீராகவும் வளர்ந்து வந்துள்ளது. ஆயினும் இங்கு இது இன்னமும் குழந்தை நிலை யிலே உள்ளது." (ஷை: P. X)

கதை: மலைய நாட்டில் 'நல்லான்' என்னும் கள்வன் வழிப்பறி செய்து வாழ்ந்தான். அவன் மனைவி மீனாம்பாள் அழகி. நாகநாட்டு இளவரசி குமுதவல்லியும் புத்த சமயத் தினன் நீலலோசனனும் பிறர் அறியா வண்ணம் நீலகிரிக்குச் செலவு சென்றனர். இவர்கள் வழிச்செலவைத் தடுக்க நல்லா னும் மீனாவும் முயன்றனர். பல இடையூறுகளைக் கடந்து நீலலோசனனும் குமுதவல்லியும் செல்வர் மனோகரரைச் சந்தித்துத் தம்பிறப்பு வளர்ப்பு மறைதிறவுகளை யறிந்தனர். நீலலோசனனும் குமுதவல்லியும் மணக்க இசைந்தனர்; நாக நாட்டரசும் அவர்க்கு உரியதானது.

படிப்பவர் ஆர்வத்தை இறுதிவரை ஈர்க்கும்படி கதையைத் திறமாக ஆசிரியர் எழுதியுள்ளார்.

## தனித்தமிழ்ப் புதினமா?

மறைமலையடிகளார் கி. பி. 1916 ஆம் ஆண்டில் தனித் தமிழ்க் கொள்கையை உருவாக்கி இயக்கமாக அமைத்தார். அதற்கு முன்னர் 'குமுதவல்லி, எழுதப்பட்டது. கி. பி. 1911 இல் இக்கதை நூல் வடிவம் பெற்றது. ஆகவே, இதனைத் தனித்தமிழ்க் கொள்கை அமைவதற்கு முன்னர் தோன்றிய தனித்தமிழ்ப் புதினம் எனலாம்.

[2] இந்நூற்பெயரும், கதைமாந்தருள் பலர் பெயரும் அயன்மொழிச் சொற்களேயாகும்.

---

2. குமுதவல்லி (தலைவன்) நீலலோசனன் (தலைவன், மீனாம்பாள், நரசிங்கவரும் சோழன், சந்திரன்) கேசரிவீரன், வியாக்கிர வீரன், மரகதம், சுந்தராம் பாள், ஞானாம்பாள், மனோகரர். சாக்கியதர்மன் முதலியவை பிறமொழிப் பெயர்கள் ஆகும்.

[3]இப்புதினத்தில் பதினாறு பிறமொழிச் சொற்கள் மட்டுமே உள்ளன.

'உரோசா' வை 'நிலத்தாமரைப்பூ' என்றும், திராட்சையை'க் 'கொடிமுந்திரிப்பழம்' என்றும் தூயதமிழில் வழங்கியுள்ளார் அடிகள்.

மிகக்குறைந்த அளவில் பிறமொழிச் சொற்கலப்பிருப்பது பெரும் பிழையாகாது. அதனால் இந் நூலினைத் தனித் தமிழ்ப்புதினம் அன்று என்று புறக்கணித்தல் இயலாது.

அடிகளார் "இன்றியமையாது வேண்டப்பட்டாலன்றித் தமிழிற் பிற சொற்களைப் புகுத்தல் நிரம்பவும் பிழைபாடு உடைத்து" என்றும்,

"தமிழிற் பயன்படும் நூல்கள் எழுதும் அறிஞர் எல்லாரும் அயல் மொழிச் சொற்களைத் தம்மால் இயன்ற மட்டும் விலக்கித் தூய தமிழிலேயே எழுதப் பழகுவாராயின், அதனால் நம் செந்தமிழ் மொழி வளம் மிகப் பல்கித்துலங்குவதோடு, அதனைத் துலக்கும் அவர்க்கும் அழியாப் புகழும் அறமும் உண்டாமென்க" என்றும் எழுதியுள்ளார்.

ஓரிரு பிறமொழிச் சொற் கலப்பால் பெரும் பிழையமையாது எனத் தெளியலாம்.

---

3. புதல்வி (ப!129) திகில் (131) மோதிரம் (113) நேசம் (114) பாசாங்கு (82) இரமசான் (124, 125, 126) சாம்பிராணி (154) மேசை (188) அம்பர் (154) குலாப் பூவின் அத்தர் (155) பண்டிகை (127) சுலுத்தான் (124 விதவை (116) இலட்சக்கணக்கான (128) புனித மாதவன் (235) சாக்கு (292) ஆகியவையாம். தென்மொழி (சுவடி 1. ஓலை:4-தி. பி. 1994-வைகாசி, 1963 மே இதழ் ப. 71)

மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், "தொல்காப்பியத்திலுள்ள வடசொற்களும் இருபதிற்கு மேற்பட்டவையல்ல. அந்நூலின் விரிவை நோக்கும் போது அவை பொருட்படுத்தத் தக்கன. வாகா இருப்பாணியுள்ள மரநாற்காலியும் 'மரநாற்காலி' யென்றே சொல்லப்படுவது போல், ஒரு சில வடசொற்களுள்ள தொல்காப்பியமும் தனித்தமிழ் நூல் என்றே கொள்ளப்படும்'' என்று எழுதினார்.

ஆகவே, குமுதவல்லியும் தனித்தமிழ்ப் புதினம் எனக் கொள்வது குறையன்று.

சொல்லாட்சி: இந்நூலில் 'கிருதா' என்பதற்குக் 'கன்ன மீசை' (10) என்றும் 'கருமித்தனம்' என்பதற்குப் 'பிசுனத் தனம்' (115) என்றும், 'ஒப்பந்தம்' என்பதற்குப் 'பொருத்தனை' (233) என்றும், வாக்குறுதி, என்பதற்குச் 'சொல்லுறுதி', (241) என்றும், அருமை வாய்ந்த சொல்லாட்சிகளை அடிகளார் படைத்துள்ளார்.

மேலும், முகமீசை (10), மசங்கற் பொழுது (மாலை) குதிரைச்சாரி, (126) படிமானம் (151) படங்கு (206) நிலை வரம் (239) திடுகூறாய் (252) சாய்ங்காலம் (123) பயன்படுத்துக் கொண்டிருப்பது (144) முதலிய நறுஞ் சொல்லாட்சிகளை ஆண்டுள்ளார்.

கருத்துக்கள். மறைமலையடிகளார் இப்புதினத்தில், வாழ்வுக்கு உதவும் வளமார் கருத்துகளை ஆங்காங்குப் பெய்துள்ளார்.

1. தீமையும் இடரும் வரும்முன் பாதிவழியிற் சென்றே அவற்றை எதிர் கொள்ள ஓடாமல், அவை வரும்போது எதிர்வது தக்கது. (112)

2. நாம் மிகவும் பாதுகாவலாய் இருக்கின்றோம் என்று நினைத்திருக்கும் போதே நாம் உண்மையில் இடர்களாற் சூழப்பட்டிருக்கும் வகை இந்த உலகத்தில் எப்படி நேர்கிறது பாருங்கள்! (120)

3. யாரிடத்தும் திறப்பாகப் பேசலாகாதென்றும், வெளிக்கு நண்பரைப் போற் பூண்ட கோலத்கில் எல்லாம் ஒளிப்பான பகைவனொருவன் மறைந்திருக்கக் கூடுமென நினைந்தே நடக்க வேண்டுமென்றும் ஏற்கனவே தீர்மானஞ் செய்து கொண்டாள். (150).

4. தீவினைக்கு எதிராய் மருத்துவனுடைய திறமை போராட மாட்டாது. எது நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும்.

5. ஒருவரைப் புகழ்ந்து பேசுவது எனக்கு இயற்கை அன்று; ஆனாலும் உண்மையைச் சொல்லுவது எனக்கு முதன்மையாய் இருக்கின்றது. (123)

6. எவ்வளவு நன்மை செய்யக் கூடுமோ அவ்வளவுஞ் செய்திலராயின் தாஞ் செலுத்தும் அத்தனை வல்லமையும் என்ன பயனுக்கு? (128)

**நுண்பார்வை:** கதை மாந்தர் புறத்தோற்றத்தினையும் அகத்தோற்றத்தினையும் கைவல் ஓவியன் நுட்பமாக 'உயிரோவியந்' தீட்டினாற் போல்'சொல்லோவியமாக' அடிகளார் தீட்டிய திறம் வியத்தற்குரியதாகும்.

கதைமாந்தர் குறித்த சூழலில் குறித்த நிலையில் இயங்கும் முறையினை விளக்குவதும், ஆராய்வதும் புதின ஆசிரியர் பணியாகும்.

அடிகளார் உளவியல் ஆய்வுடன் சூழ் நிலையியல் ஆய்வும் செய்து பண்போவியங்களை விளக்குகிறார். ஓர் இடம் காண்போம்.

மீனாம்பாள் கள்வன் நல்லானின் காதல் மனைவி அவன் களவுத் தொழிலுக்கு அவள் உடன்பட்டு உதவுகிறாள். இவள் நல்ல குடியிற் பிறந்தவள். ஆயினும், தீமைக்குத் துணையானது ஏன்? என வினாவும் எழுப்பி அடிகள் விடையும் கூறியுள்ளார். 'மீனா நல்லானிடம் கொண்ட காதலே பொருட்டு (காரணம்) ஆகும்.

இத்தகு நுண்பார்வை ஆசிரியரின் தனித்தன்மையைச் சுட்டுவதாகும்,

மலையாள அழகில் ஈடுபாடு: மறைமலையடிகளார் இளமையில் சேரநாட்டிற் சிலகாலம் சென்றிருந்து மீண்டவர். அதனால் அந்நாட்டுச் சூழல், இயற்கையெழில், மலையாள மக்கள் பற்றி அவருக்குப் 'பற்றுடன் சார்ந்த எழுத்து' உருவாக உதவியது போலும்! அவர் எழுதுகிறார்.

''இம் மலைய நாட்டிலுள்ள மக்கள் எல்லாரும் அழகாய் இருப்பர். ஆண்மக்கள் எல்லாரும் நீண்டுயர்ந்து ஒடிந்து விழுவது போன்ற அழகிய உடம்பும் பார்வைக்கு நல்ல தோற்றமும் உடையராய் இருப்பர்; பெண்மக்கள் எல்லாருந் தம் உடம்பின் மெல்லிய தெளிவான சாயலானும், உறுப்புகளின் மிகத்திருந்திய அமைப்பானும், அவ்வுறுப்புகளெல்லாம் ஒரே ஒழுங்காய்க் கனிந்த அழகுடைமையானும் உலகமெங்கும் புகழ்பெற்றுச் சிறக்கின்றார்கள்'' (4)

## சில பழக்கங்கள்

'மேசைமேற் பரப்பி உணவு உண்ணும்' முறையை இந்நூலிற் சில இடங்களில் (188) குறித்துள்ளார்!

கதை நிகழும் காலத்திற்கு இது பொருந்தியதாகத் தெரியவில்லை!

மலைய நாட்டு மலைப்பகுதியில் பனிப் பாறைகளும் உறைபனிகளும் நிறைந்திருப்பதாகக் குறிப்பது பொருந்தியதாகத் தெரியவில்லை.

வரலாற்று வழு: குமுதவல்லி கதை சோழர்காலத்தின தாகக் காட்டியுள்ளார் அடிகள். அவரே' 'கி. பி. கூஅகு இளவேனிற் காலத்தில்'' (4) என எழுதியுள்ளார். கிருத்துவக் காலக்குறிப்பு சோழர் காலக்கதைக்கு முரணியதன்றோ?

'கி.பி' எனக்குறித்த பின் 'இளவேனில்' எனப் பருவப் பெயர் குறிப்பது மெல்லிய நகையைத் தோற்றுவிக்கிறது.

சோழர்காலக்கதையில் துப்பாக்கி, பீரங்கி ஆகிய கருவிகள் பயன்படுத்தப்படுவதாக அமைத்தெழுதியமை முரணுடையதாகும்.

சமயச்சார்பு: அடிகளார் சிவனியச் சமயப் பற்றாளர் என்பது உலகறிந்த செய்தி. இக்கதையின் உட்கோள்களில் சிவனியசமயச் சார்பு உறைப்பாக ஊடுருவியுள்ளது.

புத்த சமயத்தினனான நீலலோசனன் கதையின் இறுதிப் பகுதியில் 'சிவநெறி'க்கு மாறிவிட்டான் எனச் 'சமயமாற்றம் நடப்பதை ஊக்கமூட்டி எழுதியுள்ளார்.

'சமயமாற்றம்' பற்றிக் குறித்த முதற் புதினம் 'குமுத வல்லி' ஆகலாம்.

இத்தகு சமயச்சார்பு இலக்கியப் பண்புக்கு ஊறு செய் வதாகும்.

முகமதிய சமயத்தில் இரமசான் விழாக்காலத்தில் மலை யாள அழகிகளை விலைக்கு வாங்கியும் கவர்ந்தும் சென்று, துருக்கி, கான்சுடாண்டிநோபிள் முதலிய மேனாட்டு நகர் களில் உள்ள அரசர்-செல்வர்களுக்கு அடிமையாக அல்லது வைப்பாட்டியாக விற்றுப் பிழைக்கும் கொடிய பழக்கம் இருந்ததை அம்பலம் ஆக்குகிறது இப்புதினம்-புதினம் காலக் கண்ணாடியென்னும் இலக்கணத்திற்குக் 'குமுதவல்லி' இலக் கியமாக அமைகிறது.

அண்மைக் காலத்திலும் மலையாள மாதர் வெளிநாடு களுக்கு 'ஏற்றுமதி' செய்யப்பட்ட செய்திகள் நாம் அறிந் தனவே.

சமயச்சடங்கு என்னும் பெயர்கூறி மகளிரை அடிமைகள் ஆக்கி, அயல் நாடுகளுக்குக் கடத்திச் சென்று, விற்கும் கொடுமையைச் சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர். இதை வன்மையாகக் கண்டித்திருக்கலாம்.

பொருளியல் ஏற்றத்தாழ்வு: பொருளியல் ஏற்றத்தாழ்வு களை ஆங்காங்குப் புதினத்தில் ஆசிரியர் சுட்டிக்காட்டிச் செல்கிறார் ''இளம் பெருமாட்டியின் உடையினும் விலை குறைந்தே உடுத்திருந்தார்களாயினும்...'' (10)என ஆசிரியர் எழுதுமிடம் போலும் வேறு சிலவும் உள.

குமுதவல்லி புதின இலக்கியத் தகுதியில் மிகமேன்மை யான இடம்பெறலரிது. அதற்கு அடிப்படை இதுமேனாட்டுத் தழுவல் ஆவதே. சுவையார்வம் ஊட்டும் கதைப்போக்கு உடையது; குமுகாயப் பயன்பாடு நோக்கில் சற்றே பிற்பட்ட தேயாகும்.

## கோகிலாம்பாள் கடிதங்கள்

மறைமலையடிகளாரின் இரண்டாம் புதினம் 'கோகிலாம் பாள் கடிதங்கள்' ஆகும். இந்நூலை 'அறிவுக்கடல்' இதழில் பத்தாண்டுக்கால இடைவெளியில் ஆசிரியர் எழுதினார் இது கி.பி. 1921-இல் நூலாக வெளிவந்தது.

இதன் பெயரும் வடமொழிச் சொல்லாக அமைந் துள்ளது! தனித்தமிழ்க் கொள்கை தோன்றிய பின் எழுதப் பட்ட புதினம் இது. இந்நூலிலும் பிறமொழிச் சொற்கள் விரவியுள்ளன.

இந்நூல் கதைமாந்தர் 'தனித்தமிழ்' அறிவற்றவரா யிருப்பதால் அடிகளார் அச்சொற்களை இடையிடையமைத் தார் போலும்! பிற இடங்களில் தூய செழுந்தமிழ் நடை யமைந்துள்ளது.

தமிழில் வெளி வந்த புதினங்களுள் கோகிலாம்பாள் கடிதங்கள் தனித்தன்மையும் தலைமையும் வாய்ந்ததாகும்.

தமிழகத்திலுள்ள பல்வேறு முரண்பாடுகள், சாதிச் சிக்கல், கலப்புத் திருமணம் முதலிய உண்மை வாழ்வியற் கருப்பொருளைக் கொண்டது இப்புதினம். நம்மறிவைச் செம்மையாக்கும் ஒப்பற்ற புரட்சிப் புதினம் ஆகும்.

வாய்மையியல் நெறியிற் பெரும்பான்மைக் கதைப்பகுதி அமைந்துள்ளது.

சில பகுதிகள் துப்பறியுங் கதைபோல் அமைந்துள்ளன; மிகை நவிற்சி, இயல்பு இகந்த நிகழ்ச்சிகள் இடம் பெற் றுள்ளன.

திரு. இரிச்சர்டுசன் என்பவர் ஆங்கிலத்தில் 'பாமெலா என்னும் முதற் புதினத்தை எழுதினார். அது முப்பது முடங் கல்களின் இயன்றது. இந்த முறையை ஏற்று அடிகள் 'கோகிலாம்பாள் கடிதங்கள்' புதினத்தை உருவாக்கினார் என்பர்.

இருதலைமுறைகளின் கதை இந்நூலில் உணர்த்தப் பட்டுள்ளது. கமலா—பாரசிகச் செல்வர் காதலும், போராட்டமும், திருமணமும் முதல் தலைமுறைக் கதையாம் கோகிலாம்பாள், தெய்வநாயகம் ஆகியோரின் காதலும் திருமணமும் இரண்டாந் தலைமுறைக் கதையாகும்.

பம்பாய்ப் பகுதியில் கள்ளர் குகை, அங்கு நிகழும் கதை நிகழ்ச்சிகள் மக்களுக்கு மிகச் சுவையாகவும் கவர்ச்சியாகவும் இருக்கும்.

இப்புதினத்தில் வருங் கள்வன் செல்வரிடம் கொள்ளை யிட்டு ஏழைகளுக்கு உதவும்இரக்க நெறியுடையவன்ஆவான்.

''வியாபாரம், உத்தியோகம், முதலான தொழில்களைச் செய்து, பணஞ்சம்பாதிக்கிறவர்கள் போல் வெளிக்குக்காட்டி ஏழை எளியவர்களின் பொருளைப் பகற்கொள்ளையிட்டுப் பணஞ் சேர்த்து வைத்துக் கொண்டு இரக்கமின்றிச் சுகமாய்க் காலங் கழிக்கும் பிரபுக்கள் வீடுகளில் நுழைந்து இரவிற் கொள்ளையிடுவது தான் அவனுக்கும் வழக்கம் (220) என அடிகள் எழுதுமிடத்தில் இச்செய்தியைக் காணலாம்.

இந்தப் புதினத்தில் கதைமாந்தர் படைப்பு மிக மிக அருமைப்பாடு உடையது. மாந்தர் உளவியல், எண்ண வோட்டம் ஆகியவற்றை இரவி வருமாவின் வண்ண ஓவிய மாய்த் தீட்டிக் காட்டும் கலையாற்றில் எண்ணங் கவர்வ தாகும்.

சாதியை எதிர்த்தும், கலப்புத் திருமணத்தை வற்புறுத்தி யும் தமிழில் தோன்றிய முதல் குமுகாயச் சீர்திருத்தப் புரட்சிப் புதினம் கோகிலாம்பாள் கடிதங்களேயாகும். இது மக்கள் பண்பாட்டை வளர்க்கும் உறவுப்பேரிலக்கியமாம்.

அறிவுக்குவிருந்தாகவும் உணர்ச்சிக்கு மருந்தாகவும் வாழ்வுக்கு ஒளியூட்டுவதாகவும் அமையும் 'கோகிலாம்பாள் கடிதங்கள்' புதினத்திற்கு திரு. தி.நா. அறிவு ஒளி விரிவான திறனாய்வு எழுதியுள்ளார்.

---

1. 'கோகிலாம்பாள் கடிதங்கள்-திறனாய்வு' என்னும் நூல் பேரறிஞர் அண்ணாவின் 'காஞ்சி' இதழில் 31-8-1975(மலர் 12-இதழ் 7-தி.வ. 2006 ஆவணி,15) முதல் 2-11-1975 (மலர் 12-இதழ் 16 தி.வ. 2006. ஐப்பசி 16) வரை கிழமைதோறும் தொடர்கட்டுரை யாக வெளிவந்தது. 'செந்தமிழ்ச்செல்வி' இதழில் (சிலம்பு 57-பரல்கள் -4,5 திவ. 20 கஉ, கார்த்திகை, மார்கழி-Dec & Jan) 'இலக்கிய விருந்து' என்னுந் தலைப்பில் திறனாய்வும் வெளிவந்தது.

## தி. நா. அறிவு ஒளியின் புதினங்கள்

தனித் தமிழில் படைப்பிலக்கியம் எழுத இயலாது என்பார் கூற்றினை வீழ்த்தி மிகப்பல படைப்பிலக்கியங்களை உருவாக்கியவர் தி.நா. அறிவு ஒளி ஆவார்.

1. ஞாலம் 1954இல் 'ஆனந்தபோதினி' இதழில் 'ஞாலம்' தொடர்கதையாக வெளியாயிற்று. உலக நோக்குடைய திருக்குறட் கருத்துகளை உள்ளீடாகக் கொண்டு புனைந்த புதினம் இது. திருக்குறள் கருத்துப் பரப்புதல் நோக்கில் எழுதப் பெற்ற இப்புதினம் கதை மாந்தர் பெயருட்பட யாவும் தனித் தமிழில் இயன்றதாகும்.

2. 1-8 1964 முதல் 1-10-1964 வரை பிரசண்ட விகடன்' திங்கள் ஈரிதழில் தி.நா. அறிவு ஒளி 'கலையழகன்' என்னும் புதினத்தை எழுதினார். ஓவியர் வாழ்வும், வெறி மிக்க ஓவியக் கலையுணர்வும், காதலும் கலந்த படைப்பு இது.

3. 9-7-1972 முதல் சில ஆண்டுகள் வரை 'காஞ்சி, இதழில் தி நா. அறிவு ஒளி 'மெல்லிய காதல்' புதினம் வளர் கதையாக வெளிவந்தது. தனித்தமிழில் வெளியான 'பெரிய புதினம்' இது. வாய்மையியல் நெறியில் நடுநிலைக் குடும்ப ஓவியமாகத் தீட்டப் பெற்றது. நம் தமிழினமாந்தரின் பல நிலைப் போராட்ட வாழ்வை விளக்கும் குமுகாய ஓவியம் இப்புதினம்.

இதில் வரும் 'கொக்கு' 'பாலு' ஆகியோர் நம் வாழ்வில் நாடோறும் குறுக்கிடக் கூடியவராக உணரலாம்!

'முகிலன்' என்னும் அருமையான பண்போவியம் திறமை யான படைப்பாகும்.

வெள்ளிவீதி, செல்வி என்னும் தமிழ்ப் பெண்களின் இயல்பு நிறை பண்போவிய ஆக்கம் சீர்மை சான்றதாகும்.

4. 1-2-1973 முதல் சில ஆண்டுகள் வரை ஆருயிர் நண்பர் திரு. செ, பன்னீர் செல்வம், நடத்திய 'தமிழம்' திங்கள் இதழில் 'கனிமொழியின் காதல்' வெளிவந்தது. தமிழிசைவளம்' இசைக் கலைஞர் வாழ்வு, நாடகத்துறைப் பட்டறிவுகள் குறித்த காதற்புதினம் இது. கற்பனைவளமும் கலைநலமுங் கனிந்த சொற்சுவை பொருட்சுவை மெய்ப் பாட்டுச் சுவைபொலியும் இன்பப் புதினம் ஆகும்.

5. 1982இல் 'உணர்வுகள் அழிவதில்லை' என்னும் வரலாற்றுப் புதினம் வெளிவந்துள்ளது.

6. 1984இல் 'விடுதலைப் புலிகள்' வரலாற்றுப் புதினம். வெளிவந்துள்ளது.

இவை குறித்த திறனாய்வும் மதிப்பீடும் ஏனைய அன்பர்களால் ஆற்றப்படவேண்டும். எதிர் காலம் இவை குறித்த தீர்ப்பை வழங்கக் கூடும்.

## நீ. தங்கவேலன் எழுதிய 'வான்மதியின் திருமணம்'

1-9-1973 முதல் 'தமிழம்' இதழில் நீ.தங்கவேலன் 'வான்மதியின் திருமணம்' என்னும் தொடர் கதையினை எழுதினார்,

திரு. தங்கவேலன் தமிழார்வமும் இலக்கியச் சுவை யுணர்வும், திருக்குறட் புலமையும் மிக்கவர்.

'வான்மதியின் திருமணம்' இன்பியல் கதை; சிறு தொடர்களால் இழுமென் அருவியொழுக்குப்போல் இயங் கும் தன்மையது; நிகழ்ச்சிகள் வாய்மையியல் நெறியில் எளிதாக இயங்குமாறு எழுதியுள்ளார்.

கதை: பண்டுவர் மலையப்பர் மகள் வான்மதி அவள் அருள் நம்பியைக் காதலித்தாள்; ஆனால் யாருக்கும் தன் உள்ளக் கருத்தை வெளியிடவில்லை. எழிலரசு இ.ஆ.ப. என்பவனுக்கு வான்மதியை மணமுடிக்கப் பெற்றோர் முடிவு

செய்தனர். வான்மதி போராடினாள். மணநாளுக்கு முன்னிரவு வான்மதி வீட்டைவிட்டு வெளியேறித் தொடர் வண்டியேறிப் பம்பாய் நோக்கினாள். அவ்வண்டியில் பாரிவேள் குடும்பம் இவள் நிலையறிந்து, தம்முடன் புனா விற்கு அழைத்துச் சென்றனர். வான்மதியின் தங்கை நில வொளியை எழிலரசுக்கு மணமுடித்தனர். வான்மதியைத் தேடினர். பின் குடும்பத்தினர் இணைந்தனர்.

கதையில் பெருஞ்சிக்கலோ, குமுகாயப் போராட்டமோ கதைப் பின்னலோ இல்லை. நடுநிலைக் குடும்ப வாழ்வின் எளிய இனிய ஓவியம் இது.

படிக்கச் சுவையூட்டும் காதற்புதினம் இது: இனிய நடை யில் அமைந்தது; மராத்திக் குடும்பம் அதன் அழகன்புணர்வு கற்போர் நெஞ்சைக் கவரும்.

## அருளர் எழுதிய 'லங்கா ராணி'

திரு. அருளர் என்னும் திறன் மிக்க ஆசிரியர் 256 பக்கங் களில் 'லங்காராணி' என்னும் வீறுமிக்க புதினத்தைத் தமிழுக்கு அளித்துள்ளார்.

கண்ணீரும் செந்நீரும் வியர்வையுந் தமிழுணர்வுங் கலந்தெழுதப்பட்ட இப்புதினம் தமிழுக்கு ஒரு புதுவரவா யாகும்.

1977ஆம் ஆண்டில் இலங்கையில் நிகழ்ந்த தமிழினப் படுகொலையை விளக்கிப் புனைந்த இனவரலாற்று உணர்ச்சிப் பெருங்கதை இது, வரிக்கு வரி எழுச்சி! அறிவு! துள்ளல்!

இலங்கைத் தமிழின வரலாற்றுப் பின்னணி விளக்கம் மிகுபயனுடையதாகும்.

கதை: 'லங்காராணி' என்னுங் கப்பலில் கொழும்பி லிருந்து யாழ்ப்பாணத்திற்கு 'அகதிகள்' ஏற்றி அனுப்பினர். அவர்களின் கப்பல் வாழ்வும் இளைஞர் இயக்க நிலையும் உணர்ச்சிக் களஞ்சியமாகப் புதினத்தில் விளக்கப்பட்டுள்ளது.

சிங்களரின் பொய்மை, கயமை, ஏமாற்று, இரண்டகம், திட்டமிட்ட தமிழர் எதிர்ப்பு-ஒழிப்பு நிகழ்ச்சிகள், தமிழின அழிப்புப் பணிகள், சட்டம் ஆட்சிகளைக்கொண்டு வெளிப் படையாக நிகழ்த்திய கொடுமைகளை உள்ளத்திரையில் ஓவியமாக்கும் வண்ணம் தெள்ளத் தெளிவாக அருளர் தீட்டி யுள்ளார். சில இடங்களைப் படிக்கும்போது நெஞ்சுபதறும் குருதிகொதிக்கும்; சிவகுமாரனின் வீரப்போர் நிகழ்ச்சிகள்; நம்மை வியப்பின் எல்லைக்கே கொண்டு சேர்க்கும்!

சிங்களப் பெண்களும் தமிழர் வீடுகளில் கொள்ளையிட்ட செய்தி கண்ணீரைப் பெருக்கும்.

''இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்கள் வறுமையைப் போக்கிச் செல்வத்தை வளர்க்கவும், தங்கள் மொழியை, கலாச்சாரத்தை பாரம்பரியத்தைப் பேணிக்காத்து வளர்க்க வும் தங்கள் நிலத்தில் ஒரு அரசை நிறுவவிரும்புகிறார்கள் (112)

''இந்த நாட்டில் உள்ள தமிழர்கள் கட்சியென்றும், சாதி யென்றும், சமயமென்றும், ஊரென்றும், தெருவென்றும், பிரிந்து சொந்த மண்ணில் எதையும் சாதிக்க முடியாமல் அந்நிய மண்ணில் கையேந்தி நிற்கிறார்கள் இதையொரு முடிவுக்குக் கொண்டு வர தமிழனுக்கு ஒரு அரசு வேண்டும்'' (112)

என 'வேட்டிகட்டிய இளைஞன்' பேசுகிறான்! அவ னிடம் அவன் கருத்திடம் நாம் மதிப்புவைக்கிறோம்.

ஆண்மையும் ஆற்றலு மிக்க உண்மை வரலாற்றுப் புதினம் இது. தமிழர் அறிவை, ஆண்மையை வாழ்வை இஃது

உயர்த்தும். இந்நூல் தமிழரிடை மிகப் பரவவேண்டும். அப்போது தமிழன், தமிழனாவான்!

## சிங்கை மா. இளங்கண்ணன் 'அலைகள்'

சிங்கப்பூரினர் மா. இளங்கண்ணன் 218 பக்கங்களில் 35 இயல்களில் 'அலைகள்' புதினத்தை அழகாக வரைந்துள்ளார் அலைகளில் ஆடுவதில் அனைவருக்கும் இன்பந்தானே!

சிங்கப்பூர் சூழ்நிலைக் கதை தமிழர்க்குப் புதுமையானதும்; ஆர்வமூட்டுவதுமன்றோ!

தமிழ் இளைஞன் மதியரசும் சீன அழகிலெய்குவாவும் காதலித்தனர். இரு குடும்பங்களிலும் எதிர்ப்பு! அதைமீறிக் காதலர் மணந்தனர்! பல துயர்கள் சூழ்ந்து இறுதியில் விலகின. மதியழகன் என்னுந்தீயவன் லெய்குவா, தாமரை ஆகிய இளம் பெண்களுக்கு இடையூறு தந்து மருட்டிப் பணம் பிடுங்கி வந்தான். அவன் கொடுமைதீர, மதியும் லெய்குவாவும் நலமெய்துகின்றனர்.

லெய்குவாவின் பெற்றோர் ஆச்சோங், பீகுவே தமக்கை தமையன் உறுப்பினர் தமிழுக்குப் புதுக்கதைமாந்தர் ஆவர். உழைத்துத் தழைப்பவர் சீனர் என்பதைக் கதை வழி உணர்த்தும் ஆசிரியர் திறம் பாராட்டத் தக்கதாகும்.

லெய்குவாவை 'மூலிகை மணத்தென்றல்' எனப் புதுமுறையில் மதியரசு கொஞ்சுவது சுவையானது.

சீனர் பழக்கங்கள், உணவு வகைகள், பழமைப்பற்று, விடாப்பிடிமை ஆகியன கதை வழி புலப்படுகிறது.

மதியின் தங்கை நன்மலர் நெஞ்சைக்கவரும் உறுப்பினள் ஆவாள்!

வெளிநாடுகளில் வாழுந்தமிழர், பிற இனத்தாருடன் கலந்து வாழும்போது இனக்கலப்பு நேரும். அந்நிலையை

'அலைகள்' அறிமுகப்படுத்துகிறது. லெய்குவா 'திருக்குறள்' கருத்தை ஆங்காங்கு முழங்கும் புதுமை அவள் 'தமிழர் மருமகள்' ஆகும் தகுதிக்குரியவளாக ஆசிரியர் 'கனவு கண்டு' தீட்டியுள்ளார்.

அளவான கதை, இனிய கற்பனை, சுவை மிகும் உரையாடல், தெளிந்த நடை அமைந்த வெற்றிப் புதினம் 'அலைகள்'!

முத்தமிழ்ப் புலமை முற்றிய பரிதிமாற் கலைஞர் மதிவாணன் புதினம் எழுதினார். கடுமையான நடையால் இக்கதை மக்களிடமிருந்து ஒதுங்கிவிட்டது.

தொடக்ககாலக் கதையாசிரியருள் புலவர் எசு. எசு. அருணகிரிநாதர் குறிப்பிடத்தக்கவராவார்.

## மு. வரதராசனார்

'புதினக்கலை வேந்தர்' புகழ்சால் அறிஞர் மு.வ.வெற்றி மிக்க நற்றமிழ்ப் புதினங்கள் பல படைத்தார். கருத்துடைய கதையில் இயல்பான தமிழ் வளம் இவர் புதினங்களில் பொலியும்.

திருக்குறட் கருத்துகளும், கழகத்தமிழிலக்கியச் சுவையும் இவரது புதினங்களில் குரவைக் கூத்தாடும்.

அந்த நாள், மலர்விழி, அல்லி, பெற்றமனம், கயமை, கள்ளோ? காவியமோ? என்பவை தமிழின் தலைசிறந்த கோபுரப் புதினங்களாகும். அகல்விளக்கு, வாடாமலர், மண் குடிசை, குழந்தை ஆகியவை புதினச் சுடர் விளக்குகளாம். தமிழர் நலம்பேணும் குமுகாயக்-குடும்ப மறுமலர்ச்சிப் புதினங்கள் தமிழுக்கு அணிசேர்ப்பன 'அல்லி' தனித்தன்மை வாய்ந்த புதினமாகும். வெற்றி மிக்க புதினங்கள் தந்த பெற்றி மிக்க பேராசிரியர். மு. வ. பெருமைப்படைப்பாளர் ஆவார்,

தனித்தமிழ் நடையில் அமையாதவையாயினும் தமிழின உணர்வுடைய புதினப் படைப்புகளையும் நாம் காணல் வேண்டும்.

பேராசிரியர் நாரண-துரைக்கண்ணன் புதுமையிலக்கிய முன்னோடியாவார். மறைமலையடிகளாரின் மாணாக்கர் இவர். இவர் இலக்கியத்துறையில் ஒரு 'பண்ணன்' ஆவார்! குமுகாயச் சீர்திருத்தப் புதினங்கள் பல படைத்தார். இலக்கியத் தகுதி மிக்க 'உயிரோவியம்' புகழ் மிக்க ஆக்கமாகும். மு. வ. இவரை 'வாழ்க்கைக் கலைஞர்' எனப்போற்றியுள்ளார். எழுத்துவேந்தர் நாரண-துரைக்கண்ணனின் நடுத் தெரு நாராயணன்' புதினத்தை அனைத்துத் தமிழரும் படிக்கவேண்டும்.

கலைஞர் அரு. இராமநாதன் வரலாற்றுப் புதினவேந்தர் ஆவார். வீரபாண்டியன் மனைவி, அசோகன் காதலி என்னும் ஒப்பற்ற படைப்புகள் தமிழுக்கு அணியாவனவாம். 'வீரபாண்டியன் மனைவி'யைத் தொடர் கதையாகத் 'தேவி' கிழமை இதழ் வெளியிடுவது பாராட்டத் தக்கதாகும்.

மலேசிய எழுத்தாளர் திரு. மா. இராமையாவின் 'எதிர் வீடு' சிறந்த புதினமாகும்.

'தேவி' கிழமையிதழில் திரு. சு. சமுத்திரம் எழுதிய 'தாழம்பூவே! தங்க நிலாவே!' ஈழத்தமிழர் படுகொலைச் சூழலைப் பின்னணியாகக் கொண்ட புதினமாகும்.

தமிழரைத் தட்டியெழுப்பிய புதினங்களைப் படைத்தவருள் பேரறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி, திரு. டி. கே. சீனிவாசன், விந்தன், கு. அழகிரிசாமி, டி, செல்வராசன், இராதாமணாளன், கோமகள், ர. சண்முக சுந்தரம், கோவி மணிசேகரன், மாரி. அறவாழி, தா.ஏ.ஞான மூர்த்தி,...முதலியோர் குறிப்பிடத்தக்கவராவர்,

தனித்தமிழ்ப் புதினங்கள் நன்கு மலர்ந்துள்ளன. இனி வளரும் வாய்ப்பைத் தமிழர் உருவாக்கவேண்டும்- தமிழ் நலத்தையும், தமிழர் நலத்தையும் தமிழக வளத்தையும் நெஞ்சில் உண்மையாகப் போற்றி எழுதும் ஆசிரியர்களைப் பாராட்டி, வரவேற்று வாழ்த்தும் மனத்திட்பமும் திறனும் தமிழ் மக்களிடம் செம்மையாக மலரவேண்டும்.

களைகளுக்கு நீர்பாய்ச்சிப் பயிரைப் பாழாக்கும் மடமையிலிருந்து தமிழர் விடுதலை பெற வேண்டும்.

இக்கட்டுரை ஒருபுனையா ஓவியமே; இனி எழுதவிருக்கும் ஆய்வுகளுக்குப் பாயிரமே. இஃது முழுமையான ஆய்வாகாது.

தமிழர் ஆக்கவூக்கம் மிகுமாயின், 'தனித்தமிழ்ப் புதினங்கள்' மலரும்! செழிக்கும்! உலக இலக்கியத் தகுதியையும் அடையும்.

# பாவாணரின் புதுச்சொல்லாக்கம்

கு. பூங்காவனம் அறி. மு
தமிழ்விரிவுரையாளர், பெங்களூர்

தமிழ் வளர்ச்சி குறித்த எண்ணம் தமிழரிடையே தோன்றியுள்ள தெனினும் ஆங்கிலத்தைப் போல அளவிறந்த சொற்களைக் கடன்பெற்று வளர்க்க வேண்டும் என்பார் சிலர்; அளவுடன் கடன் பெற்று வளர்க்க வேண்டும் என்பார் சிலர்; புதுக் கருத்தமைவுகளுக்கும் அறிவியற் புத்தாக்கங் களுக்கும் மட்டிலும் கடன் பெறிற் போதுமென்பார் சிலர்; கடன் பெறாது தமிழ்ச் சொல்வளத்தைப் பெருக்க வேண்டு மென்பார் சிலர். இவ்வாறு தமிழ் வளர்ச்சியிற் கருத்துடை யாரும் பல்வேறு பிரிவினராய் உளர்.

தமிழைத் தமிழாக வழங்கவேண்டும் என்னும் எண்ண முடையார்க்குப் பல அமைப்புக்களும் இயக்கங்களும் உள்ளன. கடன் பெற வேண்டுமென்பார்க்கு அத்தகைய அமைப்பியக் கங்கள் உளவாகக் கூறமுடியவில்லை.

தமிழைத் தனித் தன்மையுடன் வழங்க வேண்டும் என்ற உணர்வுடன், அறிவாக்கமாகவும் மலர்விக்கும் இத்தகைய கருத்தரங்குகளும் மாநாடுகளும் ஆகிய முயற்சிகள் வர வேற்கத்தக்கன; மகிழ்ச்சியூட்டுவன,

ஒரு மொழியின் தனித்தன்மை குன்றாத பல்துறை வளர்ச்சியை நாடுங்கால் அதன் பல்துறைச் சொல்லாக்கம் அடிப்படையாகவும் இன்றியமையாமலும் தேவைப்படுவ தாகும். தம் வாணாள் முழுமையும் சொல்லாராய்ச்சி மொழி யாராய்ச்சி புதுச்சொல்லாக்கம் ஆகிய துறைகளில் கடலில்

மூழ்கி முத்தெடுப்பார்போல முனைந்து முயன்று உழைத்தவர் மொழிநூன் மூதறிஞர் தேவநேயப் பாவாணர், அவ்வாறு அவர் திரட்டிக்குவித்தவை தமிழ் மொழிக்குக் கிடைத்த அரிய கருவூலங்களாக உள்ளன. அவை பற்றிய ஆய்வு பன்முக நன்மை விளைப்பது.

1. பல்துறைத் தமிழ் வளர்ச்சி கருதியுழைப்பாரை ஆற்றுப்படுத்தி ஊக்கமூட்டுதல்
2. தமிழால் முடியும் என்பதை நிலைநாட்டுதல்
3. தமிழ்ச் சொல்வளம் பெருகத் துணையாதல்

ஆகிய நன்மைகள் இவ்வாய்வினால் விளையும்

## புதுச்சொல்லாக்கத்தின் தேவைகள்

ஒரு மொழியில் புதுச் சொற்களை ஆக்கிக் கொள்ள வேண்டிய தேவைகள் பல. அதுவும் மொழியின் தனித் தன்மையுடனும் தன்னியல்புடனும் அம்மொழியைப் பேணிக் காத்து வளர்க்க விரும்பின் சொல்லாக்கத் தேவைகள் இன்னும் மிகுகின்றன. அத்தேவைகளாவன:

1. உலகம் சுருங்கியும் நாகரிகப் பெருக்கம் விரிந்தும் மிகுந்தும் நிற்கும் இந்நாளில் புதுக் கருத்தையும் புதுப் புனைவையும் மொழியின் வழி உணர்த்தவும் வெளிப்படுத்தவும் வேண்டியுள்ளது.

(எ-டு)

தமிழில் இல்லாத Skyjacking என்னும் கருத்தை ஊர்தி மடக்கம் என்றும் தமிழ்நாட்டிற் புதிதாய்ப் புகுத்தப் பட்ட கல்விமுறையாகிய Higher Secondary என்பதை 'மேனிலை' என்றும், Plus 2 என்பதை 'மேலிரண்டு' என்றும் கூற வேண்டியுள்ளது.

2. தமிழ் மொழியைப் போல வேண்டாத வடசொல்லும் பிறசொல்லும் புகுந்து நிற்கும் ஒரு மொழியில் ஏற்ற

விடத்திற் பழஞ்சொல்லாலும் இயலாதபோது புதுச் சொல்லாலும் அவ்விடத்தை நிறைவு செய்ய வேண்டி யுள்ளது.

| எ-டு | தமிழ்ச்சொல் | வடசொல் |
|---|---|---|
| | அந்தளகம் | கவசம் |
| | ஆமணத்தி | கோரோசனை |
| | காசறை | கத்தூரி |
| | இருதலை | பரஸ்பரம் |

இவ்வாறு வழக்கு வீழ்ந்த பழஞ்சொல்லை மீட்கவும்,

| பிறசொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| Blaek-out | இருட்டடிப்பு |
| தந்தி | தொலைவரி |
| தூரதர்ஷன் | தொலைக்காட்சி |
| கம்யூனிசம் | பொதுவுடைமை |

எனப் புதுச் சொல்லை ஆக்கவும் வேண்டியுள்ளது.

## பாவாணரின் புதுச்சொல்லாக்கம் நிகழிடங்கள்

இந்திமொழிக் கலைச் சொல்லாக்கத்திற்காக ஒரு பெருங் குழு செந்தண நிலைப்பாட் (Air Conditioned) டலுவலகத் தில் அமர்ந்து இந்திய அரசின் தடையில்லாப் பொருளுத வியும் சலுகையும் பெற்றுப் பணியாற்றி வருகின்றது. ஆயின் அக்குழு படைத்து வழங்கும் சொற்கள்.

1. வடமொழி ஆங்கிலம் முதலான பிற சொற்களையே நாகரி எழுத்தில் எழுதி இந்திச் சொற்களாகக்காட்டல்

2. எம் மொழிச் சொல்லென்று காண முடியாதவாறும், எக் கரணியமும் பற்றாத இடுகுறியாகவும் அமைதல்

3. இந்திமொழியில் வல்லுநர்க்கும் பொருள் விளங்காப் புதிருடைத்தாயிருத்தல்

என்னும் முப்பெருங் குறைகளையுடையனவாய்உள்ளன.

பாவாணர் சொல்லாராய்ச்சி யுழைப்பிற்கு, மாரிக்காலத் திலன்றிப் பிற பருவங்களில் பணிசெய்ய வியலாவாறு அவர் தம் உடல் நொய்ம்மையாய் இருந்தமையால் ஒரு சிற்றள வான—செந்தண் நிலைப்பாடமைந்த வீடும் தந்துதவ முடியாத தமிழ்க் குமுகாயத்திற்குத் தான் அவர் உழைத் தார். அவர்தம் ஆய்வுகளை அச்சேற்றவும் பரப்பவும் தமிழர் முன்வராமையால் அவர்தம் கைப்பொருளையிழக்கவும், அச்சிடவியலாது. கையெழுத்து வடிவிலிருந்தவை பூச்சிகட் கிரையாகவும், அவர் கண்ட உண்மைகளும் முழுமையாக வெளிப்படாமல் அவருடனேயே அழிந்துவிடவும் நேர்ந்தன. எனினும் வல்லவனுக்குப் புல்லும் கருவியாதலைப் போல எல்லா விடங்களிலும் அவர்தம் சொல்லாய்வு நிகழ்ந்தது, நூல், கட்டுரை, பாட்டு, மேடைப் பேச்சு, உரையாடல்· கடிதம் ஆகிய அவர் தம் எண்ண வெளிப்பாட்டு வாயில்கள் அனைத்திலும் சொல்லாய்ந்தார்; சொல்லாக்கினார், சொல் லாராய்ச்சியின்றி அவரால் எண்ணவும் எழுதவும் பேசவும் இயலாது என்று கூறுமளவிற்கு அவர் அதில் மூழ்கியிருந்தார். அவர்தம் தொழிலும் இன்பப் பொழுது போக்கும் சொல் லாராய்ச்சியாகவே இருந்தது. அதற்கு ஏதாவது பலன் கிடைத்த போதெல்லாம் கரும்புதின்னக் கூலியாகவே கருதி னார். உற்ற நண்பர்களுக்குக் கடிதம் எழுதும்போதும், சொல் லாய்வு நிகழ்ந்த தென்பதற்குச் சான்று சில காட்டி மேற் செல்லலாம்.

முதுபெரும் புலவர் வி. பொ. பழனிவேலனார்க்குப் பாவாணர் எழுதிய கடிதங்களில் நிகழ்ந்த சொல்லாக்கங் களும் சொல்லாய்வுமாகச் சில வருமாறு:

''எழுத்துகள் என்பது புணர்ச்சிப் பிழை, விரற்கடை என்பது விரற்கிடை என்றிருத்தல் வேண்டும். நாட்டியம் என்பது வடசொல் வடிவு. நடம் நடனம் என்பவே தமிழ். கேள்வி என்பது செவியிறுதலும் வினவு தலும் ஆயின் கேள்விச் செல்வம் என்பது செவியினாற் பெறும் செல்வமே செவிச் செல்வம் என்பதே குறள். வினாவிடை மாலை என்று தலைப் பிடச் சொன்னேன் (20 கும்பம் 1995 ஆம் நாளைய மடற்பகுதி)

Represent—படிநிகர்
Representative—படிநிகராளி, படிநிகராளர்

(சுறவம் 20, 1999 ஆம் நாளைய மடல்)

'இலக்கம் சாய்ந்தது' என்னுந் தொடர் குறிஞ்சிக்கலி மூலத்தில் உள்ளதா? உரையில் உள்ளதா? மூலத்தில் உள்ள தாக எனக்கு நினைவில்லை. எக்கலியில் என்று திட்டமாய்த் தெரிவித்தால் பார்த்துச் சொல்கிறேன். சமயற்கிருதத்தில் நாரத்தைக்கு 'லக்ஷ' என்றொரு பெயருண்டு. அது தமிழில் இலக்கம் என்றுதான் இருக்கும்.

'எல்லே இலக்கம்' என்று தொல்காப்பியத்திலிருப்பதால் 'இலக்கம் சாய்ந்தது' என்பது பொழுது சாய்ந்தது என்றும் பொருள்படும். எல் = கதிரவன்.

(2004 துலை 24 (9-11-73) ஆம் 'நாளையமடல்')

கவி என்ற வடசொற்கு வடமொழி அகரமுதலியில் சரி யாக மூலம் காட்டப்படவில்லை. கூ (கூவு) என்றும், கவ = (கஞ்சத்தனமான) என்றும் இருமூலங்கள் காட்டப் பட்டுள.

தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் மேற்கணக்குப் (பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும்) பாடல்களிலும் கவி என்ற சொல் இல்லை, கி. மு. ௫௲00 போல் பாடப்பட்ட

'இருக்கு வேத'த்தில் அச்சொல் உள்ளது. வடசொற்கள் மிகுதியாய்க் கலக்கத் தொடங்கிய பின்னரே 'கவி' என்னுஞ் சொல் இலக்கியத்திற் புகுந்தது. 'கவிகைக் கொடுப்ப' என்று சிலப்பதிகாரத்தில் வருவதால் (௩:௧௩௫) ௭—ஆம் நூற்றாண்டினதான திவாகரத்தில் அச்சொல் குறிக்கப்பட்டுள்ளது.

இந்தியும் சமற்கிருதமும் அடர்ந்து வரும் இக்காலத்தில் வடசொற்களை அறவே களைந்து தமிழை முழுத்தூய்மைப் படுத்தல் வேண்டும். அல்லாக்கால் தமிழில் செய்யுளை அல்லது பாவைக் குறிக்கச் சொல்லில்லையென்றே இந்தியாரும் வடவரும் கருதி மகிழ்வர்.

தருவது தருமம் என்பதுபோற் பொருந்தப் பொய்த்தலும் பொருந்தாப் பொய்த்தலுமாகச் சில மொழியாராய்ச்சியில்லாப் பொறுப்பற்ற தான்றோற்றிப் பதடிகளின் வெற்றுரையைக் கொள்ளற்க. தோல் தமிழகத்த தாயினும் அதனாற் செய்யப்படும் பாதக்கூடு மேனாட்டதே, அங்ஙனமே, மூலம் தமிழாயிருப்பினும் சொல்லளவில் சில வடசொல்லே. (2005 அலவன் 24 (9-8-74) ஆம் நாளைய மடல்)'

தகவல் என்பது dakhal என்னும் அரபிச் சொல், Information, intimation என்பதே அதன் பொருள். சேதி(செய்தி) என்பது அப்பொருளிலேயே வழங்குகின்றது. (எ-டு) வந்தவுடன் சேதியனுப்பு.

அதைப்பற்றி ஒருதகவலுமில்லை-அதைப்பற்றி ஒரு தெரிவிப்புமில்லை. வ. மத்ய (Madhya - த. நடு, நடுவம், நடுவண். என்றும் முச்சொற்களுள் ஒன்றையே வழங்குதல் வேண்டும். நடுவம் மிகமிகப் பொருந்தும். (2010 துலை 23 (9-11-79) ஆம் நாளையமடல்).

சாதனை என்னும் வட சொல்லிற்கு நிலைநாட்டம் என்பது பொருத்தமாயிருக்கும். சாதித்தல்—நிலை நாட்டல், வலித்துரைத்தல் ப்ரச் (வ)=வினவு. பிரச்சினை—வினா, நாம்

வினா என்னும் சொல்லையே பயன்படுத்தலாம். சிக்கலான செய்தியாயிருந்தால் (Problem) புதிர் என்னும் சொல்லை ஆளலாம்.

ச்ரம (வ) = களைப்பு, அயர்ச்சி, உழைப்பு, உழப்பு.

சிரமபரிகாரம் = களைப்பாற்றல், இளைப்பாறல்,

சிரமப்பட்டுச்செய்தல் = மெய்வருந்திச் செய்தல்

தமிழர் இப்பொருளிலேயே இச் சொல்லை வழங்குகின்றனர். பெரும்பாடு என்னும் சொல் பெண்டிர் விடாயிறைப்பைக் குறித்தாலும் பெரும்பாடுபட்டுச் செய்தான் என்னும் வழக்குண்மையால் அச்சொல்லையே நாம் அப்பொருளிலேயே வழங்கலாம்.

உழப்பு என்னும் சொல் ஒத்த பொருளதேனும் இலக்கியச் சொல்லும் அருஞ்சொல்லுமாக உள்ளது.
உழத்தல் = வருந்தியுழைத்தல் 'உழந்தும் உழவே தலை'

(குறள்) (2011 கும்பம் 8 (20-2-80) ஆம் நாளையமடல்)

இவ்வாறு மடல்கள் வழியும்சொல்லாய்வும் சொல்லாக்கமும் திகழ்ந்துள்ளன.

பாவாணரின் எண்ண வெளிப்பாட்டு வாயில்கள் அனைத்திலும் பொதிந்து கிடக்கும் தமிழாய்வுகளைத் திரட்டுதலும் நம் தலையாய பணி என்பதை இக் கடிதங்களில் குறிக்கப் பெற்ற சொல்லாய்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

## பாவாணரின் சொல்லாக்க நெறிமுறைகள்

பாவாணரின் சொல்லாக்க நெறிமுறைகளைப் பின்வருமாறு வகுக்கலாம்.

## 1. இருவகை வழக்குகளை ஆய்ந்து ஏற்ற சொல்லை மீட்டல்

பாவாணர் ஒருவரே உலகவழக்கு, செய்யுள் வழக்கு அல்லது இலக்கிய வழக்கு ஆகிய இருவகை மொழிவழக்குகளையும், திசைமொழி இனமொழி வழக்காறுகளையும் முற்றுணர்ந்தறிந்தவர் என்று கூறலாம். அவரே உலகவழக்கை, இழிவழக்கிலிருந்தும் (Slang) கொச்சை வழக்கிலிருந்தும் Barbarism) வேறுபடுத்திக் காட்டியவர்.

''மனைவியைப் பெண்சாதி என்பதும் பீர்க்கங்காயை பீச்சங்கா என்பதும் இவைபோன்ற பிறவும் இழிவழக்காம், வந்தது என்பதை வந்துச்சு என்றும் வைத்திருக்கிறார் என்பதை வச்சிருக்கார் என்றும் வழங்குவது கொச்சை வழக்காம். இத்தகைய வழுக்களின்றி எளிய தூய இலக்கண நடையிற்பேசுவதே உயர்ந்தோர் வழக்கான உலகவழக்காம்' என்றும்

''செய்யுள் வழக்கு குறிப்பிட்ட சொற்களையும் சொல் வடிவங்களையுமே வழங்கி வருவதாலும், சுருங்கச் சொல்லல் என்னும் அழகைப் பெரிதாகப் பேணுவதாலும் உலக வழக்கினின்று மிகவும் வேறு பட்டதாகும்'' என்றும்

''பண்டைச் செய்யுளிலெல்லாம், காடை கதுவாலி (உ.வ) என்னும் பறவைகள் குறும்பூழ், சிவல் என்னும் சொற்களாலேயே முறையே குறிக்கப்பெறும். செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செய்ம்மன, செயின் முதலிய செய்யுள் வினையெச்ச வடிவுகள் உலகவழக்கிலும், செய்து கொண்டு, செய்கிறதற்கு, செய்தால், செய்துவிட்டால் முதலிய உலகவழக்கு வினையெச்ச வடிவுகள் செய்யுள் வழக்கிலும் இடம்பெறுவதில்லை.

''முழுக்கு என்னும் சொல்வடிவே மூலமாயினும் அதன் திரிபான விழுங்கு என்பதே செய்யுட்கேற்றதாகக் கொள்ளப்

பெறும். இங்ஙனமே மிஞ்சு என்பதினும் அதன் திரிபான விஞ்சு என்பதே சிறந்ததாம். கொண்டுவா என்பதன் திரிபான கொண்டா என்பது செய்யுளில் இடம்பெறாது. ஆயின் கொண்டா என்பதன் திரிபான கொணா, கொணர் என்பவை இடம் பெறும்" என்றும்

''இனி வினையின் மூக்கால வடிவும் ஆங்கிலத்திற் போல் தனித்தனி தனிப்பு (indefinite) தொடர்ச்சி (continious) நிறைவு (Perfect) நிறைவுத் தொடர்ச்சி (Perfect continious) என்னும் நால்வகை கொண்டியங்குவதும், தமிழில் உலக வழக்கேயன்றிச் செய்யுள் வழக்கன்று. சிலர் செய்யுள் வழக் கைகே அடிப்படையாகக் கொண்டு உலக வழக்கிற்குச் சிறப் பாக உரிய கூறுகளையெல்லாம் பிற்காலத்தவாகக் கூறுவர். அவர் மொழியியலை, சிறப்பாகத் தமிழியலை அறியார். செய்யுள் வழக்கினும் உலகவழக்கே முந்திய தென்பதை அறிதல் வேண்டும்'' என்றும் ''உலகவழக்கு கொச்சை வழக்கன்று'' என்னும் கட்டுரையில் பாவாணர் கூறுவதால் அவர்தம் இருவகை வழக்குப்பற்றிய வரையறையும் ஆராய்வும் தெளிவும் புலனாகும்.

'தமிழில் இல்லாதவை' என்னும் தலைப்பில் பத்தாண்டு கட்கு முன்னர் நான் வரைந்த கட்டுரையில் Ugly என்பதற் கிணையான தமிழ்ச் சொல் இல்லை'' யென்றும் அதற்குக் கூறப்படும், கோரம், அகோரம், அருவருப்பு என்பவை பொருந்தாவென்றும் எனவே தமிழர்க்கு அழகின்மை தெரி யாது, அழகே தெரியுமென்றும் குறித்திருந்தேனாக, 'பங்கறை' என்னும் சொல்லுண்மையை பாவாணர் அவர்கள் எனக்குச் சுட்டிக் காட்டினார்கள். அப்பங்கறையும் சரவடி (கோத்திரம்-வ)யும் இவைபோல் பல சொற்களும் பாவாண ரால் உலக வழக்கிலிருந்து மீட்டளிக்கப் பட்டவையாகும்.

'அன்னம்' என்னும் பறவைப் பெயர்ச்சொல் வட சொல்லன்றேனும் தமிழில் வேர்காண இயலாத தென்றும்,

அதற்கிணையானவை ஓதிமம், எகின் என்னும் சொற்க ளென்றும் செய்யுள் வழக்கிலிருந்து பாவாணரால் மீட்கப் பெற்றவையும் பல.

'அந்தோ' என்பது திசைமொழிச் சிங்களச் சொல்லென்று நம் உரையாசிரியர்கள் தானங்கொடுத்து விட்டாராக, அது தமிழ்ச்சொல்லேயென்றும்,

'கோ' என்னும் ஆவைக்குறித்த சொல்லே cow என்னும் மேலையாரிய மொழிச் சொற்கு மூலமென்றும்,

பூசை (பூனை) என்னும் தமிழ்ச் சொல்லே Pussy என்னும் மேலையாரிச் சொற்கு மூலமென்றும் இன்னும் பல வற்றை இவ்வாறெடுத்துக் காட்டியதும் பாவாணரின் திசை மொழியறிவைக் காட்டுவதாகும்.

வழக்குச் சொற்களையும் வட்டார வழக்கை ஒப்பு நோக்கி அறிதலிலும் பாவாணர் வல்லாராவர். Funnel என்னும் பொருளில் வழங்கும் 'வைத்தூற்றி' என்பது குமரி நாட்டு வழக்கென்றும், துப்புரவு, குதிரைவாலி, காடைக் கண்ணி, சுளகு ஆகியவை திருநெல்வேலி வழக்கென்றும், ஊருணி, பைய ஆகியவை மதுரை வழக்கென்றும் தவப் பிஞ்சு என்பது திருச்சி வழக்கென்றும் இன்னும் பிறவாறும் அவர்தம் எழுத்துக்களில் ஆங்காங்கே வட்டாரவழக்குகள் குறிக்கப்பட்டுள.

இவ்வகை வழக்குகளைப் பாவாணர் நன்கறிந்திருந்தமை யால் ஒரு கருத்தை தமிழில் வழங்குங்கால் அக்கருத்தை யுணர்த்தும் பழஞ்சொல்லேதும் இவ்வழக்குகளில் உளதா எனக் காண்பது அவர்தம் புதுச்சொல்லாக்க நெறிகளில் முதன்மை வாய்ந்ததாகத் தெரிகின்றது.

தமிழில் 'பசு' என்னும் வடசொல் வழக்கூன்றி விட்ட போது, அதற்குப் பகரமாக 'ஆ' என்னும் இலக்கிய வழக்குச்

சொல்லை வழங்க முற்படுங்கால் பசுவைக் குறிக்கும் தென் சொற்கள் ஆ, ஆன், கறவை, குடஞ்சுட்டு, குரால், கோ, சுரை, பெற்றம் (இருபாற்பொது) என்பன. இவற்றுள் கறவை என்பது பால் கறக்கப்படுவது. சுரை என்பது மடு பெருத்தது. குடஞ்சுட்டு என்பது ஒருகுடம் பால்கறப்பது. குரால் என்பது புகர் (கபில) நிறத்தது. பெற்றம் என்பது மிகப் பெரிதுயர்ந்தது. ஆ, கோ என்பன பொதுப்பெயர். இவற்றுள் ஆ என்பது தமிழிலும் திராவிடத்திலும் மட்டும் வழங்கும்'' என்று 'வடசொல் தென்சொல் காணும் வழிகள் (தமிழ்ப்பாவை - 4 ஆண்டுச் சிறப்பு மலர் - மதுரை தமிழ் எழுத்தாளர் மன்றம்) என்னும் கட்டுரையில் பாவாணர் குறிப்பிடுகிறார்.

அவ்வாறு பழஞ்சொல்லை மீட்கும் போதும் பின்வருமாறு சில முறைகளைக் கையாண்டுள்ளார்.

(அ) இருவகை வழக்கிலும் ஒரே சொல்லிருப்பின் அதனை மீட்டல்.

| | வடசொல் | தமிழ்ச் சொல் |
|---|---|---|
| எ-டு | கவிதை | பா, பாட்டு |
| | பவி | காவு |

(ஆ) இருவகை வழக்கில் ஏதாவது ஒன்றிலேனும் ஒரு சொல்லிருப்பின் அதனை மீட்டல்.

| | | பிறசொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| செய்யுள் வழக்கு | எ-டு | Lodging | தாவளம் |
| | | Larva | உலண்டு |
| | | கஸ்தூரி | காசறை |
| | | காவியம் | வனப்பு |
| | | கார்த்திகை | ஆரல், அறுமீன் |
| உலக வழக்கு | எ-டு | நிபந்தனை | அக்குத்து |
| | | பாத்திரம் | ஏனம் |

(இ) இருவகை வழக்கிலும் வெவ்வேறு சொல்லிருந்து செய்யுள் வழக்குச் சொல் அருஞ்சொல்லாகவும் உலகவழக்கு சொல் எளிய சொல்லாயுமிருப்பின் உலக வழக்குச் சொல்லையே மீட்டல்

எ-டு சிரமம் (வ)=பெரும்பாடு என்னும் சொல்லையே அப்பொருளில் ஆளலாம் என்றும் அப்பொருள் குறித்த 'உழப்பு' அருஞ்சொல்லாயும் இலக்கியச் சொல்லாயும் உள்ள தென்று கூறி விலக்கியமையும் காணலாம்.

''தமிழிலே சொற்களை ஆக்குவதற்குப் பலவிதமான வழிகளெல்லாம் இருக்கின்றன. உலக வழக்கிலே கூட எத்தனையோ சொற்கள் இருக்கின்றன. நான் கூட இதைத் தொகுக்கும்படி சென்னைப் பல்கலைக் கழகத்தாருக்கு எழுதிக் கேட்டேன். அகாரதியில் உள்ள குறைபாடுகளைக் கூட அச்சிட்டு வழங்கினேன். அதற்குப் பதில் இதுவரை ஒன்றும் கிடைக்கவில்லை.'' (தமிழ்மொழியில் கலைச் சொல் லாக்கம் என்னும் தலைப்பில் பாவாணர் நிகழ்த்திய உரைச் சுருக்கம். சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாடு கோவை சிறப்பு மலர் 1958) என்று பாவாணர் கூறியுள்ளார்.

இவற்றால் புதுச்சொல்லாக்கத்திற்குள்ள பல வழிகளில் உலக வழக்கு செய்யுள் வழக்குச் சொற்களைத் திரட்டுவதும் ஒன்று என்று பாவாணர் கருதியுள்ளமையை அறியலாம்.

## 2. தமிழியல்புக்கேற்ப சொல்லைப்புதுக்கல்

இருவகை வழக்குச் சொற்கள் இல்லாதபோது தமிழியல்புக்கேற்பவும், வேர்ச்சொல் வழியும் சொல்லைத் திருத்திக் கொள்ளுதலையும் பாவாணர் மேற் கொண் டுள்ளார்,

எ-டு காரணம்—கரணியம்
காரியம்—கருமகம், கருமம்

சமுதாயம்—குமுகாயம்
அவசியம்—அகத்தியம்
பூசாரி—பூசகன்

தமிழில் வேரிருந்தும் தமிழியல்பிற்குப் பொருந்தாமலும் தமிழில் வழக்கின்றியும் இருப்பின் அத்தகைய சொல்லை அவர் விலக்கி விடுதலுண்டு.

தா என்னும் முதனிலையிலிருந்து தோன்றிய தருமம் என்பதையும் சூர் என்னும் முதனிலையிலிருந்து தோன்றிய 'சூரியனில்' சூரன் என்பது வரை தமிழாக இருந்தும் சூரியனையும் பாவாணர் விலக்கி விடுகின்றார்.

## 3. சொல்லுருவாக்கல்

முன்னர்க் கூறிய முறைகளின் வாயிலாகச் சொல்லாக்கம் செய்யவியலாதபோது புதுச்சொல்லை உருவாக்கும் நெறியை பாவாணர் பின்பற்றுகின்றார். அத்தகைய சொல்லுருவாக்கத்தின் போது பொருளும் கரணியமும் குறிக்கும் காரணச் சொற்களையே ஆக்குதலும் இடுகுறியாகப் படைக்காமல் விடுதலும் பாவாணர் கடைப்பிடித்ததேயாகும். இச்சொல்லுருவாக்கத்தின் போதும் சில முறைகளைப் பின்பற்றியுள்ளார் அவை.

(அ) பொருளால் ஒத்த சொல் உருவாக்கல்

எ-டு Bank—வைப்பகம்
youth—இளந்தை
Soap—வழலை
Boots—பாதக்கூடு

(ஆ) வழக்கு வீழ்ந்த சொல்லைப் புதுப்பித்தல் அல்லது வடிவ மீட்டமைப்பு.

எ-டு ஜனம்—நரல்
பிராணி—உயிரி
Passport—கிள்ளாக்கு

(இ) வேர்ச்சொல்வழி சொற்படைத்தல்

எ-டு தயார்—அணியம்

(ஈ) மூலச் சொல்லின் வேர்காணல்

எ-டு Coffee—குளம்பி
Pen—தூவல்

(உ) ஒலியொப்புச் சொல்லாக்கம்

எ-டு Bracket—பிறைக்கோடு
Parliament—பாராளுமன்று

(இவை பாவாணரால் படைக்கப்பட்டவை என்று கூற இயலாவிடினும் பாவாணரால் ஏற்கப் பெற்றவையாகும்)

## 4. மொழிபெயர்த்தல்

மொழிபெயர்ப்பு முறையில் சொல்லாக்கஞ் செய்தலும் பாவாணர் பின்பற்றிய முறையேயாகும்

மொழி பெயர்ப்பும் இருவகைய

(அ) மொழி பெயர்ப்பு மீட்டல்

தமிழிலிருந்து வடமொழிக்கும் பிறமொழிக்கும் மொழி பெயர்த்துக் கொள்ளப் பெற்றவற்றை மீண்டும் முன்னைத் தமிழாக்கிக் கொள்ளுதலே மொழிபெயர்ப்பு மீட்டல் ஆகும்.

எ-டு ஏகதேச உருவகம், கும்பகோணம், புதன், சனி என வடமொழியில் பெயர்க்கப்பெற்றவற்றை மீண்டும் முறையே ஒருமருங்குருவகம், குடமூக்கு, அறிவன், காரி எனவும் கிரேக்க மொழிக்கு மொழிபெயர்ப்பு வகையில் சென்ற பன்னிரு திங்கட்பெயர்களை சுறவம் கும்பம்...எனவும் முன்னைத் தமிழாக்கிக் கொண்டமை

(ஆ) மொழிபெயர்த்தல்

மூலச்சொல்லை மொழிபெயர்த்தல்

எ-டு oxford—எருதந்துறை
Fossils—கல்லுடம்பு
Adolescent—வளரிளந்தை
Delegates—விடைமுகவர்

இம்மொழிபெயர்ப்பிலும்

Layman—நட்டாமுட்டி என்று உலக வழக்கும்
Gown—மெய்ப்பை என்று செய்யுள் வழக்கும்
Clause—கிளவியம் என்று சொற்றிரிப்பும் (கிளவி-கிளவியம்) அமைகின்றன.

கலைச்சொல், குறியீடு ஆகியவை குறித்தும் பாவாணர் சில கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

AtomicBomb, Television, Pedgree, Pedagogy, Allotrophy, Technical Term ஆகியவையும் இவை போல்வன ஏராளமான பிறவும் தமிழ் மூலங் கொண்டவை (மண்ணில் விண் பக் 237-240) என்று கூறும் பாவாணர் ஆட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், பொருட்பெயர், ஒலிக்குறிப்பு, நிகழ்ச்சி, அளவு, தன்மை நிறம், வடிவம், உவமை, தொழில் செயல்வினை, கல்வி, ஆகுபெயர் ஒன்றற்கு ஒன்றைப் பிற்படுத்தல், நாடகப் புனைசொல், கருது கோட்சொல், சொற் குறைப்பு, ஈறுமாற்றம். முதலெழுத்துக்கூட்டு, ஆட்சிச்சொல், பொருளமைப்புச்சொல், அணிவகைச் சொல், தொன்மச்சொல், இருபொருட்புணர்ப்பு ஆகிய பல வகைகளைக் கையாண்டு எல்லாக் குறியீடுகளையும் தமிழிற் பெயர்த்துக் கொள்ளலாமென்றும், செ. சொ. பி. அகரமுதலியின் 12 ஆம் மடலம் சொற்பிறப்பியல் நெறிமுறைகளைக் கொண்டதென்றும் "அது புதுச்சொல்லாக்க முறைகளையும் மொழி பெயர்ப்பு முறைகளையும் தெள்ள தெளிவாகக் காட்டும்; அதைப்பின்பற்றி எல்லாச் சொற்களையும் எளிதில் மொழி பெயர்க்கலாம்" என்றும் (மண்ணில் விண் 240-246)

கூறினாரேனும் பின்னர்க் கூறப்பெற்ற அப்பேறு தமிழுக்கும் தமிழர்க்கும் வாய்க்கு முன்னரே அவர் மறைந்துவிட்டார்.

## 5. அயற்சொல் ஆளல்

இன்றியமையாத இடங்களில் மட்டும் அயற்சொல்லை ஆளலாம் என்பதும் பாவாணர் கருத்தாக உள்ளது இதுபற்றி அவர் கூறுவதாவது "இனி, புதுச்சொற் புனைந்தும் நேர் தென்சொல் அமைக்கவியலாத ஒருசில அயற்சொற்களை அங்ஙனமே ஆளலாம். ஆயின் அவற்றை அயன்மொழி யொலிப்படி வழங்காமல் தமிழொலிக்கேற்பத் திரித்தே வழங்குதல் வேண்டும். அல்லாக்கால் வேற்றொலி விரவித் தமிழ்த்தன்மை கெட்டுவிடும்"

(தமிழ்கடன் கொண்டு தழைக்குமா?
உ.த.க பெங்களூர்க்கிளை வெளியீடு-பக் 24)

இதற்கெடுத்துக் காட்டாக அவர் ஆண்டுள்ள சில:
Galvanism —கால்வனியம் (Galvani கண்டது)
Egypt—எகிபது

இவ்வைந்நெறிகளைப் பின்பற்றி பாவாணர் சொல் லாக்கம் செய்துள்ளமையை அவர்தம் ஆய்வுவெளிப்பாடுகள் உணர்த்துகின்றன.

### பாவாணரின் சொல்லாக்கச் செலவு

பாவாணர் பிறந்த போதே பேரறிஞராய்ப் பிறந்து விடவுமில்லை. அவர் பள்ளியிற் படிக்குங்கால் ஆங்கில இலக்கியம் பயின்று சேக்கசுப்பியர் அதிகாரியாக (Authority on Shakespeare) மேலை நாட்டிற் பணிபுரிய வேண்டு மென்று விரும்பியிருக்கின்றார். ஆயின் அவர்தம் தமிழாசிரியர் அளித்த 'கவிவாணன்' என்னும் பரிந்துரைப்பட்டம் அவரைத் தமிழ்ப் பற்றாளராகவும் ஆய்வாளராகவும் மாற்றி பின்னர் பாவாணராகி அவர்தம் இயற்பெயரின்றியே வழங்குமாறும் நிலைபெறச் செய்துவிட்டது.

மொழியாராய்ச்சிக்கு வேண்டிய அடிப்படை ஏந்தின்றி வேண்டிய நூலை விலைகொடுத்து வாங்க முடியாத வறுமையில் உழன்றாலும், அவர்தம் உழைப்பும், விடாமுயற்சியும், உண்மைகாணும் அவாவும், துணிவும், அப்பணிக்குத் தம்மை ஒப்பிப் பணித்துக் கொண்டமையு மன்றோ அவர் சொல்லராய்ச்சி வல்லாரராகவும் தமிழதிகாரியுமாகத் திகழுதற்குக் காரணிகளாய் அமைந்தன!

சொல்லாராய்ச்சியில் அவர் தவழ்ந்ததும், எழுந்ததும் தளர்நடையிட்டதும் தாவியதும் குதித்ததும் ஓடியதும் உயர்ந்ததும், தமிழ்க் கடலில் மூழ்கி ஆழமும் அகலமும் கரையும் கண்டதும் காலவரிசையில் அவர்தம் நூல்களையும் எழுத்துக்களையும் ஊன்றிப் பயில்வார்க்குப் புலனாகும். அவ்வளர்ச்சியை ஒருவாறேனும் நாம் உணர்ந்து கொள்ளச் சில சான்றுகளைக் காணலாம்.

1937 ஆம் ஆண்டில் 'அணியெழுந்த வரலாறு' என்னும் அவர்தம் கட்டுரையில் (The Putturian Vol iv Nov. 1937) ஜெபம், பாவம், கலியாணம், கமலம், பிராணி, அவதாரம், ஆபரணம், அநேகம், முக்கியம் ஆகிய சொற்களும் அதே ஆண்டில் வெளியான 'செந்தமிழ்க்காஞ்சி' என்னும் நூலில் கஜமுகவதனா, சத்யம், நீதி, மோனம், சம்பந்தம், பல்லவி, அனுபல்லவி, பாஷை, சமஸ்கிருதம், சுஜன ஜீவனா முதலான பலவுமாக வடவெழுத்துடன் அமைந்த சொற்கள் காணக் கிடைக்கின்றன.

அவர்தம் முதல் ஆய்வு நூலான ஒப்பியன் மொழி நூலிலும் பின்னர் வெளியான நூல்களிலும் காணப்படும் வேறுபாடுகளில் சிலவற்றைக் குறிக்கலாம்,

| ஒ. மொ, நூல் | பின்னூல்கள் |
| --- | --- |
| சேம்பர்ஸ் | சேம்பரார் |
| ஸ்கீற்று | கீற்று |
| ஜியார்ஜ் | சியார்சு |
| உவின்ஸ்லோ | வின்சுலோ |
| இராமானுஜர் | இராமானுசர் |
| மோஹெஞ்ஜெ-டேரா | மொகஞ்சோதாரா |
| ஸ்ரீநிவாஸய்யங்கார் | சீனிவாச ஐயங்கார் |
| தியாகராஜஐயர் | தியாகராச ஐயர் |
| ராவ்சாஹிப் | அராவ ஆண்டகை |

பின்னர் வெளியான 'திரவிடத்தாய்' நூலில் முக்கியம் சரித்திரம், சுமார், ரகம், ஊகம், பதில், வாக்கியம், கோபம், நிதானித்தல், ஆலோசித்தல், சித்தாந்தம் ஆதி முதலான பிற சொற்களிருப்பினும் அவையெல்லாம் 'வடவெழுத்தொரீஇ' வந்துள்ள வளர்ச்சியைக் காணலாம்.

'பதில்' என்னும் சொல்லை முதலில் தலைமாறு' எனவும் பின்னர் 'பகரம்' என்றும்

Application form என்பதை முன்னர் விண்ணப்பப் படிவம் எனவும் பின்னர் வேண்டுகைப் படிவம் என்றும்,

Circus என்பதை முதலில் மறவிளையாட்டு எனப் பொருள் நோக்கியமைத்துப் பின்னர் வட்டரங்கு என வேர்ச் சொல் நோக்கியமைத்துக் கொண்டும்

நித்தியம் என்பதை முதலில் வடசொல்லாகக் கொண்டு அதை நிலை என மொழிபெயர்த்தும் பின்னர் நில் - நிற்றல் - நிற்றியம் - நித்தியம் தமிழ்ச்சொல்லே என வேர்ச்சொல் ஆய்வினால் துணிந்தும் Pedantic Etymology என்பதை முதலில் அறிவாகுலச் சொல்லியல் என்றும் பின்னர் அறிவாரவாரச் சொல்லியல் என்றும்,

வசதி வயது என்று முன்னர்க் குறித்தவற்றை முறையே ஏந்து அகவை என மாற்றியும் காணப்படும் சான்றுகள் பல பாவாணரின் சொல்லாய்வுச் செலவில் தன்னாய்வு நோக்கின் மாற்றியும் திருத்தியும் கொண்ட அவர்தம் வளர்ச்சி வரலாற்றைத் தெரிவிப்பன.

## பல துறைப் புதுச் சொல்லாக்கங்கள்

முன்னர்க் கூறிய நெறிமுறைகளுக்குப் பொருந்துமாறு பழஞ்சொல்லை மீட்டும் புதுச்சொல்லை ஆக்கியும் மொழி பெயர்த்தும் பாவாணர் கொடுத்த பல்துறைச் சொற் கருவூலக் கொடையனைத்தும் திரட்டின் அதுவே ஓர் அகர முதலியாக விரியும். விரிவஞ்சி, சில துறைச் சொற்களில் சில வற்றை மட்டும் இங்கெடுத்துக்காட்டி அமைவேன்:

**அளவுத் தொடர்பானவை**

Inches-விரலம், விரற்கிடை
Ounce-விரனை

**இடப்பெயர்கள்**

வேதாரணியம்-மறைக்காடு
சுவேதாரணியம்-வெண்காடு
சீர்காழி-திருக்காழி
சீகாளத்தி-திருக்காளத்தி

**இசைத் தொடர்பானவை**

அபிநயம்-நளிநயம்
ஆதி-முன்னை
ஏகம்-ஒற்றை
சம்பை-முவொற்று
சரணம்-உருவடி
சாப்பு-இணையொற்று
சுத்தமத்திமம்-ஆகணவுழை
பிரதிமத்திமம்-அந்தரவுழை
தொகையரு-உரைப்பாட்டு
ரூபகம்-ஈரொற்று
ஸ்தாய்-நினா
நாதசுரம்-இசைக் குழல்

**உடை வகை**

Drawer, Pant-காற்சட்டை
HalDrawer-சல்லடம்
கௌபீனம், லங்கோடு-நீர்ச் சீலை
Gown-மெய்ப்பை
Coat-குப்பாயம்

**உணவுத் தொடர்பானவை**

Biscuit-ஈரட்டி
Brandy-முந்திரிச்சாராயம்
Bun-பண்ணியம்
Soup-நீட்டாணம்
Wine-முந்திரிச்சாறு
மசாலை-உசில்
நாஸ்தா-முற்றாலம்
ரொட்டி-அப்பம்

**ஓகத் தொடர்பானவை**

யோகம்-ஓகம்
இயமம்-கடிவு
ஆசனம்-இருக்கை
பிரத்தியாகாரம்-ஒருக்கம்
தாரணை-நிறை

புருடன்-ஆதன்
சமாதி-நொசிப்பு, ஒன்றுகை

கணியத் தொடர்பானவை

சாதகம்-பிறப்பியம்
பஞ்சாங்கம்-ஐந்திறம்

கல்வித் தொடர்பானவை

Course-கடவை
Marks-வரையம்

கூட்டத் தொடர்பானவை

Assembly-ஆயம்
Association-ஆசிடை
Audience அவை
Collection-தொகை
Committee-குழு
Crowd-கும்பல்
Gangகும்பு
Gathering-குழுமல்
Guild-குழுமம்
Herd, Company-குழும்பு
Jury-அவையம்
Meeting-கூட்டம்
Party-குழாம்
Society-கழகம்
Village Assembly-அம்பலம், பெருங்குறி
Village Council-கடிகை, குறி

நம்பிக்கை வகை

Belief-நம்பிக்கை
Faith-நம்பகம்
Hope-நம்பாசை
Trust-கையடை
Trustee-கையடைஞர்
Atheism-தேவிலியம
Theism-தேவியம்
ஆஸ்திகம்-உள்ளியம்
நாஸ்திகம்-இல்லியம்

நிலநூல் தொடர்பானவை

Atlas-ஞாலப்படம்
Mediteranian Sea-நண்ணிலக்கடல்
Pacific Ocean-அமைதி மாவாரி
Peninsula-தீவக்குறை
Straits-நீரிணைப்பு

படையியல் தொடர்பானவை

Cannon-குண்டுக் குழாய்
Destroyer-அழிப்பான்
Fighter-பொருவான்
High Level Bombing-உயர் மட்டக் குண்டுப் பொழிவு
Low Level Bombing-உயர் மட்டக்குண்டுப் பொழிவு குண்டுப்
Glide Level Bombig-சரிவுக் குண்டுப் பொழிவு
Gun-துமுக்கி
Hydrogen Bomb-நீரியக் குண்டு
Inter Continental Ballistic Missile-கண்டமேலாவி (ICBM)
Spitfire-நெருப்புமிழி
Parachute Army-குதி குடைப் படை
Letter Bomb-கடிதக்குண்டு
Parcel Bomb-சிப்பக்குண்டு
Time bomb-நேரக்குண்டு
Revolver-சுழலி

பதவித் தொடர்பானவை

Assistant Commissiner of Police-ஊர்காவல் உதவிக் கருமத்தலைவர்
Circle Inspector of Police-ஊர்காவல் வட்டார உண்ணோட்டகர்

Colleetor-தண்டலாளர்
Sub Inspector of Police-ஊர்காவல் கீழ் உண்ணோட்டகர்
Tahsildar-அரசிறையர்

பழவகை

Apple-அரத்தி
Cashew-அண்டிமா, முந்திரி
Pineapple-செந்தாழை
சப்போட்டா-உருளையன்
திராட்சை பச்சை முந்திரி

புதுப்புனைவுத் தொடர்பானவை

Escalator-சுழற்படிக்கட்டு
Lift-தூக்கி
Sky Scraper-வானளாவி

பூ

சூரியகாந்தி-பொழுது வணங்கி

பொழுது போக்குத் தொடர்பானவை

Excursion-புறப்போக்கு
Hobby-பற்றாட்டு

பொறியியல்தொடர்பானவை

Engine-சூழ்ச்சியம்
machine-பொறி
Metallurgy-மாழை நூல்

மருத்துவத் தொடர்பானவை

Anatomy-அக்கறுப்பு
Compounder-கலக்குநர்
Plastic Surgery-ஒட்டறுவை
Treatment-பண்டுவம்
X Ray-உட்காட்டி
காஷாயம்-கருக்கு
கிருதம்-எண்ணெய்
லேகியம்-மெழுகு
பஸ்பம்-நீறு

மறுப்பு வகை

Alteration-திரித்தல்
Antidote-மாற்றம்
Change-வேறுபாடு
Contradiction-முரண்
Contrariety-மறுதலை
Denial-மறுதலிப்பு
Difference-வேற்றுமை
Exchange-மாறு
Negation-மறை
Strong Negation-எதிர்மறை
Refutation-மறுப்பு

மாழை தொடர்பானவை

Metal-மாழை
Alloy-அளையம்
Chemical-இதளியம்
Element-தனிமம்
Stainless Steel-வெள்ளிரும்பு
ஈயம்-நாகம்
பித்தளை-குடவம்
வெண்கலம்-உறை

மணமகனை விலைபேசும் 'சீதனத்'தை சிறுதனம் என்று பாவாணர் குறிப்பர். சொல்வடிவொப்புமையேயன்றி, 'சீதனம்' கேட்டலும் வாங்கலும் கொடுத்தலும் சிறுதனம் (சின்னத்தனமானது) என்றும் அவ்வாறு பெறும் பொருள் பெரும் பொருளாயினும் சிறுமை தருவது என்றும் பொருள் கொள்ளக்கிடத்தலைக் கண்டு மகிழலாம்.

முடிவாக, பாவாணர் சொல்லாக்க ஆய்வைப் புரிந்து கொள்ளவும் பயன் கொள்ளவும் பின்பற்றவும் பலதுறைச் சொற் செல்வமீட்டவும் இக்கட்டுரை துணைபுரியுமெனின் பெருமகிழ்ச்சி தருவதாகும்.

# நீலாம்பிகை அம்மையாரின் தனித்தமிழ்ப் பணி

சாரதா நம்பி ஆரூரன் க.மு.

## முன்னுரை

மறைமலையடிகளாரின் மகனாரும் 'திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைத் தோற்றுவித்த திருவரங்கம் பிள்ளையவர்களின் மனைவியாரும், செந்தமிழில் உரைநடை நூல்கள் பல இயற்றியவருமாகிய நீலாம்பிகை அம்மையாரின் பிறப்பு, வளர்ப்பு, தனித்தமிழ் இயக்கத்தில் அம்மையாரின் ஈடுபாடு, தனித் தமிழின் வளர்ச்சிக்காக அம்மையார் ஆற்றிய பணிகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அம்மையாரின் பிறப்பும் வளர்ப்பும்

அடிகளுக்கு முதல் மகள் சிந்தாமணி அம்மையார் இவரையடுத்துப் பிறந்த ஐந்து குழந்தைகள் சில திங்கள், சில ஆண்டுகள் இருந்து இறந்தனர். மனம் வருந்திய அடிகளார் தமக்கோர் ஆண் மகவுவேண்டுமென வேண்டி நின்று சிதம்பரம், மதுரை, இராமேசுவரம் போன்ற பல திருக் கோவில்களுக்குச் சென்று வழிபட்டார். அம்முயற்சியின் பயனாக ஆகஸ்டுத் திங்கள் ஆறாம் நாள் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து மூன்றாவது ஆண்டு அம்மையார் பிறந்தார் நாகப்பட்டினத்தில் பிறந்த காரணத்தால் அந்நகரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அருள்வடிவான

அம்மை "நீலாயதாட்சியின்" திருப்பெயரை நினைவு கூர்வ தற்காக அம்மையாருக்கு நீலாம்பிகை என்ற பெயரிடப் பட்டது.[1]

அம்மையார் வளர்ந்தது தமிழ் மணம்கமழ்ந்த சூழ் நிலையாகும். அக்காலத்தில் தன்னிகரற்ற தமிழ்ப் புலமை யுடையோராய்த் திகழ்ந்த சோழன்வந்தான் அரசன் சண்முகனார், அடிகளார் இல்லத்தில் தங்கியிருந்தபோது நீலாவைத் (நீலாம்பிகையைப் பெற்றோர் நீலா என்றே அழைப்பர்) தோள்மீது தூக்கி மகிழ்வார் "அரசன் சண்முக னார் தோள்மீது தவழ்ந்த படியினால்தான் நீலா நிறைந்த அறிவுடையவளாயிருக்கின்றாள்" என்றும், "பாண்டித் துரைத்தேவர் உள்ளிட்ட அரும்பெரும் சான்றோர்களின் மடியில் நீலா தவழும் பேறு பெற்றவள்" என்று மறைமலை யடிகளார் கூறி மகிழ்வதுண்டு.[2]

தம் மக்கள் எழுவரில் நீலாம்பிகைக்கு மட்டும் அடி களாரே ஆசிரியராக இருந்து தமிழ் கற்பித்தார் நன்னூல், தண்டியலங்காரம், யாப்பருங்கலக்காரிகை, நீதிநூற் கொத்து, வில்லிபுத்தூரார் பாரதம், சிலப்பதிகாரம், புற நானூறு, பெரியபுராண வசனம் முதலியவற்றை முறை யாகக் கற்பித்தார். பதின்மூன்றாண்டு நிரம்பப் பெறாத அம்மையார் மிக விரைவில் மனப்பாடம் செய்து ஒப்பித்து விடுவார்.

அம்மையாருக்கு விரிவுரையாற்றும் திறத்தையும் கற்பிக்க விரும்பி 'பெற்றோள் கடமை' என்னும் கட்டுரையை எழுதிக் கொடுத்து, ஒப்பிக்கச் செய்தார். சென்னை இராயப் பேட்டையில் பாலசுப்பிரமணிய பக்த சனசபையின் ஆண்டு

1. மறை திருநாவுக்கரசு, நீலாம்பிகையம்மையார், ப 5
2. மே. நூல், மே. ப,

விழாவில், லேடி சதாசிவஐயர் தலைமையில் மேசைமீது ஏறி நின்று சிறுமி நீலாம்பிகை தந்தையார் கற்பித்த கட்டுரையை அருமையான முறையில் விரிவுரை செய்தார்.

இசையிலும் வல்ல அடிகளார் தம் மகளாருக்குத் தேவாரம், திருவாசகம், திருவருட்பா போன்ற பாடல்களை இசையுடன் பாடக்கற்பித்தார். இருவரும் மாலையில் உலவும் போதும் 'கடவுள் வழிபாட்டின்போதும், இரவுணவுக்குப்பின் உலாவும் நேரங்களிலும் பாடிக்களித்தல் வழக்கம்.

## தனித்தமிழ் தோன்றிய வரலாறு

ஒரு நாள் மாலையில் தந்தையும் மகளும் தம் மாளிகைத் தோட்டத்தில் உலாவும்போது அடிகளார் இராமலிங்க அடிகளாரின் திருவருட்பாப் பாடலைப் பாடினார்.

> "பெற்ற தாய்தனை மக மறந்தாலும்
> பிள்ளையைப் பெறுந் தாய்மறந் தாலும்
> உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
> உயிரை மேவிய உடல்மறந் தாலும்
> கற்ற நெஞ்சங் கலைமறந் தாலும்
> கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
> நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
> நமச்சி வாயத்தை நான்மற வேனே"[3]

என்ற அருட்பாவைப் பாடினார். பின்னர், மகளிடம், "நீலா, இப்பாட்டில் தேகம் என்ற வடசொல்லை நீக்கி அவ்விடத்தில் அதற்கு விடையாக யாக்கை என்ற தமிழ்ச் சொல் இருக்குமானால் அவ்விடத்தில் செய்யுள் ஓசையின்பம் பின்னும் அழகாக இருக்கும். பிறமொழிச் சொற்கள் கலப்ப தால் தமிழ்தன் இனிமை குன்றுகின்றது. அத்துடன் நாளடை

---

3. இராமலிங்க அடிகள், திருவருட்பா

வில் தமிழில் கலந்த பிறமொழிச் சொற்கள் நிலைபெற்று, அப்பிறமொழிச் சொற்களுக்கு நேரே வழங்கி வந்த நம் மருமைத் தமிழ்ச் சொற்கள் மறைந்து விடுகின்றன. இவ்வாறே அயல்மொழிச் சொற்களை ஏராளமாக நம் மொழியில் கலந்து ஆண்டதால் நூற்றுக்கணக்கான வடசொற்களும் அயன் மொழிச் சொற்களும் தமிழிற் கலந்தன அதனால் நூற்றுக்கணக்கான தமிழ்ச் சொற்கள் மறைந்தே போயின என்று கூற, நீலாம்பிகை தந்தையிடம், ''அப்படியானால் இனிமேல் நாம் அயன்மொழிச் சொற்களை நீக்கித் தனித்தமிழிலேயே பேசுதல் வேண்டும் அதற்கான முயற்சிகளைக் கைவிடாது செய்தல் வேண்டும்'' என்றும் கூறினார். அம்மையாரின் அன்பும் அறிவும் கலந்த வேண்டுகோளை ஏற்று ''ஸ்வாமி வேதாசலம்'' என்ற தம் வடமொழிப் பெயரை மறைமலையடிகள் என்று மாற்றினார்.[4] ஞானசாகரம்' என்று தாம் வெளியிட்டு வந்த திங்கள் வெளியீட்டிற்கு 'அறிவுக்கடல்' என்றும் 'சமரச சன்மார்க்க நிலையத்தைப் பொதுநிலைக் கழகம் எனவும் பெயர் மாற்றம் செய்தார்.

தனித்தமிழார்வம் கொண்ட அம்மையார் தன் தம்பிமார் நால்வரில் திருநாவுக்கரசு தவிர வடமொழிப் பெயரமைந்த மூவருக்கும் தனித் தமிழாற் பெயரமைத்தார். திருஞானசம்பந்தத் திற்கு 'அறிவுத் தொடர்பு' என்றும் மாணிக்க வாசகத்திற்கு 'மணிமொழி' என்றும் சுந்தரமூர்த்திக்கு 'அழகுரு' என்றும் தங்கை திரிபுரசுந்தரிக்கு 'முந்நகரழகி' என்றும் மொழிபெயர்த்துத் தனித்தமிழ்ப் பெயர்களைச் சூட்டினார். உடன்பிறந்தாரை இத்தனித்தமிழ்ப்

---

4. மறை திருநாவுக்கரசு-மறைமலையடிகள் வரலாறு ப. 297 (இந்நிகழ்ச்சி 1916 ல், நீலாம்பிகையின் பதின்மூன்றாம் அகவையில் ஏற்பட்டதென்றும் கூறுகிறார். எனவே தனித்தமிழ் இயக்கம் 1916ல் உருவானதெனலாம்)

பெயர்களாலேயே எப்போதும் அழைத்தும் வந்தார் எல்லாச் சொற்களையும் 'இவை தமிழா, அயன் மொழியா' என்று அடிகளாரோடு சீர்தூக்கிப் பார்த்துச் சற்றும் வழுவாத தனித்தமிழ்ச் சொற்களிலேயே எப்பொழுதும் பேசியும், எழுதியும் வந்தார்.

இவ்வாராய்ச்சியில் இவர் பெரிதும் ஈடுபாடு கொண்டு, அதற்காகத் தந்தையாரிடம் வடமொழியைக் கற்றார். அவருடைய காலத்தில் தனித்தமிழுக்கு பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது.

> "அன்றியும்
> தமிழ் நூற்களவிலை அவற்றுள்
> ஒன்றேயாயினும் தனித்தமிழுண்டோ?
> அன்றியும் ஐந்தெழுத்தால் ஒரு பாடையென்று
> அறையவும் நாணுவர் அறிவுடையோரே
> ஆகையால் யானும் அதுவே அறிக;
> வடமொழி தமிழ் மொழிஎனுமிரு மொழியினும்
> இலக்கண மொன்றே யென்றேஎண்ணுக"

என்று இலக்கணக் கொத்தின் ஆசிரியர் சுவாமிநாத தேசிகர் போன்றோர் பிறசொற்கலப்பை ஆதரித்தனர்.[5]

'ஒன்றேயாயினும் தமித்தமிழ் உண்டோ'? என்ற தேசிகரின் கேள்விக்கு விடையளிக்கும் வகையில் தனித்தமிழில் பல கட்டுரைகளை அம்மையார் எழுதினார். அவை திராவிடன் தேசாபிமானி, ஆனந்த போதினி 'ஒற்றுமை' தமிழ்நாடு போன்ற இதழ்களில் வெளியாயின. அவற்றுள் பதினைந்து கட்டுரைகளைத் தொகுத்து 1925இல் தனித்தமிழ்க் 'கட்டுரைகள்' என வெளியிட்டார். மறைமலையடிகளாரும் தாம்

---

5. வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் இலக்கிய வரலாறு ப. 19.

முன்னரே எழுதிய நூல்களில் உள்ள அயல்மொழிச் சொற்களை அடுத்த பதிப்புக்களில் நீக்கியும், அவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்களை உரிய இடங்களில் புகுத்தியும் 'புதிதாக எழுதிய நூல்களில் அறவே அயன்மொழிச் சொற்களைக் களைந்தும் தனித்தமிழைப் போற்றி வளர்த்தார் தனித் தமிழ்த் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் முதற்காரணமா யிருந்ததோடு தனித்தமிழில் முதன் முதல் 'தனித்தமிழ்க் கட்டுரைகள்' என்ற நூல்யாத்த பெருமை நீலாம்பிகை அம்மையாரையே சாரும்.

## தாய்மொழிக் கல்வி

நாம் நம்முடைய தாய்மொழியை நன்றாகக் கற்றுத் தேர்ச்சியடைந்த பின்னரே பிறமொழிகளைக் கற்றல் வேண்டுமென்கிறார். இல்லாவிடில் நம்மறிவு இரண்டிலும் நிரம்பப் பெறாமல் குறைவுடையதாகவே இருக்கும் எங்ஙன மெனில் ஒரு வலுவற்ற தூணின் மேல் வலிய சுமைகளை யோங்றினால் அத்தூண் அவற்றைத் தாங்காது முறியும். அதுபோல், நாம் நம் தாய் மொழியில் நம்மறிவை வலுப் படுத்துவதற்கு முன்னரே அயல்நாட்டுக் கல்வியைக் கற்றால் தாய்மொழியிலும் தேர்ச்சியடைய மாட்டோம், பிறமொழி யையும் கற்றல் இயலாது என்கிறார்.

## தனித்தமிழ்ப் பாதுகாப்பு

இந்நாவலந்தீவில் வழங்கும் தமிழ் ஆரியம் முதலான மொழிகளையும், ஐரோப்பா ஆசியா போன்ற இடங்களில் வழங்கும் மொழிகளையும் நுணுக்கமாகவும் விரிவாகவும் ஆராய்ந்த பர். கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்

---

6. தி. நீலாம்பிகையம்மையார் 'ஒழுங்கான கல்வி தனித்தமிழ்க் கட்டுரைகள், ப. 9.

கணம்[7] என்ற நூலை எழுதினார். தனித்தமிழின் சிறப்பைத் தமிழர் அறிந்து கொள்ளவும் இந்நூலே காரணமாயிற்று எனலாம். வடசொற்களை நீக்கிக் கொள்வது என்பது தெலுங்கு, மலையாளம், கன்னடம் இவற்றால் முடியாத தாகும். வடமொழியிலிருந்து ஏராளமான சொற்களை இவை கடன் வாங்கியிருத்தலே அதற்குக் காரணம். ஆனால் திராவிட மொழிகளுள் மிகவும் பண்பட்ட தமிழ் வடசொற்களை அறவே களைந்து விடவும், தானே தனித்து நிற்கவும் வல்லது என்று கால்டுவெல் தம் நூலில் கூறுவதாக நீலாம்பிகையார் குறிப்பிடுகிறார்.[8]

பிறமொழியின் உதவியின்றிப் பேசவும் எழுதவும் போதுமான சொற்கள் தமிழில் உண்டு என்பது மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்ட தொல்காப்பியத்தாலும் திவாகரம், பிங்கலந்தை போன்ற நூல்களாலும் அறியலாம் தமிழின் வளர்ச்சிக்கு வடசொற்கலப்புத் தேவை எனவும் ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிப்பெயர்த்து எழுதும் போது வடசொற்கள் இன்றியமையாது சேர்க்கப்பட வேண்டும் என்றும் சிலர் கூறுவர். இது பொருந்தாது. மொழி பெயர்ப்புக்கு வடமொழியின் உதவி தேவையற்றது. தமிழில் ஒரு பொருளை உணர்த்துவதற்குப் பல சொற்களும் பல பொருள்களை உணர்த்த ஒரு சொல்லும் உண்டென்பதைப் பிங்கலந்தை உணர்த்தும்.

இயல்பினை உணர்த்த 21 சொற்களும்
உயர்வினை உணர்த்த 17 சொற்களும்
வலியினை உணர்த்த 34 சொற்களும்
அச்சத்தினை உணர்த்த 19 சொற்களும்
மலையினை உணர்த்த 28 சொற்களும்

7. Dr. Caldwell, The Comparitiue Grammar of the Drauidian Languages
8. நீலாம்பிகையம்மையார், தனித்தமிழ்ப் பாதுகாப்பு தனித்தமிழ்க் கட்டுரைகள், ப. 42,

உள்ளன இங்ஙனம் மொழிபெயர்க்கப் போதுமான சொற்கள் தமிழில் இருக்கும் போது வடமொழியின் துணை தேவையில்லை என்பது அம்மையார் கருத்து.[9] மொழிக்குப் பாஷை யென்றும், மகிழ்ச்சிக்குச் சந்தோஷம் என்றும், அன்புக்குப் பக்தி என்றும் சொன்னால் என்ன என்று சில கேட்கின்றனர் மெல்லோசை உடைய தமிழ்ச் சொற்களை விடுத்து வல்லோசை உடைய சமற்கிருதச் சொற்களை வழங்குதல் எப்படியிருக்கிறதென்றால் ஒருவன் தனக்கு அரிதிற் கிடைத்த இன்சுவைப் பண்டங்களை வீசியெறிந்து விட்டு, இல்லந்தோறும் சென்று ஊசிய உணவை இரந்துண்பதற்கு ஒப்பாகும் என்கிறார்.[10]

எல்லாப் பொருட்களையும் உணர்த்துவதற்குத் தமிழில் சொற்கள் இருக்க அவற்றை வழங்காமல் பிறமொழிச் சொற்களை எடுத்து வழங்குவோமெனில் நாளடைவில் தமிழ்ச் சொற்கள் இல்லாமலே போய்விடுமென்று வருந்துகிறார். ''அம்மையார்அம்மையார் காலத்தில் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த ஒருவர் 'இந்து சாதனத்தில் தமிழ் வளர்ச்சி, என்ற கட்டுரை எழுதினார். ஆங்கிலக் கலப்புக் கூடாதென்று எழுதியவர், தம் கட்டுரையின் முதல் முப்பது வரிகளுக்குள் பாஷை,மனிதர், இருடிகள் அநேகர், சங்கம், சுத்தி, சரஸ்வதி, அவதாரம் இராஜாக்கள். வித்துவான், நியமம், பிரயாணம், அங்கீகரித்தல் போன்ற வடசொற்களை எழுதியுள்ளார் இவ் வடசொற்களுக்கு நேரான செந்தமிழ்ச் சொற்களாகிய மொழி, மக்கள்,முனிவர்கள், பலர், கழகம், துப்புரவு, கலைமகள் பிறப்பு, அரசர்கள் 'புலவ்ன், முறை மேற்கோள் ஏற்றுக் கொள்ளல் போன்ற தூயதமிழ்ச் சொற்களிருக்கையில் இங்ங

9. மே. நூல்-ப. 44
10. மே. நூல். மே ப.
11. மே. நூல்-ப. 45

ஊம் புலவர்கள் வடசொற்களைச் சேர்த்து எழுதினால் தமிழ் எப்படி வளர முடியும் என்று வருத்துகிறார். அம்மையார் உரிய சொற்கள் இருக்கும் போது தேவையில்லாமல் பிற சொற்களைத் தமிழில் கலத்தலை மறைமலையடிகளாரும் விரும்பவில்லை.

"இயற்கைச் சொற்களால் அமைந்ததாகிய தமிழிற் பிற மொழிச் சொற்களைப் புகுத்துதல் எதுபோலிருக்கிறதென்றால், எல்லா உறுப்புக்களும் அமைந்த அழகியதோர் உடம்பில் உள்ள உறுப்புக்களை வெட்டி எறிந்துவிட்டு, வேறு மண்ணாலும் மரத்தாலும் செயற்கையாக அவ்வுறுப்புகள் போற் செய்து அவற்றை அதன்கண் ஒட்டவைத்துப் பார்த்தலுக்கேஒப்பாயிருக்கின்றது"[12] என்கிறார்.

## தமிழைப் பற்றிய வினாக்களுக்கு விடை

இக்கட்டுரையில் மூன்று வினாக்களை விடுத்து அவற்றுக்கு விடையளிக்கும் வகையில் தனித்தமிழைப் பற்றிய தமது கருத்துக்களை வலியுறுத்துகிறார் அம்மையார் முதல் வினா உலகிலுள்ள மக்களெல்லாரும் மாற்றமடைந்து கொண்டேயிருப்பதால், மொழியும் பிற மொழிக்கலப்பால் மாறுதலடைதல் இயற்கைதானே? என்பர் சிலர்.

மக்கள் எல்லோரும் பிறந்த நாளிலிருந்து இறக்கும் நாள்வரை தம்மில்தாமே மாறுதலடைந்து வருகின்றார்களே தவிர ஆண் பெண்ணாகவாவது, பெண் ஆணாகவாவது மாறுதலடைந்திருக்கிறார்களா? இல்லையே? ஓரறிவுடைய உயிர்கள்கூட தம்முடைய அடிப்படைத் தன்மை மாறாமலே, வளர்ச்சியடைந்துள்ளன. தமக்கும் பொருந்தாத பொருள்களோடு கலந்து தமது நிலைகுலைந்து மாறி இறப்பதை

12. மறைமலையடிகளார், 'தனித்தமிழ் மாட்சி' அறிவுரைக் கொத்து ப. 119

எவ்வகைப்பட்ட உயிரும் விரும்புவதில்லை. அதேபோல மொழியின் வளர்ச்சிக்கு ஏதுவாகிய மாறுதலாயின் ஏற்றுக் கொள்ளலாம், மொழியின் வளர்ச்சி குன்றி மாய்வதற்குரிய ஏதுவாயின் அது விரும்பத்தக்கதன்று தேவையின்றி வட சொற்களைப் புகுத்தி எழுதியதால் தூய தனித் தமிழ்ச் சொற்களாகிய 'வழிபாடு' 'திருமுழுக்கு, தேவுணல, 'திரு விளக்கு, திருவிழா, மணம், சோறு, கூறை போன்ற சொற்கள் வழக்கற்றுப் போய்விடுகின்றன. எனவே பிறமொழிக் கலப்பு மொழிக்கு ஆக்கம் தருவதன்று என்கிறார்.[13]

இரண்டாவது வினா: ஒரு செல்வனுக்குப் பொருள் மேன்மேலும் சேர்வதால் அவன் பெருஞ் செல்வனாதல் போல, தமிழிலும் நிறைய சொற்கள் இருந்தாலும் பிற மொழிச் சொற்களையும் தன்னிடத்தே சேர்த்துக் கொள் வதால் தன் வளம் கூடாதோ? என்ற வினாளை விருப்பவர் களுக்கு விடை கூறுகிறார்.

ஒரு செல்வன் பெரிதும் முயன்று தன் பொருளையே பெருக்கினால் அவன் செல்வனாவான். அதை விட்டு விட்டு பிறரிடம் கடன் வாங்கித்தன் செல்வத்தைப் பெருக்க நினைத் தால் அவன் செல்வம் பெருகுமா? அது போலத் தமிழும் பிற மொழிகளிலிருந்து கடன் வாங்குவதால் வளராது. அது மட்டுமல்ல, அளவுக்கு மிஞ்சிய செல்வம் இருப்பவன் தன் பொருளைச் செலவழியாது, பிறரிடம் சென்று கடன் கேட்டால் அவனை எல்லோரும் நகையாடுவர். அதுபோல தமிழர்கள் தம் மொழியில் அளவற்ற சொற்கள் அமைந் திருக்க அவற்றைப் பயன்படுத்தாது பிறசொற்களைக் கடன் வாங்கித்தமிழை வளப்படுத்துகிறோம் எனல் பொருந்தாது[14] என்கிறார்.

---

13. நீலாம்பிகையம்மையார் தமிழைப்பற்றிய வினாக் களுக்கு விடை, தனித்தமிழ்க் கட்டுரைகள், ப. 53
14. மே. நூல் ப, 54

## தமிழில் வடமொழி கலத்தல் ஆகாது

சமற்கிருதக் கலப்பால் ஐந்நூறு ஆண்டுகளாக தமிழ் மொழி சீர்குலைந்துள்ளது. தமிழுக்குக் கேடு செய்பவர்கள் தமிழரேயன்றி வேறு மொழிக்குரியாரல்லர். இவர்கள் வடமொழியையும் தமிழையும் இரண்டு கண்கள் போல் பாது காத்தல் வேண்டுமென்கின்றனர். வடமொழியைக் கண் போல் பார்ப்பதற்குப் பார்ப்பனர்கள் முன் வந்துள்ளனர். ஆனால் தமிழர்களில் தமிழைக் கண் போல் நினைத்து பாது காப்பவர் ஒரு சிலரேயாவர். தமிழரில் பெரும்பாலார் சிறிது பழுது பட்டிருக்கிற தமிழாகிய கண்ணைப் பாதுகாவா விடினும் விடுக! அக்கண்ணை மேலும் மேலும் வடசொற் கலப்பாகிய இருப்புக் கோல் கொண்டு குத்திப் பாழ்படுத்த மலிருந்தால் போதும்![51]

இரண்டு கண்களில் ஒன்று பழுதுபட்டு இறந்தபின் அதனை உயிர்ப்பித்தல் இயலாது அதைவிடச் சிறிது நோய் வாய்ப்பட்டு உயிரோடிருக்கும் மற்றொரு கண்ணைப் பாது காத்தலே நல்லது அதன் வழியாக உலகில் உள்ள பொருட் களைக் காணலாம். அதுபோல சொல்

வழக்கில் இல்லாது இறந்து போன சமஸ்கிருதத்தை உயிர்ப் பித்துப் பயன் இல்லை. தமிழைப் பாதுகாத்தலே தகும் யுடைய செயலாகும்.

ஒரு மொழிக்குரியார், பிற மொழியாருடன் பழகும் போது சொற்கலப்பு ஏற்படல் இற்யகை ஆரியர் வருகையால் வடசொல்லும், ஆங்கிலேயர் வருகையால் ஆங்கிலச் சொற் களும், துருக்கர் வரவால் நாஸ்தா, ஜலவாதி, ஜாஸ்தி, சபாஷ் போன்ற இந்துஸ்தானிச் சொற்களும் கலந்தன. இங்ஙனம் கலந்தாலும் பேச்சு வழக்கில் உள்ளது போலவே

---

15. மே. ப. 65

எழுதக் கூடாது பிறசொற்களைக் களைந்து நல்ல தமிழில் எழுதவும் பேசவும் வேண்டும் என்று கூறும் அம்மையார் இதனை ஒரு உவமை மூலம் விளக்குகிறார். நாம் பருகும் நீரில் நச்சுப் புழுக்கள் நிறைந்துள்ளன. அறிவுடையார் அந் நீரை நன்றாகக் காய்ச்சி, அந்நச்சுப் புழுக்கள் இறந்தபின் வடிகட்டி அருந்துவர். இயற்கையிலேயே சொல்வளமிக்க நம் தமிழில் பிறமொழிச் சொற்கள் என்ற நச்சுப் புழுக்கள் கலந் துள்ளன. நாம் பிறமொழிச் சொற்களாகிய நச்சுப் புழுக் களைத் தமிழாகிய தண்ணீரினின்றும் வடிகட்டித் தெளிந்த தீந்தமிழ்ப் புனலைப் பருகவேண்டும். நச்சுயிர் நிறைந்த நீரை அப்படியே பருகுவர் அதனால் தம் உயிரை இழத்தல் போல தூய்மையற்றக் கலப்புத் தமிழைப் பயன்படுத்தினால சில நூற்றாண்டுகளில் தமிழர் என்னும் வகுப்பாரே இர் ரென்னும் படி மறைந்து விடுவர்.[16] என்று வருந்துகிறா' அம்மையார்.

## பெண்மக்களின் அறிவும் ஆண்மையும்

இக்கட்டுரையில் தமிழர் பண்பாடு பெண்களைப் போற்று வதையும், வடநூல்கள் பெண்மையைத் தூற்றுவதையும் ஒப்பிட்டுக் காட்டி இருவர் பண்பாடுகளும் மாறுபட்டுள்ள தைச் சுட்டுகிறார். சமஸ்கிருத நூல்களில் பெண்கள் மிகவும் தாழ்த்தப்பட்டிருக்கிறார். 'காசிக் காண்டம்' 'மனுமிருதி, முதனிய நூல்களில் பெண்கள் விலங்கினும் கடைப்பட்டவர் களாகக் கருதப்பட்டனர் ஆண்மக்கள் எப்படிப்பட்ட தீய இயல்புடையவர்களாயிருப்பினும் அவர்களே உயர்ந்தவர்கள் பெண்மக்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாயிருப்பினும் அவர் கள் அத்தீயவர்களுக்கு அடிமைகளே என்று முறை தவறி எழுதப்பட்டுள்ளது. ஆனால் நம் தமிழ் நூல்களில் ஒன்றி லேனும் பெண்பாலரைக் குறைத்துக் கூறும் ஒரு சொல்

16. மே. நூல். ப. 68

லேனும் சொற்றோடரேனும் காணல் இயலாது தொல்காப்பியம் இறையனாரகப் பொருள் திருச்சிற்றம்பலக் கோவையார் முதலான நூல்கள் பெண்களைத் தலைவியர் என்ற நிலையில் வைத்துப் புகழ்கின்றன புறநானூறு, கலித்தொகையில் பெண்மக்களால் இயற்றப்பட்ட பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன இங்ஙனமிருக்கையில் நம் பண்பாட்டுடன் மாறுபட்ட வடமொழியின் தொடர்பு மொழிக்குத் தீமையையே விளைவிக்கும் என்கிறார்.[17]

## வடசொற்றமிழ் அகரவரிசை

இந்நூலில் தமிழில் கலந்துள்ள வடசொற்களைத் தொகுத்து அவற்றுக்கு நேரான தமிழ் மொழி பெயர்ப்புடன் வெளியிட்டுள்ளார். நூலின் முன்னுரையில் அம்மையார் கூறுகிறார், ''எழுநூறு ஆண்டுகளாக நந்தண்டமிழ் மொழியில் ஏராளமாக வடசொற்கள் கலந்து விட்டன. இங்ஙனம் தமிழின்கண் வடசொற்கள் பலவந்து புகுந்தபின் பழந்தமிழ்ச் சொற்களிற் பல வழங்காதொழிந்தன தமிழிற் கலந்து அது தன்னை முற்றும் வேறுபடுத்தும் வடசொற்களை இப்போதே நாம் தடை செய்யர்விடின் தமிழ் தன்னிலை கெட்டு வேறு மொழி போலாகுமென்பதற்கு ஒரு சிறிதும் ஐயமில்லை தமிழின்கண் வடசொற்கள் நிரம்பவும் விரவினமையால் இவைதாம் தமிழ்ச் சொற்கள் இவைதான் வடசொற்கள் எனத் தமிழ்மக்களிற் பெரும்பாலார் பிரித்தறியக் கூடாதவாறு அவை இவை மயங்கிகிடக்கின்றன. ஆகவே, இக்காலத்துத் தமிழ் மக்களிற் பெருந்தொகையினர், வடசொற்களையுந் தமிழ்ச் சொற்களையும் பிரித்தறிய முடியாதவர்களாகித் தாமெழுதுங் கட்டுரைகளிலும் நூல்களிலும் வடசொற்களைச் சேர்த்தெழுதியும், அவற்றைத் தமிழ்ச்சொற்களாகவே பிழைபடக் கருதியும் தமிழின் தூய்மையையும்

17. மே. நூல் ப. 83.

பழமையையும் இனிமையையும் கொடுத்து விடுகின்றார்கள்,' பிற சொ கலப்பால் தமிழ்ச் சொற்கள் வழக்கற்றுப் போய் விடுகின்றன. இவற்றைக் கண்டு வருந்தி தனித்தமிழில் எழுதவும் பேசவும் உதவும் பொருட்டு ஏறத்தாழப் பதினைந் தாண்டுகாலம் முயன்று உழைத்து இவ்வடசொற்றமிழ் அகரவரிசையை உருவாக்கியதாக[18] அம்மையார் குறிப் பிடுகின்றார்.

ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் புலமை பெற்றிருந்த காரணத்தால் இருமொழிகளிலும் உள்ள பழமொழிகளைத் தொகுத்து, ''ஆராய்ந்தெடுத்த அறுநூறு பழமொழிகளும் அவற்றிற்கேற்ற ஆங்கிலப் பழமொழிகளும் என்ற நூலை எழுதியுள்ளார்.

சமய உணர்வு மிக்கவராதலால் மங்கையர்க்கரசியார், திலகவதியார், காரைக் காலம்மையார் இவர்களின் வாழ்க்கை வரலாற்றை முப்பெண்மணிகள் வரலாறு என எழுதியுள்ளார்.

மேனாட்டுப் பெண் மணிகளைப் பின்பற்றி சமூகத் தொண்டு, வீரம் மருத்துவத்துறை இவற்றில் நம் பெண் களும் முன்னேற வேண்டும் என்று விரும்பி பிளாரன்சு நைட்டிங்கேல், ஜோன் ஆப் ஆர்க், எலிசபெத் பிரை பெரு மாட்டி இவர்களின் வரலாறுகளைத் தூயதமிழில்

'மேனாட்டுப் பெண்மணிகள்' எனும் தலைப்பில் எழுதி யுள்ளார்.

இங்ஙனம் தம் வாழ் நாள் முழுதும் தனித்தமிழ் வளர்ச்சிக்காகவே உழைத்த அம்மையாருக்கு நாம் தனித் தமிழில் எழுதியும், பேசியும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

---

18. நீலாம்பிகையம்மையார், வடசொற்றமிழ் அகர வரிசை முன்னுரை.

# தமிழ்ச்சுடரின் தனித்தமிழ்த்தொண்டு

**பூங்குன்றன் க. இ., இல. கல். இ.**
தமிழாசிரியர் பழனி.

காலமறியாக் காலத்தே தோன்றிக் கவினுடைக்கன்னி யாய்க் கற்றவர் கருத்திலுறைந்து களி நடம் புரிந்து வழி நடத்திச் செல்லும் வண்டமிழ் மொழியே விழி நிகர் நந்தமிழ் மொழி கன்னியாய், கற்புக்கரசியாய் வாழ்பவள் நமது தமிழன்னை.

மேகலை மின்ன, சிந்தாமணி ஒளிசிந்த, குண்டலம் குலுங்க, சிலம்பு ஒலிக்க, வளையல் விளையாட, அகமும் புறமும் அழகுமிழ, பத்துப் பட்டால் பாவலர் புகழ் பாட, பதினெண் கணக்கால் பருவம் திகழ, எட்டுத்தொகை வண்ணத்தால் தீட்டப்பட்ட ஒளிமிக்க உயிரோவியமாய், எழுத்தாலும் சொல்லாலும் எடுத்துரைக்க முடியாத எழிலான அணிமணி பெற்று, பன்னிற நூல் தொடையால் பின்னிய மென்துகில் அணிந்து, பூங்கொடி போல் சீராக அசைந்து, தன் செந்நிற அடிகளால் பொன்னிறப்பசுந் தமிழ் நன்னாட்டில் பொலிவுடன் நடைகாட்டி நலம் ஊட்டி இலங்குபவளே நம் தமிழன்னை.

முக்கடல் 'வெற்றி, வெற்றி' என முழங்க, மூவேந்தர் 'வீரம்' விளங்க, முக்கனிகள் நல்லின்பம் வழங்க, முத்தமிழ் இசை எங்கும் இலங்க, முச்சங்கம் நற்றங்கமெனத்துலங்க மூவாச் சிறப்புடைத்தாய்த் திகழ்ந்தது வளம்பல கொண்ட பழந்தமிழ்நாடு. இத்தகுபீடுடை இன்றமிழ்த் தொட்டிலில் இனிதாய் வளர்ந்தனள் எழிற்றமிழன்மை நாளொரு புதுமை

யும் பொழுதொரு பெருமையுமாக நற்பணியாற்றிடும் தமிழ்ச் சுடரின் தண்டமிழ்த் தொண்டினை விருப்பு வெறுப்பகற்றி விளக்கப்புகுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பெயர்: 'தமிழ்ச்சுடர்' எனும் பெயரே தமிழின்பால் கொண்டுள்ள தனிப்பற்றைக் குறிப்பதோடு, தமிழொளியை மக்களுக்குத் தந்து வழிகாட்டுவதில் முன்னிற்பது, முனைந்து நிற்பது என்பதைக் குறிக்கிறது. தொடர்ந்து வரும் இதழ்களின் தொடர் எண்களைக் குறிப்பதில் 'சுடர்' என்றும், சுடரிலிருந்து ஒளி நல்கும் ஒளிவீச்சு எனும் பொருளில் 'கதிர்' என்றும் குறிப்பிட்டுள்ளமை பாராட்டத்தக்கதாயமைந்துள்ளது. முகப்பில் அமைந்துள்ள 'ஒளிக்கோல்' ஓவியத்தின் கண் 'ஒளியின்றேல் உலகில்லை—தமிழொளியின்றேல் எம் மொழியுமில்லை' என்பது போன்ற கருத்தும் உட்பொதிந்து உளநிறைவூட்டுகிறது.

தோற்றம்: அமரர்பூண்டி எனும் அழகூரில் 1977-ல் கையெழுத்தேடாகத் தோன்றி தமிழ் அன்பர்களிடையே அறிஞர்டையே மட்டுமே உலவிக்கொண்டிருந்த தமிழ்ச்சுடர், ஆசிரியர் குழுவினரின் அயரா முயற்சியாலும் பொறுப்பாசிரியர் மணிமுத்துவின் பொங்கும் தமிழுணர்வாலும் பழனித் திருநகரிலிருந்து 1979 முதல் அச்சில்வடிக்கப்பட்டு அனைத்துத் தமிழ்மக்களிடையேயும் அருந்தமிழ்ப்பணியாற்றி வருகிறது.

நோக்கம்: 'நாடும்மொழியும் நமதிருகண்கள்' என்பதே குறிக்கோளாகக் கொண்டு,

'இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்',

என்று சூளுரைத்துச் செயலாற்றிவருகிறது தமிழ்மொழிக்கும் நாட்டுக்கும் இம்மியளவு கேடெனினும் அஞ்சாது எடுத்துரைத்து விழிப்புணர்ச்சியுண்டாக்கி வருவதும் ஈழத்தமிழரின்

இன்னல்களைய ஓங்கிக்குரல் கொடுத்து வருவதும் கொண்ட கொள்கையில் நின்றிலங்குகிறது. தமிழ்ச்சுடர் என்பதைப் பறை சாற்றுகிறது.

அச்சிதழாக வெளிவரத் தொடங்கியபின் தமிழ்ச்சுடர் ஆற்றிய பணிகள் பற்பல. தமிழ்ச்சுடர் ஆண்டு விழாக்கள் தொடர்ந்து நடந்துள்ளன. கலந்துரையாடல் நிகழ்ச்சிகளால் தனித்தமிழ்த் தொண்டின் முயற்சி, முன்னேற்றம் ஆயப்பட்டன. தமிழ்ச் சுடரின் குறை நிறைகளும் கூறப் பட்டு, குறைகளையும் பணி மேற்கொள்ளப்பட்டது. மக்கள் முன்னிலையில் நிகழ்வுற்ற இத்தகு நிகழ்ச்சிகளால் பொது மக்களுக்கும் தனித்தமிழ்ப்பற்றும், தனித் தமிழ்ச் சொற்களின் சிறப்பும் நன்குணர்த்தப்பட்டன எனலாம்.

தமிழ்ச்சுடர் நடத்திய விழாக்களில் முடி மணியாக விளங்குவது 'ஆய்வுகள் - தீர்வுகள்' நூல் வெளியீட்டு விழா எனலாம்.

நிறைகள் : தமிழ்ச்சுடர் எழுத்துப்பணியில், தனித் தமிழ்த் தொண்டாற்ற இடைவிடாது முயன்று வருகிறது என்பதை வெளியீடுகளின் வாயிலாய் அறியமுடிகிறது.

ஆசிரியர் கருத்துக்களைத் தாங்கி வெளிவந்திருக்கும். 'ஆசிரியர் பகுதி'களில் உரைநடையும் பாநடையும் மாறி மாறி அமைந்துள்ளன. யாவும் தமிழேற்றத்திற்கே என்பதை அவரது உள்ளக்கருத்திலிருந்து உணர முடிகிறது. அஞ்சாது அகவெழுச்சியைத் தனித்தமிழில் வெளிடும் அவரது ஆற்றலைப் பாராட்ட வேண்டும். ஆசிரியரின் ஒவ்வொரு சொல்லிலும் 'தமிழ்ச்சுடரின் தலையாய பணி தனித்தமிழ்த் தொண்டே', என்பது தெற்றெனப்புலனாகிறது. ஆசிரியர் (மணிமுத்து) மொழி, அரசியல், குமுகாயம், பொருளியல் பற்றி எக்கருத்தெழுதிடினும் தனித்தமிழில் எழுதும் நோக்கத்தைச் செயலாக்க இயன்றவரை முயன்றுள்ள முறை மற்றவர் பின்பற்ற வேண்டிய முதன்மையான தொன்றாகும்

கட்டுரைகள் : பலர் பல பொருள்கள் பற்றியும் கட்டுரைகள் வரைந்திருப்பினும் முற்போக்குக் கட்டுரைகள் எழுதுபவர்களில் பட்டினியாளனே முன்னிற்கிறார். இவர். பொருளியல், அரசியல், குமுகாயவியல் கட்டுரைகலளப் பொதுவுடைமை நோக்கோடு படைத்துள்ளார். கல்வி, அறிவியல் பற்றியும் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. கலந்துரையாடல், நேர்முக உரையாடல் பற்றியும் ஆசிரியர் எழுதியுள்ள கட்டுரைகள் புதிய முறையில், எளிய தமிழில் அமைந்துள்ளன. 'திறனாய்வு'க் கட்டுரைகளும் 'நூல்நிறை'க் கட்டுரைகளும் தமிழுணர்வைத் தூண்டுவனவாகவுள்ளன. 'பெண்ணின் துயரத்தில் குமுகாயத்தின் பங்கு' பற்றி எழுதியுள்ள நீ முத்துலக்குமி பாராட்டப்பட வேண்டியவராவர். 'பாவாணர் யார்?' எனும் கட்டுரை பலரும் பாவாணரை நன்கு புரிந்து கொள்ளத் துணை புரியும். தனித்தமிழ்ப்பணியின் தன்னேரிலா முயற்சியைத் தாழ்த்தும் வண்ணம் 'தனித்தமிழ் ஒப்பாரி' என்ற தலைப்பில் கட்டுரை வரைந்த திண்டுக்கல் திலகாவுக்குத் தனிப்பாவாலேயே தக்க விடையிறுத்துத் தமிழ்ச் சுடராய் ஒளிவீசுகிறார் மணிமுத்து.

சிறுகதைகள் : சிறுகதைகளை நல்ல தமிழில் எழுதும் பாங்கினை ஏறக்குறைய எல்லோரும் கைக்கொண்டுள்ளனர் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். கதைக்கருத்துக்கள் பல தாளிகைகளில் வெளிவருவன போன்றே அமைந்திருப்பினும் சிறுகதைகளில் தனித்தமிழ்ச் சொற்களைக் கையாளவியலும் என்பதைத் தெளிவாகக் காட்டுதற்குத் தமிழ்ச்சுடர் தூண்டலாக விருப்பதைத் தனிச்சிறப்பாகக் கருதலாம். தொடர்கதைகள் சிலவும் வெளிவந்துள. இம் முறையில் அழகன் செல்வன் அளித்துள்ள 'ஊமைநாடகம்' தமிழ்ச்சுடர்க்கு அழகூட்டுகிறது. மலர் எழுதிய சிலகதைகள் மணக்கின்றன. செம்பவளம் வரைந்துள்ள சில செம்மையாக

அமைந்து செழிப்பூட்டுகின்றன. 'விருந்து' எனும் தனித்தமிழ் சிறுகதைத் தொகுப்புக்குத் தக்கமுறையில் விளக்கமான திறனாய்வு தந்து,-தனித்தமிழில் சிறுகதைகள் வழங்கிய க. தமிழமல்லனைப் பாராட்டியதன் வழி தனித்தமிழ்ப் பணியாளர்களைத் தமிழ்ச்சுடர் மிகுதியும் மதிப்பளித்துத் தனித்தமிழ் வளரப் பெரிதும் தூண்டலில் வெற்றி நடையிடுகிறதெனலாம்.

பாக்கள் : தமிழ்ச்சுடர்ப்பணியில் தலையாய பணியாக எண்ணத்தகும் ஏற்றம் பெறுவது பாக்கள் வெளியீடேயாகும் இளம்பாவலர்கள் பலரை இன்றமிழில் உருவாக்கிய பெருமை எண்ணியெண்ணி மகிழத் தக்கதாகும். மரபுப் பாக்கள், உரை வீச்சுக்கள், வெண்பாக்கள் (வெண்பாப் போட்டிகள்) பலவும் இதழ்களில் தொடர்ந்து இடம் பெற்றுள்ளன. ஆசிரியரே பல கருத்துக்களைப் பாவடிவாகவே வழங்கி உணர்வூட்டியுள்ளார். பாக்கள் வழங்கியவர்கள் பலருளர். பாப்படைப்பாளர்களில் வலசூரார் பணி பயனுடைத்தாயமைந்து கவினுடைத்தாயிலங்குகிறது. இவரது பாடல்களில் ஓசை நயம் நன்கமைந்து உளப்பதிவுண்டாக்குகிறது. நடப்பியற் கருத்துக்களை நன்முறையில் நவின்று நாடு நலம் பெற வேண்டுகிறார்.

மரபுப்பாக்கள் சில பூங்குன்றனால் படைக்கப்பட்டுள்ளன. உரைவீச்சுக்களிடையே இவற்றைப் படிக்கும் போது மரபுப்பாவின் சுவைநலம் நன்கு புலனாகிறது. பவானி. தமிழ்வேந்தன், கன்னல், ஓடவை. தமிழ்வேந்தன், தேவத்தூரான், சுசிநெஞ்சன், கொடுமுடி ஒளியவன், புலவர் சேய், பழனி மகிழ்நன், கவியரசு இளங்கம்பன், வெண்ணிலா ஆகியோரின் பாவியற்றும் பணிகள் தமிழுக்கு அணிசேர்க்கும் மணிகளாக மிளிர்கின்றன.

உரைவீச்சுக்கள் மிகுதியாக வெளியிடப்பட்டுள்ளன. புதுக்கவிதைகள் எனப்படுவனவற்றைத் தனித்தமிழில்

தமிழ்ச்சுடர் உரைவீச்சுக்கள் என்றே உரைத்துத் தன் தகுதியை உயர்த்திக் கொள்கிறது. 'உரைவீச்சு' என்ற சொற்றொடரை உலவவிடுவதில் தமிழ்ச்சுடர் முன்னிற்கிறது எனலாம். உரைவீச்சு ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறந்த கருத்தை வலியுறுத்துவதெனினும் கோவை. இரணியனின் உரைவீச்சுக்கள் குறிக்கோளைக் குத்திக் காட்டித் தமிழுணர்வைக் கூட்டுவதில் கோலோச்சுகின்றன.

பல்வகை :- மலர்கள் வெளியீடு : பாவாணர் மலர், பொங்கல்மலர், உழவர்மலர், குழந்தைகள் மலர் எனச் சிறப்பு மலர்கள் வெளியிட்டும் செந்தமிழ்ப் பணியில் தன் சிறப்பைக் கூட்டியுள்ளது தமிழ்ச்சுடர்.

மருத்துவக் கட்டுரைகளும் மாந்த உள்ளங்கட்கு மருந்தாகப் பயன்படும் மாண்புடையதாக விளங்குகின்றன.

மொழியாக்கக் கட்டுரைகளும் பாக்களும் அயல்மொழிக் கருத்துக்களையும் அழகிய தமிழில் வெளியிடலாகும் என்பதை அறைவனவாக அமைந்துள்ளன.

நாவில் மட்டுமே நடமிட்டுவரும் நாட்டுப் பாடல்கள்சில நாட்டுப்புறப் பழக்க வழக்கங்களை நயமுற நவில்கின்றன.

'உழவர் உலகம்' எனும் குறிஞ்சி மணாளனின் கைவண்ணம் உழவுத் தொழிலுக்கு உறுதுணைபுரியும் முறையில் ஊக்கமூட்டுகின்றது.

'ஒலிம்பிக்கு விளையாட்டுக்கள்' பற்றிய செய்திகளையும் ஒண்டமிழில் வெளியிட்டுள்ளமை உன்னத்தக்க தொன்றாகும்.

'மாணவர் பகுதி'யும், 'சின்னச் சின்ன' என்ற பகுதியும் அறிவுக்கு விருந்தளித்துத் தற்கால நடப்பியற் செய்திகளை அறிந்து ஆக்கம் பெற மிகுதியும் துணைபுரிகின்றன.

'செம்பவளத்தின் விடைகள்' பலவற்றில் செந்தமிழின் சிறப்புகள் செம்மையுறச் செப்பப்படுகின்றன. 'வினாவிடைப் பகுதி'யால் விளக்கவிருந்து படைக்கப்படுகின்றது.

'நெஞ்சிற்பட்டது' எனும் பகுதியில் துடிக்கும் தமிழ் நெஞ்சங்களின் துணிவுடைக் கருத்துக்களும், படிக்கும் பல் துறையினரின் பாகு பாடற்ற திறனாய்வுரைகளும் வெளி யிடப்பட்டுத் தமிழ்ச்சுடரின் தண்டமிழ்ப்பணி மேலும் சிறக்கத் துணைபுரிகின்றன.

தனிப்பெருமை தரும் தனித்தமிழ்த் தொண்டு : 'தமிழ்ச் சுடர்' பாவாணர், பாவலரேறு, போன்ற தனித்தமிழறிஞர் களின் கருத்துக்களையும் சொல்லாய்வுகளையும் வெளியிட்டு அறிவு கொளுத்தியது. நாட்டுப்புறச் சொற்களுக்கு நல்ல தமிழ்ச் சொற்களை வழங்கி, அறியாதவர்க்கும் தனித்தமிழ்ச் சொற்களை அறியும்படி செய்தது. ஆங்கிலச் சொற்கள் பல வற்றிற்கு அருந்தமிழ்ச் சொற்களை வழங்கியது. ஆங்கிலப் பட்டங்களுக்குரிய தமிழ்ப் பெயர்களை அளித்து அளித்து மகிழ்ந்தது. பிறமொழிச் சொற்களுக்குத் தமிழில் சொற் களை ஆக்கித் தந்தது. தனித்தமிழ்ச் சொற்கள் பற்றிப் புலவர். பொன்முகிலன் எழுதியகட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டுத் தனித்தமிழுக்குத் தனியெழில் கூட்டியது. கோவையில் அங்காடிப் பெயர்ப் பலகைகளில் அழகுத்தமிழ் விளையாடுவதை எல்லோர்க்கும் தெரிவித்து எழுச்சி யுண்டாக்கியது. கரணியம், குமுகாயம் போன்ற தனித் தமிழ்ச் சொற்கட்கு விளக்கம் தந்து தமிழொளி பரப்பியது. தனித்தமிழை வெறுத்துரைத்த எழுத்தாளர்கட்குத் தக்க முறையில் விளக்கி விடையிறுத்துத் தடையகற்றியது. 'உரைகல்' எனும் பகுதியில் 'கலப்புத்தமிழே கனித்தமிழை வளர்க்கும்' எனக்கனன்று கூறிய சில தாளிகைகட்குச் சூடு கொடுத்துச் சுடர் விடுத்தது. 'மக்கள் மொழியில் எழுதுக' என்ற சிலருக்கு மருள் நீக்கி ஒளி காட்டியது. உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் ஒண்டமிழ்ப்பணிகளின் உயர்வினை ஓங்கிக் கூறி உணர்வூட்டியது. மாறி வழங்கும் மணித் தமிழ்ச் சொற்களின் உண்மை வடிவம் காட்டி, உயர் தமிழ்ச் சொற்களை உணரச் செய்தது.

| | | |
|---|---|---|
| எடுத்துக்காட்டு : | இட்ரப்புதல்— | இட்டு நிரப்புதல் |
| | கீப்பாய்ச்சி — | கீழ்ப்பாய்ச்சி |
| | தொக்கடவு — | தொக்கு+கடவு |
| | வீறாப்பு — | வீறு+காப்பு |
| | பூழைவாக்கு — | பீழை+வாக்கு |

உயர்நிலைப்பள்ளிகளில் 'தமிழ்ச்சுடர்' பரப்பி மாணவருலகம் மாண்புறு தமிழின் மணம் துய்க்குமாறு செய்தது. (மாணவரிடையே 'தமிழ்ச்சுடர்' வளர்ச்சிக்கு உற்ற துணையாய் உழைத்து மகிழ்பவர் பூங்குன்றன், காந்தி, முத்தழகர்சாமி என்பதைப் பொறுப்பாசிரியர் கூற்றால் புரிய முடிகின்றது.)

குறைகள் : தனித்த தமிழே இனித்த நறுந்தொண்டு எனும் தகவுடைக் கொள்கையைத் தலைமேற்கொண்டு திருப்பணியாற்றும் தீந்தமிழ்ச்சுடரில் அயல்மொழிச் சொற்கள் ஆங்காங்கே விரவிக் கிடப்பது நல்ல மணியரிசியிடை நறுக்கெனக் குத்தும் கற்கள் கலந்தது போல் உள்ளத்தைக் கவலுறச் செய்கிறது. திங்கள் தோறும் வெளிவரும் இதழ்கள் தொடர்ந்து வாராது இடை ஈடுபடுவது ஒளி வெள்ளத்தை இருள் தடுப்பது போன்ற உணர்வையுண்டாக்குகின்றது.

ஆசிரியர் குழுவில் அடிக்கடி மாற்றம், பக்கங்களில் கூடல், குறைதல், எழுத்துப்பிழைகள், அச்சுப் பிழைகள், ஏனிந்த நிலைகள் என எண்ண வைக்கின்றன.

முடிவுரை : இன்றுவரை வெளிவந்துள்ள முப்பத்தைந்து 'தமிழ்ச்சுடர்' இதழ்களின் தனித்தமிழ்த் தொண்டைக் கணக்கிடின் குறைகள் குண்டூசியளவெனின் நிறைகள் குன்றளவு நின்றிலங்குகின்றன.

'தனித்தமிழ்த் தொண்டே தமிழ்ச்சுடர்த் தொண்டென
இனித்தமிழ் வண்டே இசைத்திடு கண்டே'

# தனித்தமிழில் சிறுகதைகள்!

**க. தமிழமல்லன்**

தலைவர், தனித்தமிழ்க் கழகம், புதுச்சேரி

ஆயிரத்து தொள்ளாயிரத்துப் பதினாறாம் ஆண்டு மறைமலையடிகள் தொடங்கிய தனித்தமிழ் இயக்கம் பல துறை அடிப்படைப் பணிகளுடன் கருக் கொண்டது. அது, இன்று ஆழமாகவும் விரிவாகவும் வளர்ந்து வருகிறது. பல இதழ்கள் வெளி வருகின்றன. நூல்கள் பலவும் பெருகி வருகின்றன. தனித்தமிழ்க் கொள்கையின் வெற்றிக்காக நாடு முழுவதும் பல அமைப்புகள் ஏற்பட்டு நிலையான தொண்டுகளை ஆற்றி வருகின்றன. அரசின் முயற்சிகளில் தனித்தமிழ் பயன்படத் தொடங்கியிருக்கிறது.

தனித்தமிழ் இயக்கத்தைப்பற்றிப் பல்கலைக் கழகங்கள் ஆராயத் தொடங்கியுள்ளன. அது வெளிப் படுத்திய இலக்கியங்கள் ஆய்வுப் பொருளாகத் தொடங்கியுள்ளன.

எனினும் தமிழ்மொழிக்கும் இனத்திற்கும் எதிரானதும் கேடு செய்வதுமான எழுத்துகளின் வல்லாண்மையும் ஆய்வாட்சியுமே இன்று பெருகியுள்ளதால் உரிய இடம் தனித் தமிழ்க்குக் கிடைக்கவில்லை.

தனித்தமிழ் இயக்கம் தன் முயற்சிகளை நெறிப்படுத்தி நிலைப்படுத்தக் காலங்கடத்திக் கொண்டே போதல் கூடாது. அது, தன் வளர்ச்சிக்காகப் பண்படுத்தியவர்களையும் விதைத்து நீர் பாய்ச்சியவர்களையும் காத்துப் புரந்தவர்

வர்களையும் புறக்கணித்தல் கூடாது அவர்கள் மனமொடிந்து உடல் தளர்ந்து போய்விடாது பேணுதல் வேண்டும். பேணிப் பாராட்டுதலே இயக்க வளர்ச்சிக்கு உறுதுணை செய்யும்.

தனித்தமிழ்ப் படைப்பிலக்கியம் பெருகி வந்துள்ள போதும் ஆய்வாளர்கள் இப்பக்கம் கண்திறந்து சரியாகக் காண்பதில்லை. மேம் போக்கு ஆய்வுப் புலிகளே நாட்டில் பெருகி விட்டனர் போலும்.

நூல்களாகவும் இதழ்கள் வெளிப்படுத்தியவையுமான தனித்தமிழ்ச் சிறுகதைகள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. வந்துள்ள அனைத்தையும் எடுத்துக் கொண்டால் நூல் எழுதும் அளவுக்குப் பெரிதாகுமாதலின் சில கதைகள் மட்டுமே கொள்ளப்படுகின்றன.

சிறுகதை: பிறர்க்குச் சொல்ல வேண்டும் போல் தோன்றுகின்ற ஒரு நிகழ்ச்சி, சுவையுடன் சொல்லப்படும் போது கதையாகிறது. சுவையில்லாத போது செய்தியாகிறது. நிகழ்ச்சி, காண்பதிலிருந்து வேறுபட்டு அதினின்று புதிதாக, கற்பனையாகப் படைக்கவும் படலாம். சிறுகதையும் ஒரு பாடலைப் போன்றதே பாவலனின் உணர்ச்சிகளையும் அழகுகளையும் சிறுகதையிலும் காணலாகும்.

சிறுகதை இலக்கணம்: சிறுகதைக்குக் கூறப்பட்டு வந்துள்ள வரையறைகள் எல்லாம் மாற்ற முடியாத கட்டுப்பாடுகள் அல்ல. ஆய்வாளர் யாவரும் பொதுவாக, மேலை நாட்டினர் கூறியுள்ள இலக்கணங்களைத் தான் திருப்பி அஞ்சல் செய்பவராயுள்ளனர். தமிழில் எழுதப்பெற்றுள்ள சிறுகதைகளை ஒப்பு நோக்கிச் சீர்தூக்கி, இலக்கணம் எழுதப் பெற வேண்டும். சிறுகதைகளின் தன்மைகளைக் கொண்ட கழக பாடல்களையும் மேலை நாட்டைப் பின்பற்றி வெளி

வந்த தமிழ்ச் சிறுகதை களையும் ஒப்பு நோக்கிக் தமிழ்ச் சிறுகதை இலக்கணம் தெளிவாக எழுதப் பொறுங்காலம் தமிழன் தன்மானம் மீட்கும் காலமாகும்.

## தனித்தமிழ்ச் சிறுகதைகள்

படைப்பாளன இப்படித்தான் தூயமொழி நடையில் எழுதவேண்டும் எனக்கட்டுப் படுத்துதல் கூடாது எனச்சிலர் கூறுவதுண்டு. இதைவைத்துக் கொண்டு தனித்தமிழில் சிறு கதை எழுதக்கூடாது எனவும் அப்படி எழுதினால் அது சிறு கதையாகவே ஆகாது எனவும் சிலர் கூறுகின்றனர். கட்டுப் படுத்தக் கூடாது என்ற இலக்கணமே இவர்கள் கூறுவது தவறு என மெய்ப்பிக்கப் போதுமானது. மொழி நடையை மட்டுமே வைத்துக் கொண்டு இது சிறுகதையன்று எனக் கூறுதல் குருடர் ஐவர் யானையைத் தடவிப் பார்த்தறிந் ததைப் போன்றதேயாகும்.

சிறுகதைக்கு இலக்கணம் எழுதியவர்கள் மொழி நடையை மட்டுமே அளவு கோலாகக் கொண்டு முடிவு செய்ய வில்லையாதலால் தனித்தமிழ்ச் சிறுகதையைக் கதையன்று எனக் கூறுவது பெருந்தவறாகும்.

''தனித்தமிழில் சிறுகதை எழுதினால் படிப்பவர்க்கு விளங்காது'' என்பதும் ஒரு கூற்று

இதுவும் பொய்யானது, புனையப் பெற்றது, உள் நோக்கங்கொண்டது.

கலப்புத் தமிழில் எழுதப் பெறும் இன்றைய கதைகள் பலவற்றில் வரும் பல ஆங்கிலக் கடுந்தொடர்கள் பட்டம் பெற்றவர்க்கே விளங்கத் தக்கதாக இல்லை.

சிறுகதைகள் ஆழ்ந்து நிறுத்தி ஆராய்ந்து படிப்பதற் குரியவை அல்ல, இதில், எழுதப் பெறும் கருத்துக்கு

முதன்மையில்லை. கூறப் பெறும் நிகழ்ச்சியும் திருப்பமும் முடிவும் கூறப் பெறும் முறையும் முதன்மையானவை.

சிறுகதைகளைப் படிக்கும் போக்கிலேயே அவற்றில் பயன்படுத்தப் பெற்றுள்ள கடுஞ்சொற்களும் கூட நொடி நேரப் பொருள் விளக்கந்தந்து கண்களைத் தாண்டச் செய்து விடுகின்றன.

எனவே, சிறுகதைக்கு மொழி நடை ஒரு தடையன்று. உண்மை இழையோட்டமுள்ள சுவையாகக் கூறப் பெறுகின்ற நிகழ்ச்சிகள் கதைகளாக வெற்றி பெறுகின்றன.

இன்றைய நிலையில் செய்தித் தொடர்புக் கருவிகள் யாவும் பெரும் பாலும் மொழியைப் பற்றிக் கவலைப்படாத, தமிழ்மொழியைக் காட்டிலும் வேற்று மொழிகளை உயர் வாக மதிக்கும் ஒரு கூட்டத்தாரிடம் சிக்கிக் கொண்டுள்ளன. தமிழை உயர்த்தினால் தமக்கு வாழ்வேந்துகள் குறைந்து விடுமோ என்னும் வீண் அச்சத்திற்கு அக்கூட்டம் ஆட்பட்டுள்ளது. இந்நிலை மாறித் தனித்தமிழ்ப் படைப் பிலக்கிய மேன்மையையும் தேவையையும் உணர்ந்து தம் தாளிகைகளில் இத்தகைய படைப்புகளை வெளியிடும் போதே தனித்தமிழ்ப் படைப்பிலக்கியம் வெற்றி பெறும். மக்கள் மனத்தில் இடம் பெறும் இன்றேல், அத்தகைய கருவி களைனைத்தும் தனித்தமிழியக்கம் எவ்வாறேனும் கைப் பற்றி முயலுதல் வேண்டும்.

## தனித்தமிழியக்கமும் சிறுகதையும்

படைப்பிலக்கியத் துறை தனித்தமிழ்த் தந்தை மறை மலையடிகளாரால் வளப்படுத்தப் பெற்ற ஒன்றாகும். பிற்காலத்தில் படைப்பிலக்கியம் தனித்தமிழியக்கத்தவரால் சரியாகக் கவனிக்கப் பெறாமல் போய்விட்டது. சிறுகதை நூல்கள் ஒன்றிரண்டைத் தவிர வெளிவாராமையே இதற்குச்

சான்று. கதை எழுதுவது ஒரு பெரிய திறமையன்று எனவும் யார் வேண்டுமானாலும் கதை எழுதலாம் எனவும் இவ் வியக்கத்தின் ஒரு சிலரால் கருதப்பெற்றது. தனித்தமிழ் இதழ்கள் சிறுகதைகளை வெளியிடுவதில் போதுமான அக்கறை செலுத்தவில்லை. சிறுகதை எழுத்தாளர்கள் எனக் கருதப்பெறும் சிலரே பிற துறையனைத்திலும் தேர்ந்து சிறந்திருப்பதைத் தனித்தமிழ் இயக்கத்தில் காணலாம். தனித்தமிழில் சிறுகதை எழுதியவர்கள் எழுதுகிறவர்கள் அனைவருமே எந்தச் சிறு நன்மையையும் எதிர்பாராமல், தொண்டு செய்யும் செம்மல்கள் எனப் பாராட்டலாம். சிறந்த திறமை மிக்கவர்களும் வெளிப்படுத்தப் பெறவில்லை.

எனினும் தனித்தமிழ்ச் சிறுகதை சிறப்பாக வளர்ந்துள்ளது. குறைந்த கவனம் செலுத்திய நிலையிலே இத் துறை நன்கு வளர்ந்துள்ளது.

## சிறுகதை நூல்கள்

1. பொன். மணிமொழியின் கண்ணீர்த்துளிகள் எனும் நூலும் 2. க. தமிழமல்லன் தொகுத்த 'விருந்து' எனும் நூலும் இதுவரை வெளிவந்தவையாகும். முன்னது 1975 இலும் பின்னது 1983இலும் வந்தவையாகும்.

கண்ணீர்த் துளிகள் ஆசிரியர். பொன். மணிமொழி, வெளியீடு: பெருஞ்சித்திரனார் பதிப்பகம், புதுக்கோட்டை இந்நூலாசிரியர் எழுதிய நான்கு சிறுகதைகளின் தொகுப்பு இந்நூல் இதில் 1. கனவுகள் இனியவை 2. கண்ணீர்த் துளிகள் 3. முற்றுப்புள்ளி 4. நிறையும் குறைகள் எனும் தலைப்பிலான கதைகள் காணப்படுகின்றன. கற்பனை நயமும் நடை நயமும் மிக்க இக்கதைகளில் துன்பியல் இழை யோடுவதைக் காணலாம்,

பொன். மணிமொழியைச் சிறுகதை மாமன்னர் என இப் பதிப்பகம் அறிமுகப்படுத்தியுள்ளது இங்குக் குறிப்பிடத் தக்கது.

விருந்து தொகுப்பாசிரியர், க. தமிழமல்லன், வெளியீடு: தனித்தமிழ்க் கழகம், புதுச்சேரி-605009

எல்லாத்துறைகளையும் தனித்தமிழில் செய்து காட்ட வேண்டும் எனும் கொள்கையால் இந்நூல் வெளியிடப் பெற்றுள்ளது. இதில் தி. நா. அறிவு ஒளி, த. பழமலை, க. தமிழமல்லன், சு. நற்குமரன், ச. குறளேந்தி, த. தமிழரசி, பாவலர் 'கோ' தேவமைந்தன், சக்திப்புயல், அரி, சி. தமிழ் மாறன். செயசீலன் ஆகியோர் எழுதிய பன்னிரண்டு சிறு கதைகள் இடம் பெற்றுள்ளன.

இக்கதைகள் அனைத்தும் நடப்பியல் சார்ந்த குமுகாய வியல் கதைகளாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

நூற்பெயர்: தனித்தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பு, தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு புதுமை, தனித்தமிழ்க் கொள்கையாளர்க்கும் கதைச் சுவைஞர்களுக்கும் சுவை பயக் கும் விருந்து இதில் இடம் பெற்றுள்ள ஒரு சிறுகதையின் பெயரும் 'விருந்து' எனும் கரணியங்களால் 'விருந்து' என இத்தொகுப்பு பெயர் பூண்டது மிகவும் பொருத்தமாகும். ஒரு கதை சிறப்பானதா, சிறப்பற்றதா என்பதைச் சுவைஞர் களும் திறனாயவாளர்களும் கணிக்கின்றனர். அனைவரின் கணிப்பும் ஒருவருடையதுபோல இருக்கவியலாது. எனினும் நடுநிலை இல்லாத உள்நோக்கங்கொண்ட தூவல் தாங்கிகள் எழுதும் போது எழுத்தே பழுதடைந்து இழிந்துவிடுகிறது விரும்பினால் தலைமேல வைத்துக்கொண்டு ஆடுவதும் வெறுத்தால் கீழேபோட்டு மிதிப்பதும் திறனாய்வுக்கலைக்கே இழுக்கைத் தருவதாகும்.

'விருந்து' எனும் இத்தொகுப்பில் உள்ள ஒரு கதை சிக்கலுக்குரியதாகியிருக்கிறது. "மலைவாழ் மக்களின் பழக்கம் விருந்துக்கு வந்தவனிடம் மனைவியும் விருந்தாவாள், இதை விளக்கும் கதையைப் போய் நூல் தலைப்பாக வைக்க வேண்டுமா?"[1] என்பது ஒரு ஆசிரியரின் கேள்வி!

'இப்படிப்பட்ட கதையின் பெயரைத்தான் நூற் பெயராக்க வேண்டும்' என்னும் இலக்கணம் உண்டா? மாறுபட்ட நிகழ்ச்சி ஒரு படைப்பாளரைக் கவர்ந்து அதை வெளிப்படுத்திச் சிறுகதை எழுதுவது தவறானதா? இதனால் குமுகாயம் கெட்டுவிட்டுவிடுமா? குமுகாயத்தின் ஒரு கேடான பழக்கத்தை இது வெளிப்படுத்த உதவுகிறது என்பதை ஏன் மறுக்கவேண்டும்? தனித்தமிழில் எழுதப்பெறும் சிறுகதைகள் வள்ளுவரின் அறத்துப் பாலாகமட்டும்தான் அமைய வேண்டுமா? காமத்துப்பாலை நீக்கிவிடவேண்டுமா?

## பிற சிறுகதைகள்

நூல்கள் பலவாக வராவிடினும் சிறுகதைகள் தனித் தமிழில் அதிகமாக வந்துள்ளன. தனித்தமிழ் இதழ்களும் தனித்தமிழ்க் கொள்கைப் பற்றிலா இதழ்களும் தனித் தமிழ்ச் சிறுகதைகளை வெளியிட்டுள்ளன. தென்மொழி, தமிழ்ச் சிட்டு, தமிழம், கைகாட்டி, வல்லமை, குறளியம், மீட்போலை, தமிழ்ச்சுடர் முதலிய இதழ்களும், பிரசண்ட விகடன், காஞ்சி, தஞ்சை அமுதம்போன்ற இதழ்களும் தனித் தமிழ்ச் சிறுகதைகளை வெளியிட்டுள்ளன. படைப்பிலக்கியங்களைப் பாராட்டும் பண்போ அவற்றைத் திறனாய்ந்து படைப்பினர்களை ஊக்கமூட்டும் பண்போ, புதிய படைப் பாளர்களை அறிமுகப்படுத்தும் முயற்சியோ இவ்விதழ்களுக்குப் போதுமான அளவிலின்மையால் தனித் தமிழன்பர்களின் நல்லாதரவு படைப்பு முயற்சிக்குக் கிட்டாமற்போய்விட்டது.

---

1. எண்பத்தொன்றில் தமிழ் 2. த. ஆ. நி. ப. 1024.

இப்போக்கு அடியோடு மாறி அனைத்தும் தனித் தமிழால் இயலும் எனக்காட்டவும் தனித்தமிழன்பர் மட்டு மன்றி அனைவரும் விரும்பிப் படிக்கும் வகையிலும் படைப்பிலக்கிய வளர்ச்சிக்கு, குறிப்பாகச் சிறுகதை வளர்ச்சிக்குத் தனித்தமிழ் இதழ்கள் முதன்மையாகச் செயற் படவேண்டும்.

## சிறுகதை எழுத்தாளர்

மாரி. அறவாழி, தி.நா. அறிவுஒளி, பொன். மணிமொழி க. தமிழமல்லன், மு. மகிழரசன், அ. பொன்னையன் தஞ்சை எழிலன்டன், த. அன்பழகன், சந்திரலேகா செல்வராசு, பெரு. தமிழ்வேந்தன், தரளமணி, நச்சினார்க்கினியன், வாய்மை இளஞ்சேரன், தமிழவேள், வே. செ. வேலிறையன் முதலிய சிறுகதை எழுத்தாளர்கள் நூல்வாயிலாகவும் இதழ் வாயிலாகவும் பல சிறந்த சிறுகதைகளைப் படைத்துள்ளனர்.

மாரி. அறவாழி தென்மொழியின் தொடக்கக் காலத்தில் பல சிறு கதைகள் எழுதியவர். பின்னர் வளர்ந்து பல சிறு கதைத் தொகுப்புகளும் புதினங்களும் வெளியிட்டுள்ளார். ஆனால் தென்மொழியின் தூயநடையைக் கைவிட்டுவிட்டார் சிறுகதை எழுத்தாளர்கள் பலரும் ஒரே துறையிலன்றிப் பாடல், ஆய்வு முதலிய துறைகளிலும் ஈடுபாடுகொண்டு எழுதிவருபவர் ஆவர், சிலர் தனித்தமிழ் இதழ்களுக்கு மட்டும் தூய நடையில் எழுதுவதும் பிற இதழ்களில் கலப்புத் தமிழ் நடையில் எழுதுவதுமாக வழக்கம் கொண்டுள்ளனர். இது மாறவேண்டும்.

## மாரிஅறவாழியின் சிறுகதைகள்

1959ஆம் ஆண்டிலிருந்தே தென்மொழியில் இவரின் கதைகள் வெளிவந்துள்ளன. பாட்டும் கூத்தும், ஊழ்நகை, சாதிகள் இல்லையடி பாப்பா, யாரை நொந்து கொள்வது? சாலையோரம் போன்ற கதைகள் குறிப்பிடத்தக்கன.

இவற்றில் குமுகாயத்தின் பல்வேறு சிக்கல்கள் கதைப் பொருளாக விளங்குகின்றன. ஏழைக்கிரங்கும் பண்பும், குமுகாயக்கேடுகள் இடித்துரைக்கப்படும் பண்பும் இவற்றில் காணப்படுகின்றன.

'சாதிகள் இல்லையடி பாப்பா' எனப் பாடம்புகட்டும் ஆசிரியை, ஏழை மாணவர் தீண்டிய நீர்க்குழாயைக் கழுவி விட்டு நீர் பிடித்துவராத சிறுமியைக் கடிந்துகொள்ளும் முரண்பாடும், ஏழையரின் சாலையோரத்து வாழ்வு பொருட் காட்சி திறக்கவரும் குடியரசுத் தலைவர்க்காக அழகு படுத்தும் பணியால் பலியாகும் கேடும் படிப்போர் உணர்ந்து இரங்கும் வண்ணம் படைக்கப்பட்டுள்ளன. சிறு கதைகள் இலக்கிய மணம் கமழும் வண்ணம் எழுதப்பெற்றுள்ளன. பெருங்கடுங்கோவின் கலித்தொகைப் பாடல் காட்சி பாட்டும் கூத்தும்' எனும் கதையில் ஒப்பீடாகக் கூறப்பெறுகிறது: வண்ணனையும் இலக்கிய மணத்தைக் காட்டுகிறது. பாடல் அடிகள் சிறுகதைகளில் பயன்படுத்தப் பெறுவதையும் இவர் கதைகளில் காணலாம்.

## தி. நா. அறிவு ஒளியின் சிறுகதைகள்

இவர் 'திண்டிவனத்தான்' எனும் பெயரினும் வேறு பல பெயர்களிலும் நூற்றுக்கணக்கான தனித் தமிழ்ச் சிறு கதைகளை எழுதிக் குவித்துள்ளார். பிரசண்டவிகடன், காஞ்சி, மாலைமுரசு போன்ற இதழ்களிலும் தனித்தமிழ் இதழ்கள் அனைத்திலும் சிறுகதைகளை எழுதியுள்ளார். இவர் சிறுகதையைப் பல பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு வழங்கும் முறையைப் பெரும்பான்மையாகக் கையாளுகிறார்

காதல், குமுகாய ஏற்றத்தாழ்வு வெறுப்பு, தமிழ்மொழி, இனஉணர்வுகள் முதலியன இவரின் கதைப்பொருள்களாக வருகின்றன.

சுடர்க்கொடியுடன் முடிச்சுப்போட்டு எதிர் வீட்டுக்காரி கட்டிய கதையால் வளவன் குடும்பத்தில் ஊடல் வளர்கிறது. எதிர்பாராமல் சுடர்க்கொடியே வந்து புதிரை அவிழ்த்து, பாதுகாப்புக்காக நகையைக் கொடுத்து வைக்க வந்த போது மயக்க நோயால் அவள் வீழ்ந்தாள். அவளைத் தூக்கி நடத்திச் சென்றதால்தான் வளவனை எதிர் வீட்டுக்காரி இகழ்ந்தாள் எனும் உண்மை தெரியவருகிறது. "தென்றலின் தோல்வி"[2] எனும் கதையில் இதனைப் படம்பிடித்துள்ளார் ஆசிரியர்.

தன் கட்சிக்காரன் அல்லாதவனுக்குப் பெண் தரக் கூடா தென்று தங்கையின் காதலைத் தடுக்கிறான். தனக்குப் பிடிக்காத தி.மு.கவும் தன்கட்சி பேராயமும் கூட்டணி அமைத்துக்கொண்ட செய்தி வந்து அவனுக்கு அதிர்ச்சி யளிப்பது "சுரங்கப்பாதை"[3] எனுங்கதையில் கட்சி வெறி யின் பேதைமை அழகாகக் கூறப்பட்டுள்ளது.

தன்னிடம் பணிபுரிகிற அழகி ஒளியிழையைக் காதலிக் கிறான் தமிழ்நம்பி. மணக்கவிரும்புகிறான். இதைத் தெரிவித்தவுடன் அவள் நீண்ட விடுப்பு எடுத்துக்கொள் கிறாள். தேடிச் சென்ற அவனுக்கு வீடு, பெற்றோர், உடன் பிறந்தோர் சூழல்களின் அருவருப்பும் நோய்த்தன்மையும் வெறுப்பு ஏற்படுத்துகின்றன. சொல்லாமல் விரைந்து திரும்பி விடுகிறான். முழுத்தனித் தமிழில் அமைந்த "தேடிவந்த காதலன்"[4] எனும் இச்சிறுகதை பெருவிற்பனை கொண்ட "மாலைமுரசில்" வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

"கண்ணீர்க் கல்வெட்டு"[5] எனும் கதையில், செல்வ மின்மையால் மணக்கவியலாத ஒருத்தி தற்கொலை செய்து

---

2. தமிழம் செப் 1974 3. தமிழம் 4. மாலைமுரசு
5. தஞ்சை அமுதம்

கொள்கிறாள். அவளின் அவலவாழ்வு குறித்து நண்பனுடன் தம்பி உரையாடுவதாகக் கதை அமைந்துள்ளது. சீர், வரிசைக்கு ஆசைப்படும் மாப்பிள்ளையை மறுக்காத பெண் களின் அறியாமை கூறப்படுகிறது.

என் பெண்ணுக்குக் கல்வி தந்து வேலைக்கு அனுப்புவேன். காதலனை மணமுடிப்பேன். இல்லெனில் ஆடவரைக் குறித்துக் கவலைப்படாமல் வாழுமாறு பயிற்றுவேன். எனும் துணிவு நண்பன் வாயிலாக வெளிப் படுத்தப்படுகிறது.

நடிகர் திணறல் மன்னனைப் பார்க்க ஒப்பனை செய்து கொண்டு புறப்பட்ட மனைவி தடுத்தும் கேளாமல் போகத் தான் போவேன் என அடம்பிடித்தாள். என்றுமில்லாமல் அக்குடும்பத்தில் ஊடல் மிக்கு, மனைவி செம்மையான அடி பெற்றாள் எனக்கூறும் ஆண்மகன் எனும் கதை 'கைகாட்டி' யில்[6] வெளிவந்துள்ளது. காலத்தைக் காட்டும் துணிவு மிக்க இக்கதையைப் போல் வேறு இதழ்களில் ஏதேனும் வந்திருக்குமா என்பது ஐயமே!

'காஞ்சி' இதழில் வெளிவந்த "முல்லையின் முறுவல்" எனும் கதை, தன் வீட்டில் நன்னிலையில் வளர்க்கப்பட்ட ஏதிலிக்கு அவன்பால் தன் மகள் உள்ளம் செல்வதறிந்து மண முடித்து வைத்தார் தந்தை. ஆனால் அன்றே, எங்கோ ஓடி விடுகிறான் அவன். ஆண்டுகள் பல கடந்து புரட்சியான அவள் தம்பி, தமக்கைக்கு மணமுடிக்க எண்ணிச்செய்தித் தாளில் மணமகன் தேவை விளம்பரம் போடுகிறான். அதைக் கண்டுவிட்டு ஓடிப்போன செல்வம் மீண்டும் தான் முன்பே மணந்து கொண்ட பெண்ணுடனும் மூன்று குழந்தை களுடனும் வந்து சேர, காத்திருந்த முல்லை முறுவலுடன் உயிர் பிரிந்ததையம் பற்றியது,

---

6. கைகாட்டி:15-1-1972

## பொன். மணிமொழியின் சிறுகதைகள்

'தமிழம்' இதழில் இவர் எழுதிய பல சிறுகதைகள் வெளிவந்தன. துன்பியல் சார்ந்த கதைகள் பலவற்றை இவர் எழுதியுள்ளார். தமிழம் இதழில் எழுதிய 'மணியரசனின் (ஏ) மாற்றம்' 'தண்டனை'[7] ஆகிய கதைகள் குறிப்பிடத் தக்கவை.

மனைவியை இழந்தவன் மணியரசன். தன்குழந்தையுடன் கடற்கரையில் இருந்தபோது தன் மனைவியின் சாயலில் அவள் பெயரையே கொண்ட ஒருத்தியைக் கண்டு காதல் வயப்படுகிறான். தன் குழந்தைக்குத் தாய் வேண்டும் என்பதாக வெளிப்படுத்துகிறான். அவளும் உணர்ச்சிவயப் படாமல் சில நாள் கழித்து மகப்பேறு அற்ற தனக்கு அக்குழந்தையை உரிமையாக்கிக் கொள்ளத் தன் கணவனுடன் வருகிறாள். மணியரசன் பல வகையிலும் ஏமாறுகிறான். இது மணியரசனின் (ஏ) மாற்றம் எனும் கதை வாயிலாகக் கூறப்படுகிறது.

தன் வகுப்புத் தோழியின் செல்வச் செழிப்புக்கு எதிரே அவள் பிறந்த நாள் பண்ணியம் தின்றது போல், கடையில் வாங்கி வந்து தின்னமுயன்று, அவள் வீட்டு நாயினால் தள்ளப்பெற்றதால் அதைக் கல்லால் அடித்துக் கொன்று விடுகிறான் அருளப்பன். விளைவு சீர்திருத்தப்பள்ளி பதினைந்து ஆண்டுகள் அவனை அழைத்துக் கொள்கிறது. வெளிவந்தவன் தொடர்வண்டி மோதலில் இறந்த தன் தந்தைக்காக வந்த 10,000 உருபாவை வீட்டிலிருந்து எடுத்துக் கொண்டு பழிவாங்கச் செல்கிறான். அங்கே, வகுப்புத்தோழி தன் கணவனால் சீர்ப்பணம் வராத குற்றத் திற்காகக் கொண்டுவந்து விடப்படுவதையும் ஏழைமை

---

7. தமிழம்: அக் 1974; மார்ச்சு 1975

அங்குநிலவுவதையும் காண்கிறான். அவள் மறுவாழ்வுக்காகப் பத்தாயிரம் உருபாவையும் அவள் தந்தையிடம் தன் பெயர்க் கூறாமல் கொடுத்துவிடுகிறான். அவன் யார் எனக் கேட்டுக் கேட்டுத்திண்டாடுவதே பழிவாங்குதல், தண்டனை என நினைக்கிறான். இது 'தண்டனை' எனும் சிறுகதை.

## தனித்தமிழ்ச் சிறுகதைகளின் பொதுவான தன்மைகள்

நடை: இச்சிறுகதைகள் பெரும்பாலும் இயற்கையாகவே புனையப்பெற்றுள்ளன. நடைமுறையில் கலப்புத் தமிழ்க் கதைகளே பெருகி வருகின்றன. அவற்றிலிருந்து பல வேறுபாடுகளை இத் தனித்தமிழ்ச் சிறுகதைகள் கொண்டுள்ளன. பிறசொற்கள் கலப்பின்றி அமைந்துள்ளதால் கதைகளின் ஓட்டத்தில் தடையோ, சுவைக்குறைவோ ஏற்படவில்லை. சில கதைகள் அவ்வாறிருந்த போதிலும் எழுதியவர் குறைபாடேயொழிய நடையின் தூய்மையாலன்று என்பதை அவற்றைப் படிப்போர் நன்குணரலாம்.

திருந்திய நடை: தனித்தமிழ்ச் சிறுகதைகளில் பெரும்பாலும் திருத்தமான நடை காணப்படுகிறது. சொற்களும் சொற்றொடர்களும் மிகவும் திருத்தமாகக் காணப்படுகின்றன. புல்தரையில்-புற்றரையில் எனவும் மாப்பிள்ளை - மணப்பிள்ளை எனவும் திருத்தமாகக் காணப்படுகிறது[8] ''நடத்துநரின் குரல், 'சீட்டு சீட்டு' என்று அடிக்கடி ஒலிக்கும், நடத்துநர் வாயிலிருந்து ஒரு சீழ்க்கை ஒலி, அழகு மிக்க ஆடவர் பெண்டிரை ஏற்றிக்கொண்ட பெருமிதத்தில் பேருந்து புறப்பட்டது. 9. சி பேருந்து திண்டுக்கல் நகர்ப் பயணச் சீட்டு ஆய்வாளர் பேருந்து நிலையத்தை அடைந்தது......!''[9]

8. மாரி அறவாழியின் ஊழ்நகை (தென்மொழி 1959)
9. நச்சினார்க்கினியனின் உண்மைசுடும் (தமிழ்ச்சுடர் 1980)

உவமைகளும் உருவகங்களும் நிறைந்த கதைகளையும் நாம் காணமுடிகிறது. இதுவும் தனித்தமிழ்ச் சிறுகதைகளின் ஒரு பண்பாக விளங்குகிறது.

"தரையில் ஊன்றி நிற்கும் அவள்கால் விரல்கள் கண்களாக மாறி என்னையே வெறித்துப் பார்ப்பது போல உணர்ந்தேன் (பக்-19) விடையைப் போட்டுக் கொண்டு கணக்கில் வழி எழுதி இருக்கிறான் (பக் 27) எனும் பொன் மணிமொழியின்[10] நடையும், "தென்றல் தவழும் வீங்கிள வேனிலாய் விளங்கிய அவன் நெஞ்சம் புயல் வீசும் ஊழியாகியது." காதல் மூச்சு முட்டித் திண்டாடித் தெருவில் நின்று கொண்டிருக்கிறது"[11] எனும் தி. நா. அறிவு ஒளியின் நடையும், "இன்றோ நாளையோ மலர்ச்சியுறும் இளம்பெண்ணின் மலர் முகத்தைப் போலக் கீழ்வானத்தின் விளிம்பில், கிளம்பப் போகும் குளிர் திங்களின் ஒளிக்கீற்றுக்கள் ஊசலாடிக் கொண்டிருந்தன,"[12] எனும் மாரி. அறவாழியின் நடையும் இதற்குச் சான்றுகள்.

இவை மட்டுமின்றி இலக்கிய அடிகள் விரவியும் பாடல்களுக்கு ஒப்புமை கூறியும் எழுதப்பட்டுள்ள நடைவகைகளும் உண்டு.

## கொச்சை நடை

தனித்தமிழ்ச் சிறுகதைகளில் ஆங்காங்கு, தேவைக்குத் தக்கவாறு கொச்சை நடையும் கையாளப் பட்டுள்ளது! நடப்பியலை ஒட்டிப்போகும் போக்கின் ஒரு எடுத்துக் காட்டாகவே இக்கூறு திகழ்கிறது.

---

10. கண்ணீர்த் துளிகள்: பொன். மணிமொழி
11. தேடிவந்த காதலன்: தி. நா. அறிவுஒளி: மாலை முரசு
12. யாரை நொந்து கொள்வது: மாரி. அறவாழி (தென்மொழி)

"ஆமா செல்லாயி, என்னமோ விருந்து சோத்துக்குப் போனேன்னியே என்னென்னா போட்டாங்க? பருப்புச்சோறு இருந்திச்சா?" என்று கேட்டாள் அவள்.

"...என் மவன் பருப்புச்சோறெல்லாம் ஏண்டி தொடறான். சும்மா தலை வாழை எலையை விரிச்சி தண்ணி தெளிச்சி வைக்கறாங்கப் பாரு... "[13]

நுட்பம்: இச்சிறுகதைகளில் பல நுட்பங்களும் கையாளப் பெற்றுள்ளன. த. பழமலை எழுதிய 'நினைப்பு'[14] தரளமணி யின் 'தேவி காத்திருக்கிறாள்''[15] பொன். மணிமொழியின் 'மணியரசனின் ஏமாற்றம்'[16] முதலிய கதைகள் நனவோடை முறையில் பெற்றுக் கூறப்பெற்றுள்ளன.

வடிவம்: இக்கதைகளின் வடிவம் பொதுவாகச் சிறப்பாக உள்ளன. பலரால் கூறப்பெறும் இலக்கணத்திற் கேற்பவும் படிக்கச்சுவை தருவனவாகவும் இவை அமைந் துள்ளன. தி. நா. அறிவுஒளி, பொன். மணிமொழி போன்ற சிலரின் சில கதைகளே சற்று நீண்ட வடிவம் பெற்றுள்ளன. நிகழ்ச்சிப் பின்னலில் தெளிவும் சுவையும் இருப்பதனால் இவற்றின் நீளம் குறையாகத் தெரிவதில்லை.

தனித்தமிழ் ஆர்வத்தினால் பிறர் எழுதியுள்ள பாடல் அடிகள் கூட மாற்றப்படும் வழக்கம் மாரி அறவாழியின் கதையில் காணமுடிகிறது. பாரதி பாடல் அடியில் "குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என்பதில் 'பாவம்' நீக்கப்பெற்றுத் 'தீது'[17] என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது.

---

13. விருந்து தொகுப்பு பக் 68
14. விருந்து ,, பக் 23
15. தமிழ்ச்சுடர் 1-8-1980
16. தமிழம் 1974
17. சாதிகள் இல்லையடி பாப்பா (தென்மொழி: 15-3-60)

ஆனால் முயற்சி 'நீதிஉயர்ந்தமதி' எனத்தொடரும் பிற அடிகளில் மேற்கொள்ளப்பெறவில்லை. இத்தகு முயற்சியின் ஆர்வம் பாராட்டத் தக்கது. எனினும் இம்முயற்சி தேவை யற்றதேயாகும்.

தனித்தமிழில் ஏராளமான சிறுகதைகள் வெளி வந்துள்ளன. வெளிவந்துகொண்டும் உள்ளன. ஆய்வாளர்கள் இப்பக்கமும் கண்திறந்து பார்க்கவேண்டும். மூடிக்கொண்டு, வண்ணக் கணக்குக் கூறமுடியாது. தனித்தமிழ்ச் சிறுகதை முயற்சியைப் பார்த்தஒருவர் அதனை மணிப்பவள நடை யுடன் ஒப்பிட்டுக்காட்டுகிறார்.

''பிறமொழி கலந்த மணிப்பிரவாளம் எவ்வாறு பொது மக்களுக்குப் பயன்படாதோ அப்படித்தான் தனித்தமிழ் நடையும்''[18] என அவர் கூறுவது சற்றும் பொருத்தமற்ற கூற்றாகும்.

வழுவாத கற்பொழுக்கத்துடன் வாழும் ஒரு பெண்ணை விலை மகளுடன் ஒப்பிடுவது போன்றது இது. கற்பொழுக்க மாய் வாழும் ஒருத்தி பாராட்ட வேண்டுவது எத்துணைத் தேவையோ அத்துணையளவு தனித்தமிழும் பாராட்டப் பெற வேண்டிய ஒன்றாகும்.

தனித்தமிழில் வந்துள்ள சிறுகதைகள் நடைஎளிமையும் இன்றைய குமுகாயத்திற்குத் தேவையான கருத்துகளும், புரட்சிமனப்பான்மையும், அழகுணர்வும் கொண்டு விளங்கு கின்றன. பிற கதைகளைக் காட்டிலும் சிறப்பாகவே திகழ்கின்றன.

---

18. எண்பத்தொன்றில் தமிழ், உ. த. ஆ. ந. பக்.

# தனித்தமிழில் குழந்தை இலக்கியம்

**சீனு. அரிமாப் பாண்டியன்**
செயலர், தனித்தமிழ்க் கழகம், புதுச்சேரி

> 'மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம்; மற்றுஅவர்
> சொல் கேட்டல் இன்பம் செவிக்கு'

என்ற வள்ளுவர் கூற்றொப்ப வண்டமிழ் நாடும் பண்டை நாள் முதலே பள்ளிப் பறவைகளைப் பைந்தமிழ் மழலைகளைப் போற்றி வளர்ப்பது, புகழ் காட்டி வளர்ப்பது, தமிழ் ஊட்டி வளர்ப்பது, தமிழ் பாட்டில் வளர்ப்பது, பைந்தமிழ் நாட்டின் வரலாறு காட்டுவது தெள்ளிடை விளக்கம்.

> 'தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
> மன்உயிர்க்கு எல்லாம் இனிது'

என்பதற்கேற்ப மண்ணில் மழலைகள் கண்ணைத் திறந்தவுடன், தமிழ் பண்ணை இசைத்து, அதில் வண்ணம் குழைத்து நல்லெண்ணம் சிறக்கச் செய் தமிழச்சிகள் தந்த தாலாட்டுகள், தமிழ் நாட்டின் மழலையின் மொட்டவிழ் முதற் பாட்டுகள்.

தமிழ் நலஞ்சான்ற பாவலர்கள் சான்றோர்களையும் தகைமைசால் தலைவர்களையும், இறைப்பற்றாளர்கள் இறை உருக்களையும் பிள்ளைகளாக உருவகப்படுத்திப் பாடியுள்ளமை, கிள்ளைகளுக்கு அவர்கள் அளித்துள்ள இடத்தின் சிறப்பு வெளிப்படும்.

நறுந்துணர்களின் சிறப்பு நம் தமிழ் நாட்டிடைப் போற்றப் பெற்றது என்றாலும், குழந்தைப் பாடல்கள்

பூட்டப் பெற்றதா? குழந்தைப் பாடல்களின் தேவைகள் உணரப்பட்டதா? என்றால் 'இல்லை' பாவலர்களின் பாவளம் காட்டும் பாவகைகளே தமிழ்ப் பாவலர் சிலரால் பாடப் பெற்றதே அன்றி பாடற்பறவைகளுக்குப் பள்ளிப் பறவைகளுக்கு அது பயன்படும் வகையில் பாடி மகிழும் வகை யில் அமையவில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை

அப்பா! எழுந்திரையா!
 அரசே! எழுந்திரையா!
கொக்கொக்கோ என்று
 கோழி அதோ கூவுது பார்!

என்று; குழந்தைகளுக்காகக் குழந்தைகள் பாடி மகிழ்தற் காக எளிய பாக்கள், ஆம்;

காக்காய்! காக்காய்! பறந்து வா!
 கண்ணுக்கு மைகொண்டு வா!
கோழீ! கோழீ! கூவி வா!
 குழந்தைக்குப் பூக்கொண்டு வா!

என்ற எளிய பாக்கள் பாடிய தோழர் பாமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் காலந்தொட்டே குழந்தைப் பாடல்களுக்குக் கொண்டாட்டம் என்றால் அது மிகையன்று.

இயல்பினில் தோன்றியதாகும்-தமிழ்
இந்நாவ லத்தின்மு தன்மொழி யாகும்
அயலவர் கால்வைக்கு முன்பே-தமிழ்
ஐந்தின் இலக்கணம் கண்டது மாகும்'

என்ற பாவேந்தரின் பாடல்வரிக்களுக்கொப்ப, தொன்மைத் தமிழ் மொழி, புண்மையர் வருகைக்கு முன் உண்மை மொழி யாய் உலகாய்ந்த செந்தமிழாய் இருந்த நிலைமை ஆரியர், இசுலாமியர், களப்பிரர் வருகையால் இகழ்நிலை இணைந்தது

பிறமொழிச் சொற்கள் தமிழில் பிணைந்தது. தனித்தமிழ் என்ற உயர்நிலை தாழ்ந்தது, பிணித்தமிழ் பெருமையாய் வெளி வந்தாய்ந்தது.

இந்த நிலையில், செந்தமிழ்ச் சிறுத்தைகளுக்குப் பாட்டு கள் பாடிடும் பாட்டைகள் போடப்பெற்றன. போடப் பெற்ற பாட்டைகள் பிறமொழிச் சொற்கலப்பால் ஓட்டை களாய்த் திகழ்ந்தது.

அதுபோது "தமிழ் வளர்ச்சிக்கு முதலாவது வேண்டியது கல்லூரிகளில் தமிழின் வழி எல்லாப் பாடங்களும் நடத்தப் பெறுதல் வேண்டும் அலுவலகங்கள் அனைத்திலும் அஞ்சல் போக்கு வரத்துக்குத் தமிழையே பயன்படுத்த வேண்டும். படிப்போர்க்கு நல்லுணர்ச்சியும் நல்லறிவும் எழத்தக்க முறை யில் கதைகள் எழுத வேண்டும். அம்மாஞ்சித் தமிழில் எழுதுதல் ஆகாது. படிப்பவர்க்கு நன்கு புரியும் எளிய செந்தமிழில் நாட்டுபுறச் சொற்கள் வழூஉச் சொற்கள் என்பவை கலவாமல் எழுத வேண்டும்" என்று திருச்சி வானொலிக்கு நேருரை தந்த பாமணி போன்றோர் எளிய பாடல்கள் எழுதினார், இடையிடை வந்த மொழிக் கலப் போடு.

குழந்தைகளுக்காக, குழந்தைச் செல்வம் என்ற எளிய பாடல் நூலை குழந்தைகளே இனிய இசையுடன் பாடி மகிழ்தற்கு ஏற்றாற் போன்று:மழலை மொழி, இயற்கை இன்பம், காட்சி இன்பம், கதைப் பாட்டு போன்ற பகுதி களாக்கிப் பாடி வைத்துள்ளார். அவரின்,

'தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு-அங்கே
துள்ளிக்குதிக்குது கன்றுக்குட்டி'

போன்ற பாடல்கள் பைந்தமிழ்ப் பறவைகள் பாடிப்பறப்பது நாம் இன்றும் பார்த்து மகிழ்வது. யோகி சுத்தானந்த பாரதியார், மயிலை சிவமுத்து, அழ. வள்ளியப்பா,

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, மா. நன்னன், தமிழ வேள், சித்தன் போன்ற இன்னும் பல பாவலர்கள் குழந்தைப் பாடல்கள் பாடியுள்ளார்கள். பாரதியும் குழந்தைக்காகப் பாடியுள்ளார்.

திரைப்படப் பாவலர்கள், பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம் முதல் கண்ணதாசன் வரை பலர் குழந்தைக்காகப் பல எளிய பாடல்களைப் பாடியுள்ளார்கள்.

பிறமொழிச் சொற்களையும் பிறமொழி எழுத்துக்களை யும் தமிழிற் புகுத்தின் தமிழ் நாளடைவில் மலையாளம் போல் வேறொரு திரவிடமொழியாக மாறிவிடும். அதன்பின் அதைத் தமிழென வழங்குவது அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போன்றதே என்று கூறியுள்ள மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் கூற்றொப்ப, தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்களைக் களைந்து, தனித்தமிழில் தனித்தமிழ் நாட்டுச் சிறுவர் களுக்குப் பாட்டுப் பாடி வைத்தத் தனித்தமிழ் பாவலர்கள் பலர், படைப்புகள் பல என்றாலும் தனித்தமிழில் குழந்தை இலக்கியம் என்ற தலைப்பின் கீழ் எனக்குக் கிடைத்த ஒரு சிலரின் படைப்புகள் பற்றியே, ஒரு சிறிது மிக மிகச் சிறிய நோக்கில் பாவலர்களின் பாடல்களில் சில இடங்களை எடுத்துக் காட்டவே முனைந்துள்ளேன் இன்றைய ஆய்வாளர்கள் பெரும்பான்மையோர் தங்களின் அறிவாற்ற லால், சொல்லாற்றலால், புறநிலைத் தாக்கங்களின் சிந்தனை களால் உண்மையையும் பொய்யாய்க் காட்டுகின்ற ஒரு நிலை வளருகின்ற இச்சூழலில்; என்னிலை, குழந்தை இலக்கியப் பாவலர்களின் பாவரிகளைப் பார் தமிழகமே! எனக்காட்டுவ தோடு மட்டும் நிற்பதே.

ஆய்வுக்காக கொண்ட பாவலர்களின் நூல்களை 60 அகவையைத் தாண்டிய எட்டாம் நிலை படித்த முதியவர்

ஒருவரிடம், ஆசிரியர் ஒருவரிடம், கூத்தாடும் கலைஞர் ஒருவரிடம் கொடுத்தும், பாட்டி ஒருவரிடம் பாடிக் காண் பித்தும், பின் பாக்களைப் பற்றி அவர்கள் கூறிய கூற்றின் அடிப்படையில் எழுதிய ஒன்றே இது.

'பூனை இருக்கும் வீட்டில்தான் எலிகள் பேரன் பெயர்த்தி எடுக்குமாம்' என்ற பழமொழிக் கேற்ப பைந்தமிழ் நாட்டில் பைந்தமிழ்ப் பாடல்கள் தவிர்த்து மற்றைய மொழி கலப்புப் பாடல்கள் வளர்ந்து வருவதை பாட்டியின் பழமொழி நன்கு விளக்கியது. ஆம், டாடி, டாடி, பேட்டா, பேட்டா பேட்டி பேட்டி இதைவிட சீரழிவு வேறு என்ன வேண்டும்?

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் தி. பி. 1956இல் (1925) சிறுவர் பாட்டு என்ற தலைப்பில் பாட்டு நூல் ஒன்றை யாத்து வெளியிட்டுள்ளார்கள். இனிய எளிய, இசைப் பாடல்களைக் கொண்ட அந்நூல் கிடைத்தற் கரியதாய் உள்ளது.

'தூக்கத்தில் பிதற்ற நேர்ந்தால்
தூய்தமிழ் பிதற்றும் என்வாய்'

என்றுரைத்த புதுச்சேரிப்பாவலர் தோழர் கனக சுப்புரத் தினம் என்ற பாவேந்தரின் பாடல்கள் ஒவ்வொன்றும் குழந்தைகளின் குருதியோட்டத்தில், மொழி, இனம், நாடு, பொதுமை என்ற நான்கு நிலைகளின் தன்மைகளை ஏற்றும் பாட்டூசி என்றி கூறின் அது மிகையாகாது.

பாவேந்தர் அவர்கள், மற்றையப் பாவலர்களைப் போல் அல்ல அல்ல, மற்றைய பாவலர்களுக்கு வழி காட்டி போல், தமிழ், இயற்கை, அறிவு, தொழில், ஊர்தி, உயிர்கள் தாலாட்டும் துயிலெழுப்பும், சிரிப்பு, சிறுகதைப் பாட்டு என்ற பலவகைத் தலைப்புகளூடே பலவகை நிலைகளையும் பைந்தமிழில் எழில் பட, பைந்தமிழினம் விழிபட, எழுதி யுள்ளார்கள்.

மழலைகளுக்கு மொழியை இயைபு படுத்தும் பாங்கு, படிப்பிற்குப் பாட்டைப் போடும் பாங்கு பல்லாற்றானும் போற்றத்தக்கது முதலில் குழந்தைகளைப் பார்த்து

காலையில் எழுந்து வயிறு கழித்துப்
பாலைப் போலப் பல்லைத் துலக்கிப்
பட்டுப் போல உடம்பு குளித்துச்
சிட்டுப் போலத் தலையை வாரித்
தடுக்கில் குந்தித் தந்ததை உண்டும்
உடம்பை உடுத்திச் சுவடி எடுத்தும்
துள்ளிக் கூடம் விட்டுப்
பள்ளிக் கூடம் பறக்குமாம் கிளியே!

என்று பாடி

'பேசுந்தமிழை நன்றாய்ப்—பேசு மறவாதே
பெற்றதமிழ் நாட்டின்—பெருமை குறைக்காதே'

என்றும் கூறி அதற்கு என்ன செய்ய வேண்டும்? என்று அவர் பாடல் வழிவிளக்கம் தரும் பாடலையும் பாருங்கள்.

கணகண வென்று மணியடித்தது
காது- கேட்கலையா?-பாப்பா
(பெண்மையை முதன்மைப் படுத்தும் பாவலர்)

காது கேட்கலையா?- தம்பி
காது கேட்கலையா?-உன்
கையிற் சுவடிப்பையை எடுக்க
நேரம் வாய்க்கலையா!

தனித்தமிழில் கலகல என்று
தட்டாமல் பேசு-பாப்பா
தட்டாமல் பேசு- தம்பி
தட்டாமல் பேசு -நீ
சாலைஓரம் நடக்க வேண்டும்
ஏங்கே கைவீசு

என்று பள்ளி செல்ல பாப்பா, தம்பிகளை ஆற்றுப்படுத்தும் போதே, அழகுற தனித்தமிழை அறிமுகப் படுத்தும் பாங்கும் அனைவரும் அறிய வேண்டிய ஒன்று. அடுத்து,

நூலைப் படி-சங்கத் தமிழ்
நூலைப் படி-முறைப்படி
நூலைப் படி
காலையிற் படி கடும்பகல் படி
மாலை இரவு பொருள்படும் படி நூலைப் படி!

என்று படிக்கச் செய்து, பின் அதன் பயனையும் அவரே விளக்குவது மேலும் சிறப்பு வாய்ந்ததாக அமைகின்றது. ஆம்

'நீ படி செந்தமிழ் நூலெலாம் ஒன்றாய்
நீ தமிழ்க் குள்ள பகை எல்லாம் வென்றாய்'

என்ற சொல் கேட்க இன்றே நூலைப் படி,

கல்லாத மூடனை
'வா' என்பார்; கற்றவனை
எல்லோரும் 'வாருங்கள்'
என்றழைப்பார்—செல்வம்

படிப்பானைச் சேரும்—எனவே, நூலைப்படி முறைப்படி சங்கத் தமிழ் நூலைப் படி.

படிப்பும் எதற்குப் பகர்வீர் தாத்தா?

கெடுதலை நீக்கித் தமிழக விடுதலை விரைவில் பெறலாம் தம்பியே என்றும், தம்பி,

ஆரானாலும் உன் தமிழே
அமிழ்தென வேண்டும்—தம்பி
பேராசிரியர் புகழ்ந்திட நீ
பேசுதல் வேண்டும், எனவே நூலைப் படி,

ஒழுக்கம் ஓம்ப வேண்டும்—நீர்
உயர் கல்வியாலே
விழுப்பந் தானே தூண்டும்—நம்
விரிந்த உலகில் யாண்டும்.

என்று நெறிப்படுத்தும் முறை அவர்க்கே உரிய கலை. எழுதும் போதும்,

அழகழகாய் எழுது
ஆணிமுத்து போலே
எழுதும் எழுத்துன்றன்
இயல்பைக் காட்டு மன்றோ?

என்று விளக்குவதும் வியன்பேருலகம் அறிய வேண்டிய ஒன்று.

பெண் கல்வியின் முதன்மையை உணர்ந்த பாவேந்தர் தனிப்பாவியம் படைத்திருப்பினும், பறவைகளுக்காகப் பாடிய பாடல்களில் விளிக்கும் போது, மகளே, மகனே என்றும், மேலும் உயர்ந்த நிலைக்கே சென்று, தமிழ்ப் பெண்ணே,

வெண்ணிலவில் இறங்கி நீ
வெற்றி கொடுக்கும் அறிவியல்
தண்டமிழ்ப்பெண் கொண்டதாய்த்
தரையில் புகழும் வண்ணமே

—என்று பாடிய பாடல் வரிகளே பெண்களின் கல்வியைப் போற்றி ஆற்றுப் படுத்தும் இமயத்தின் உச்சி என்றால்—அது உண்மை. 'இன்றுதான் உனைப்பெற்ற பயன்பெற்றேன் நன்று கற்றவள் உன்மகள்"—எனைக்கேட்ட, இன்றுதான்!' என்றப் பாடலும் எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்று.

'விலங்கறுத்தே தமிழ் நாட்டை மீட்க' உடல் வலிவாக்க விளையாடு, சிறந்த விளையாட்டை விளையாடு என்று பாடும் போது,

'இந்தி வேண்டும் என்று சொல்வார் சொல்லை
ஏற்காதே; உடைப்பாய் அவர் பல்லை!
செந்தமிழே வாழ்க என்று பாடு—மிகச்
சிறந்த விளையாட்டை விளையாடு'

என்றும்

'நமதடா இந்த நாவலத் தீவு
நம்தமிழே எங்குமாம்;
தமிழ் நினைக்கையில் பகையை வேரோடு
தாக்கிடத் தூண்டு மடா'

—என்று, இன்று தமிழின் தாழ்நிலையை எண்ணின் என்ன ஆகும் என்பதையும் விளக்கிய பாவேந்தர், அதற்கு அடிப் படை யார் என்பதையும் விளக்கிடுகின்றார்.

'நாடு சுரண்டிடும் பார்ப்பான்—மிக
நல்லவன் என்பது பொய்தம்பி,
கெடுக்கும் பார்ப்பனன் நம்மைத்—தம்பி
கெடுத்துக் கொண்டிருப்பதும் மெய்யே.
பாதியில் வந்த நரிப் பார்ப்பான்—தமிழ்
படைக்குத் தலைவன் என்று சொன்னான்

—என்ற பாடல் வரிகள்.

'காந்தியைக் கொன்றவன் பார்ப்பான்—எங்கள்
கண்ணை அவித்தவன் பார்ப்பான்'

—என்ற பாடல் வரிகள் பார்ப்பனப் பண்பை விரிக்கும் படச் சுருள்கள்.

'தெய்வம் தொழ வேண்டா—அது
தீது செய்யத் தூண்டும்
பொய்பு கல்வார் ஆன்மா—அது
புரட்டர்களின் கோட்டை'

—என்று, பார்ப்பனியத்தை ஒடுக்கும் வழியையும், பசுந்தளிர் களுக்கு உண்மையான 'தமிழினமீட்சி' யாரிடமிருந்து பெற வேண்டும் என்ற உள்ள நிலையையும் விளக்கும் கடமை உணர்வை நாம் கைக்கொள்ள வேண்டிய ஒன்று.

மொழிக்குமுதன்மை, நாட்டின் விடுதலைக்குவித்திடும் தன்மை, விளையாட்டின் பெருமை, பெண் கல்வியின் முதன்மை, பார்ப்பனிய எதிர்ப்புத்தன்மை ஆகிய நிலைகளை விளக்கிய பாவேந்தர் நாட்டில் 'பொதுமை' மலரவேண்டி, மழலைகள் அதை உணர்ந்து, பின் செயல்படவேண்டி, பாடிய பாக்களில் சிலவரிகள்

'பள்ளிக்கூடம் வைத்தவரே!
படிக்கும்படி செய்தவரே!
படித்துவிட்டுத் திரும்பிவந்து
படுக்க வீடு வைத்திரா!' என்றும்

'தொன்னைக் கூழுக் குப்பில்லை
தூங்கக் குடிசைக் கூடியில்லை'—என்றும்
'ஒருதாய் மண்ணின் மக்கள்நாம்
ஒருபால் இன்பம் மற்றொரு பால்
வறுமை என்றால் என்னாகும்.
வருநாள் அதனைப் புகட்டிடும்!' —என்றும்
மகளே! மகனே!

பொதுமை உலகம் வேண்டும்—நீர்
பொய் புரட்டுத் தீயர்
முதுகொடிக்க வேண்டும்—நம்
முன்னேற்ற மிதுவாகும்' —என்றும், அதற்கு

'புரட்சிசெய் புரட்சிசெய் தம்பி
புதிய நல்வாழ்வினைநம்பி
புரட்சியினாலன்றி நாடு
பொதுமை கொள்ளாதுயர்பீடு!' —என்றும்

'புத்துலகம் காண்போம்
பாங்கமைக்கும் பொதுவுடமை
பண்பனைத்தும் பூண்போம்' —என்றும்

புத்துணர்வு பெறுவதெந்நாள்? புரட்சிக்குயிர்
தருவதெந்நாள்
புயலாக எழுவதெந்நாள் புரட்டுலகைத்
தீர்ப்பதெந்நாள்!
புத்துலகுப் பொதுவுடைமை புதுக்குவதும் நாள்
எந்நாள்?
புரட்டுமுத லாளியத்தைப் போக்கிடும் நாள்
எந்நாளோ?

என்றும் பாடிய பாடல் வரிகள் பொதுமைப் பாதை வரிகளாகும்.

பாவேந்தர், வெளிப்படையாக, இப்படி இந்தியை, பார்ப்பனியத்தைத் தாக்கலாமா? அதைப் பசுந்தளிர்களுக்குப் பாக்களாக்கிப் போடலாமா? பொதுமைச் சிறப்பை புகட்டும் அகவை இதுதானா? கடவுள் இல்லை என்று கூறும் பாடல்களும் தேவைதானா? இப்போதே இளம் உள்ளத்தே ஏதோ ஒரு இனத்தின் மீது காழ்ப்புணர்ச்சியை வளர்க்காதா? என்ற வினாக்கள் எழும்.

ஒருமைப்பாடு என்ற பெயரால், சென்ற 30 ஆண்டுகளில், ஒருமொழிக்காக, இடை வந்து பிழை மொழிக்காக, இந்தியெனும் வடமொழிக்காக உருவா 700 கோடிக்கு அதிகமாக இந்தியஅரசு செலவிட்டிருக்கின்றது எனக் கணக்கிடுகின்றனர் 42,000 சொற்களும், சொற்றொடர்களும் இந்தியில் புதிதாக உருவாக்கப் பெற்றிருக்கின்றன. எந்த ஒரு நாடும் உலகில் ஒருமைப்பாடு பேசிக்கொண்டே ஒரு மொழி வளர்ச்சிக்காக இவ்வளவு தொகையை, மற்றைய இனங்களை ஏய்த்துவிட்டு செலவிட்டதில்லை. 19 தேசிய இனங்களின்மேல் இந்தி வல்லாண்மை செலுத்தும் வேறுஒரு மக்களாட்சி நாடு உலக மட்டத்தில் இல்லை. அப்படியென்றால் பாவேந்தரின் பாடல்கள்........

பாவேந்தரைப் போன்று, குழந்தைகளுக்காக இனிய எளிய பாடல்கள் பாடியுள்ள வாணிதாசன். அவர்களின் 'குழந்தை இலக்கியம்' 75 பாடல்களைக் கொண்டட். 'இனிக்கும் பாட்டு'ம் இளந்தளிர்களுக்கு ஏற்ற பாதுடு 'தனித்தமிழ் போல இனிப்புவேறில்லை! என்று புதிய கொன்றை வேய்ந்தோனில் கூவிய, 'தூய தமிழ்ப்படி' என்று புதிய ஆத்தி சூடியில் கூறியபாங்கினை, தனித்தமிழ்ப் பற்றினைப் பள்ளிப்பிள்ளைகளுக்குப் பாய்ச்சிடும் பாவலரின் பாங்கு மொழித்தூய்மைப் பற்றை நன்கு விளக்கும்.

பூமியினில் தனித்தமி ழாலே
பூரித்திடும் நம்மிரு தோளே! என்றும்
ஆரியத்தின் கலப்பத னாலே
அடங்கியதே தமிழ் புவிமேலே!

என்றும் கிள்ளைகளுக்கு அன்றைய, இன்றைய நம் நிலைகளை ஆடியாய்க் காட்டுவிக்கும் பாட்டுகளை ஆக்கிப் போந்த பாவலர்,

'வாடா! வாடா! கண்ணு
வாயில் என்னடா மண்ணு?
சோறு வாங்கி உண்ணு.'

'சின்னத்தம்பி சிரிப்பைப் போலச்
செடியில் முல்லை பூத்ததே! வீட்டுச்
செடியில் முல்லை பூத்ததே!'

'தலைசீவிப் பள்ளிக்கே ஓடு!—நல்
தங்கப் பதுமையாம் தோழர்களோடு!
விலையில்லா மெய்ப்பொருள் கல்வி!—அதை
விரும்பிப் படித்தால் அறிவுண்டாம் செல்வி!

என எளிய பாடல்களை எம்தமிழ் மழலைகளுக்குப் பாமலர்களாக்கி மகிழ்ந்தார்,

தாய்மொழியே தமிழ்மொழியாம்! கண்டாய்— அதைத்
தட்டாமல் நீ படிப்பாய் நன்றாய்!

என்று பாடிய பாவலர் கட்டாயக் கல்வியையும் வலியுறுத்தியுள்ளார்.

சேருவோம் தமிழர்கள் யாவரும் ஒன்றே!
தெருவெலாம் விடுதலை முழக்குவோம் இன்றே!

என்றும்

'பாட்டாளி முதலாளி யாவரும் ஒன்றே
பங்கிட்டுச் சரிபாதி அடைகுவம் நன்றே'

என்றும் பாடிய பாவலரின் பாடல் வரிகள் மழலைகளுக்கு விளக்கிடும் கருத்தினைக் காட்டவும் வேண்டுமோ!

பெருஞ்சித்திரனார் படைப்புகள் அனைத்தும் தனித் தமிழே. இவரின் குழந்தைப் பாடல்களின் தொகுப்பாகிய 'பள்ளிப் பறவைகள்', அள்ளி விழுங்கிட விழையும் அதியமான் ஔவைக்கு ஈந்த அருநெல்லிக் கனிகள். இவரின் பள்ளிப் பறவைகளின் முதற்பகுதி குஞ்சுகளுக்கும் இரண்டாம் பகுதி பறவைகளுக்கும் மூன்றாம் பகுதி மணி மொழி மாலையாகவும் பகுத்துப் பாடிடும் பறவைகளுக்குக் கொடுத்துள்ளார்.

அம்மா, குழந்தை இங்கே வா, பள்ளிக்கூடம் திறந்தது, இடது பக்கம் நடந்து போ, மறந்து போன பாட்டை எல்லாம், படித்து மடமை தள்ளலாம், திருக்குறள் அறிவு வேண்டும் என்று தலைப்புகளைக்கொண்டே தகுமுறையில் விளக்கிடும் வகையில் குஞ்சுகளுக்கு முதற்பகுதி அமைத்துள்ளமை அழகுக்கூடு. இவரும் பாவேந்தரின் பாடல்களைப் போன்று உள்ளத் தூய்மை, வண்ணங்கள், பறவைகள், விலங்குகள், இயற்கை போன்றவற்றைக் காட்டி, எழிற்றமிழ்ச் சிட்டுகளுக்கு இனிக்கும் நல்ல கருத்துகளைப் பாட்டில் குழைத்துக் கொடுக்கின்றார்.

'பந்தைத் தூக்கிப் போடு
பசிக்கப் பசிக்க ஆடு
மூச்சைப் பிடித்துப் பழகு
முகத்தில் தோன்றும் அழகு' போன்ற எளிய இனிய நடைப்பாக்கள் இளந்தளிர்களின் உள்ளத்தில் பூக்கும் பூக்கள்.

முதற்பகுதியின் இறுதிப் பாட்டு 'தூங்காயோ பாப்பா' என்பதாகும் அதில்,

'கனியோ கதுப்போ உன்கன்னம்?
சற்பனைக் கனவோ உன்எண்ணம்?
பனிதோய் தாமரை இதழோ—உன்
பவளச் செவ்வாய்? தேன்கிண்ணம்!
நெற்றித் துண்டோ? பிறைநுதலோ?
நெடுங்கூர் மூக்கோ? கிளியலகோ?
சுற்றிச் சுழலும் விழி, வண்டோ?
சூரிய முகமோ? பூச்செண்டோ?

இன்னும் இப்பாடல்முழுதும் பரவிக் கிடக்கும் உருவகம், குழந்தைகள் உள்ளத்தை ஈர்த்துஇசைப்படுத்தும், திண்ணம். சூரியனுக்கு முகத்தைச் சுட்டியது பெருஞ்சித்திரனாரின் தனித்தன்மையே.

இரண்டாவது பகுதி பறவைகளுக்கு என்ற தலைப்பில் எழுதம்பி! என்று எழச்செய்திடும் முதல் பாடல் அமைத் துள்ள அழகை, அமைப்பை எண்ணி மகிழலாம் எழுந்த பின் தமிழ்த்தாயைத் தொழு, பின் தமிழ்க்கும்மி கொட்டுங் கடி என்று தமிழ்க் கோதையர்க்குக் கட்டளை இட்டு,

இயற்கை என்பதோ இணையிலாக் கல்விநூல்!
உலகம் என்பதோ விரிந்த சுவடி! என்றும்
'பள்ளிக்குத் தாழ்ப்பாள் உண்டு!

கல்விக்குத் தாழ்ப்பாள் இல்லை கண்மணியே! —என்றும் காட்டுவித்து ஊனையும் உயிரையும் வளர்ப்பது கல்வியே எனவே தேனெனும் அறிவைத் திரட்டுக தம்பி என்றும் கூறும் பாவலரின் பாடல்கள் பறவைகளின் தேடல்களுக் கேற்ற தீனிகள்.

'பன்மொழி யறிவதும் தவறிலை; எனினும்
இன்புறு வாழ்விற் கிருமொழி போதுமே'

என இருமொழிக் கொள்கையை 'ஈங்கிரண்டு மொழிகள் போதும் எண்ணமெலாம் ஓங்கும்' என்ற பாவேந்தரைப் போன்றுபாடியுள்ளமை பைந்தமிழ்ப் பயிர்களுக்கு நல்ல பயன் உரமாகும்.

தம்பி, நீ புதிய தமிழன், தமிழத் தம்பியே உலகைத் திருத்தடா, என்ற பாடல்களில் அவர் காட்டும் பொதுமைக் கருத்துகள், புரட்சிவேட்டுக்கள். (எ-டு)

'உழைத்துழைத் தொருவன் ஓடாய்ப் போவதும்
உழைப்பிலா தொருவன் உண்டே உருள்வதும்
எப்படிச் சரியென ஏற்பது தம்பி!'

'ஒருவர் பசித்திட ஒருவர் உண்கிறோம்!
ஒருவர் அம்மணம்! ஒருவர்க்குப் பட்டுடை!'

அறிவுப் புரட்சி செய்து, பேய்மையை வீழ்த்தி முன்னேறு; முன் னேறு! என்றும் பாடிய பாடல்கள் வாழ்க்கைப் பாடங்கள்.

மூன்றாம் பகுதி மணிமொழிமாலையில், தமிழ் படித்தால் வாழ்வு புதுமை பெறும், உயர்வே கருதுக, நற்பண்புகள், கனிந்து உதவுங்கள், அயர்வு கொள்ளாதே பாடல்கள் பறவைகளுக்கு மட்டுமல்ல பெரியவர்களும் பின்பற்ற வேண்டிய பெரும் பாட்டைகள் என்றால் அது மிகை அன்று. எளிய நடை, தெளிந்த ஓட்டம், தெள்ளிய கருத்துக்

கோவை, அத்தகையயூடே மொழி இனம், நாடு, சாதிஒழிப்பு பொதுமை போன்றவைகளைக் காட்டும் பாங்கு, தனித் தமிழ்ப் பாவலரின் தனித்தன்மையை, மென்மையைத் திண்மையைக் காட்டுவதாய் உள்ளது.

ம. இலெ. தங்கப்பா அவர்களின் மழலைப் பூக்கள். மழலைகளுக்கு மட்டற்ற மகிழ்ச்சிப் பூக்களை அள்ளி வழங்கிடச் செய்திடும் என்றால், அது உண்மை' ஒவ்வொன்றும் குழந்தைக்காக, குழந்தையாக மாறி நின்று பாடியிருக்கும் பாடல்கள். பன்றி, நரி, ஆந்தை, பூரான். கம்பளிப் பூச்சி போன்றவைகளைப் பற்றிய பாடல்கள் மற்றவர்களின்று மாறுபட்டவை. மழலைகளின் மகிழ்ச்சிக் காகவே பூத்திருக்கும் மழலைப் பூக்கள், மழலைகளின் மன உணர்வுகளை உணர்ந்து, மகிழ்ந்து பாடிடச் செய்திடும் பாடல்கள். அறிவுரை வழங்குகாது குழந்தைகளின் மன நிலைக்கேற்பப் பாடப் பெற்றப் பாடல்கள்

திமுக்கத் தக்கா திமுக்குத் தக்கா
திமுக்கத் தக்காடி
சின்ன பாட்டி தோட்டத்திலே
சிவப்புத் தக்காளி! —நல்ல காட்டாகும்.

இனமானப் பாவலன், எழுச்சிமிகு பாவலன், தனித்தமிழ் வளர்ச்சிக்கு அயராது வளையாது, முயற்சி வினையாற்றும் உண்மையன், தரங்கை, பன்னீர்ச்செல்வன் தனித்தமிழ் மொழிக்குப் படைத்த முதல் படைப்பு, மழலைகளுக்காகப் படைக்கப்பெற்ற தனித்தமிழ்ப் பாப்பொழிவு, நற்பத்திரண்டு பாக்களைக் கொண்ட 'நறுந்துணர்' நற்றமிழ்ச் செல்வங்கள் போற்றிப் பாதுகாத்துப் பின்பற்றிட வேண்டிய ஒன்று. எதுகை மோனைச் சிறப்பு வாய்ந்த இவரது பாடல்கள் அன்னைமொழி மேன்மைக்கு எனவே அமைந்துள்ளன.

'கண்ணான தாய்மொழியைக் காக்க வாடா
கருத்தாழ இலக்கியங்கள் ஆக்க வாடா
எண்ணாத துறைநூற்கள் இயற்றவாடா
இருப்பவற்றைத் தனித்தமிழில் பயிற்றவாடா

பாடல் வரிகள் அவரது தனித்தமிழ்ப் பற்றைப் படம் பிடித்துக் காட்டும்.

'அடிமையும் வேண்டாம் ஆண்டையும் வேண்டாம்
அழகுத் தமி ழன்றிமொழி வேறுவேண்டாம்
குடிமைத் தமிழ்நெறிக் குமுகாயம் வேண்டும்
சொள்ளும் வரிப்பணம் நமதாகல் வேண்டும்'

இதிலுள்ள கருத்துப் பொழிவை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்; பாவலரின் பார்வையும் பாவேந்தரின் பார்வையாக இருப்பதை நன்கு உணரலாம்.

'உள்ளம் ஊன்றிப் படியுங்கள்—ஓங்குந் தமிழ்ப்பால் குடியுங்கள்' எனப்பறவைகளை ஆற்றுப் படுத்தும் இவரது பாட்டுக்களில் போற்றப்பட வேண்டிய ஒன்று, தனித்தமிழ்ச் சொற்களை, குழவிபக்குதி பாடல்களில் குழைத்துக் கொடுத்திருப்பது ஆம், தூவல், சுறவம், கணியம், அணிகம், மிதிவண்டி, பேருந்து, கரட்டுந்து, துள்ளுந்து, சரக்குந்து, மகிழுந்து, பகடி, நிமையம், கரணியம், கணக்குப்பொறி, கையூட்டு-போன்ற எண்ணிறைந்த சொற்கள் எங்கும் விரவிக் கிடப்பதைக் காணலாம். மழலைகளைப் பார்த்து,

'நாற்றுப் பருவம் இப்பருவம்-கல்வி
நயந்து கற்கும் பொற்பருவம்',

எனவே நன்கு கற்றுத் 'தமிழ்காக்கும் உணர்வுடனே துள்ளி வாடா' 'ஓடும்குருதி தமிழடா...மாற்றி உரைப்போர் முகத்தில் உமிழடா; நாடும் விழிபொற்; சிமிழடா... தமிழ் நாடே உயர்கென இமிழடா; சாதிப்பிரிவை நீக்கடா;... பொய்ச் சமயச் சழக்கைப் போக்கடா; ஓதி ஒருமை ஊக்கடா,... இன

உறவை நெஞ்சில் தேக்கடா; என்றும், மேலும் உன்னைத் தமிழ்க்கே வழங்கடா; ... நாடே உயர்க என்றே முழங்கடா! என்றும், உள்ளாடும் உணர்வை மழலை உறவாட வைத்துள்ளமை உணர வேண்டிய ஒன்று.

'உழைக்க விழையா நாடு-பொய்
ஊழை நம்பும் நாடு,
தழைக்கத் தயங்கும் நாடு-பிறர்
தாழ்த்த மகிழும் நாடு!'
'பாட்டெழில் நாடும் சுவையாட்டம்-மூடப்
பார்ப்பினைத் தேடும் நவையாட்டம்
பார்ப்பினைத் தேடும் நவையாட்டம்

போன்ற பாடல்கள் அத்தனையும் எளிய முறையில், உயரிய கருத்துக்களை உயிராக்கியுள்ளார். 'நறுந்துணர்' தனித் தமிழ்ச் சொற் செறிவுமிக்க அரிய, தமிழ்ச் சிறுவர்களின் கையிலிருக்க வேண்டிய கருவிகளில் ஒன்று.

அரிமதிதென்னகன் அவர்களின் புரட்சி மழலைப் பூக்கள் எளிய நடையில், மழலைகள் விழைந்து பாடும் வகையில் அமைந்துள்ள இருபத்தெட்டுப் பாக்களின் தொகுப்பே யாகும்.

'சேற்றைச் சோற்றில் சேர்ப்பாயா?
செந்தமிழ்ச் சோற்றில் பிறமொழி ஏன்?
'புட்பம்' எனும்சொல் புகுந்திடு மேல்
'பூ'எனும் சொல்தான் போகாதோ?—

தனித்தமிழ்ச் சிறப்பினை தளிர்களுக்குக் காட்டும் பாங்கே தனி மிடுக்கு.

குறளை, பெரியாரை, அண்ணாவை, பாவேந்தரை அறிமுகப்படுத்தும் இவர் அடுத்து,

ஆவி பறிக்குமே சாதி—அதை
அழிக்க ஓடுவாய் மோதி

—என முல்லைகளுக்கு அள்ளித் தரும் பாடல் வரிகள் எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்று.

'இசை பட வாழ, ஏழைக்குதவு, முருங்கை போல்' என்று பாடுதலும் 'ஏட்டுக்கல்வி, தொழிற்கல்வி-வாழ்வில் இரண்டும் இலையேல் பெருந்தோல்வி' எனக் குழந்தைகளை ஆற்றுப் படுத்தும் போக்கும் புரட்சி மழலைப் பூக்களின் சிறப்பே யாகும்.

ப. அருளி அவர்களின் 'நிறைந்தேன்' எனும் பாத்தொகையில் மழலைகளைக் கைவீசச் செய்து, சாய்ந் தாட வைத்து, நிலவைக் கேட்கும் குழந்தைக்கு, தந்தை கூறும் விடையாக, பகுத்தறிவு, அறிவியல் கருத்துகளை அழகாக எடுத்துக் கூறி, விளையாடச் செய்திடும் பாடல்கள் பயன்கனிகள். தாய் மகனை நோக்கிப் பாடியதாக அமைந் துள்ள பாடலில்.

'நெறியெலாந் தறிகெடப் பெருந்தூக்கம் வாய்ந்து
நிலைகெடுந் தமிழிரின் நினைவேந்து, ஏய்ந்து!'

என்ற பர்டலில் இன்றைய தமிழரின் தமிழகத்தின் தாழ் நிலைகளை எடுத்துக்காட்டி, எதிர் காலத்தில் விடிவிளக்காய் மழலைகள் மாறிட அமைத்திட்ட பாடல் அதுவாக எண்ணத் தோன்றுகின்றது; வீட்டுப்புலி!...தலைப்பில் பூனையின் செயல்களைப் படம் பிடித்துக் காட்டும் பாங்கும் போற்றுதற் குரியது.

வாழிய! வாழிய! வாழியவே!
வாழிய நந்தமிழ் வாழியவே!
வாழிய தமிழ்நிலம் வாழியவே!
வாழிய தமிழவர் வாழியவே!
வாழிய வாழிய வாழியவே!

எனத் தமிழ்க் குருத்துகள் பாட, உயிர் வரிசையில் தமிழ்சிறப் பினைப் பண்பினைக் காட்டிய பாங்கும் பாராட்டுதற்குரியது

சினு. அரிகிருட்டினனின் 'பாடற் பறவைகள்'. முப்பத்தொரு பாடல்களைக் கொண்டது. பாடல்கள் அனைத்தும் கல்வியின் பெருமை, தமிழின் பெருமை, தமிழைக் காத்திடும் முறைமை ஈகைத்தன்மை, தமிழ் நாட்டின் வளமை, உடலோம்பலின் முறைமை, அனைத்தும் எளிய மென்மைப் பாடல்களாய் ஆக்கித் தந்துள்ளமை அருமை.

பறவை பறக்குதடா வானில்
பறவை பறக்குதடா
தாழ்வு உயர்ச்சியுண்டோ?—தாக்கும்
சாதி மதங்களுண்டோ?
கலப்பு மொழிகளுண்டோ?—வலியத்
திணிக்கும் நிலைகளுண்டோ?—

என்ற பாடலே பலவகைக் கருத்துக்களின் வெளிப்பாட்டைக் காட்டுவதாக அமைந்துள்ளது

'அறிவியல் பூக்கள்' அள்ளி வழங்கிய ஆ. கோவிந்தராசலு, நூல் முழுதும், இருபத்தைந்து பாடல்களிலும் அறிவியல் தொடர்பான கருத்துக்களையே கட்டுவித்துக் காட்டுவது சிறப்புடைத்த செயலாகும். ஏ. வி. எம். இன் பரிசு பெற்ற இந்நூலின் பாடல்கள் அனைத்தும் அறிவியல் தேன் ஊற்று.

தமிழகத்தில் எண்ணற்ற பாவலர்கள் தனித்தமிழில் பாவிசைத்துள்ள பாடல்கள் பெரும் பகுதி, பகுத்தறிவு, மொழி, இன, நாட்டு உணர்வு, பொதுமை தொடர்பாகவே பாடிவருகின்றனர்.

பாவேந்தர், வாணிதாசன், பெருஞ்சித்திரனார் தங்கப்பா, பன்னீர்ச்செல்வன், அரிமதி தென்னகன், அருளி, அரிகிருட்டினன் போன்றவர்களின் பாடல்கள், மொழி, இனம், நாடு, கல்வி, பெண்கல்வி, பொதுமை போன்ற அடிப்படைக் கருத்துக்களையே கொண்டதாக அமைந்துள்ளதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒருமைப்பாடு என்ற பெயரால் அருமைத்

தமிழ் மொழி இனம், நாடு அழிக்கப் படுவதைப் பார்க்கின்ற தமிழ்ப் பாவலனின் தமிழ்ச்சிட்டுகளுக்குத் தரும் பாவெலாம் இப்படித்தானே அமையும்? சரி தமிழ்ச்சிட்டுகளுக்கு இவர்களைப் போன்றோர் தரும் பாட்டுகள் சென்றடைந்துள்ளனவா? என்ற வினா எழுமேயானால் 'இல்லை' என்ற விடையே கிடைக்கும். ஏன்? தமிழ் நாட்டில் தமிழரி மாக்களின் ஒலியை அழித்திடச் செய்யும் நரிமாக்களின் கூட்டொலி, திரைப்படம், தாளிகைகள் போன்றவற்றின் துணையோடு அவர்கள் போடும் ஆட்டம், அவர்களுக்குத் துணைபோகும் அரசியல் கூட்டம் அனைத்தும் அரிமாககளின் ஆற்றலை அருந்தமிழினத்தை அழிப்பதை அனைவரும் அறியவேண்டிய ஒன்று.

குழந்தை இலக்கியம் என்ற தலைப்பில், குழந்தைகள் பாடும் பாடல்கள் குழந்தைக்காகப் பாடப்பெற்ற பாடல்கள் என்று வகைப் படுத்திப் பார்க்காமல், பாவலர்களின பாக்களில் தனித்தமிழ்ச் சொற்கள் எத்தனை, வடமொழிச் சொற்கள் எத்தனை என்று பட்டியல் போட்டுக் காட்டாமல், குறைகளைச் சுட்டாமல், பார்ப்பனியத்தைத் தாங்கிப் பிடிக்காமல் எழுதப்பெற்றுள்ள இது என்ன ஆய்வு? என்றவினா எழும் உள்ளம் கொண்டோர் எண்ணிறைந்தோர் உண்டு. என் செய்வது? என் நோக்கு சிறு நோக்கு

நற்றமிழ் நாற்றங்கால்களுக்கு மேற்காட்டப் பெற்ற பாவலர்களின் பாட்டுகள் விரைந்து தொடர்ந்து சென்றடையுமேயானால் தமிழின, மொழி, நில மீட்சி விரைவில் ஏற்படும் என்பது திண்ணம.

மொழி இன உணர்வுப் பாடல்கள் பரவுமா? பைந்தமிழ் நாடு பெருமை அடையுமா? மொழி இனநில மீட்சி ஏற்படுமா?

தமிழகத்தில் நாம் பிறந்தோம்
தமிழர்களாய் வாழ்வோம்
தமிழினத்தில் நாம் பிறந்தோம—
தமிழ் மொழிக்காய் வாழ்வோம்.

# தனித்தமிழ்க் கழக வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | விருந்து (சிறுகதைத் தொகுப்பு) | 5 00 |
| 2. | புதுச்சேரி அரசு தமிழ் வளர்ச்சித்துறை அமைக்க வேண்டும் | 1 00 |
| 3. | தனித்தமிழ் வளர்ச்சி | 8 00 |
| 4. | தனித்தமிழ்ப் படைப்பாய்வு | 8 50 |
| 5. | தமிழ்ப்பகைவன் கிரன் தமிழ் மேடையில் பேசுவதா? | 0 50 |
| 6. | தனித்தமிழ் எழுத்தாளர் அகரமுதலி | 1 50 |
| 7, | தனித்தமிழ் இலக்கிய மாநாட்டுச் சிறப்பு மலர் | 3 00 |

கிடைக்குமிடம்:

**தனித்தமிழ்க் கழகம்**

தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-605 009